www.padippakam.com

JUDE

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஜூன்.01–07,1997

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 207

## மாறப்போகும் சமர் விதிகள்



## வடக்கு – கிழக்கு களம்

## துண்டாடலும் ஊடுருவலும்



ராஜேஸ்குமார்

புதிய திக் திக்

## தொடர் ஆரம்பம்

## திரையுலக இரகசியங்கள்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## இரட்டை வேடம் தேவையா?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
வன்னிப் படை நடவடிக்கை
தரைப்பாதை திறப்புக்கான
முயற்சி என்று
அறிவித்தது அரசாங்கம்!
தனது உள்நோக்கங்களை
அரசாங்கம் அப்படியே
உரித்துவைக்கும் என்று
எதிர்பார்ப்பது இயலாது!
தமது அனுபவத்தின்படி
அந்த உள்நோக்கங்களை
புரிந்துகொண்டு
அதற்கேற்ப தமது
நிலைப்பாடுகளை முன்வைப்பதே
தமிழ்க் கட்சிகளின் கடமை!
துரதிஷ்டவசமாக
தமிழ்க் கட்சிகள்
தூரப்பார்வையை இழந்துவிட்டன!
தமிழ் மக்களுக்கு
என்ன கிடைக்கும்
என்பதைவிடவும்
தங்களுக்கு என்ன கிடைக்கும்
என்ற குறும்பார்வைக்குள்
தம்மைச் சுருக்கிக் கொண்டன!
தரைப்பாதை திறந்தால்
அது ஒரு வரப்பிரசாதம்
என்று கூட்டணியும்
தமிழ்க் கட்சிகள் சிலவும் கூறியுள்ளன!
சுருக்கமாகச் சொன்னால்
வன்னி நடவடிக்கைக்கு
அரசு கூறும் காரணத்தை
ஆமோதித்து உரப்படுத்தியுள்ளன!
தமிழ்க் கட்சிகளின் பாராட்டுகளுக்கு
பலத்த வரவேற்பும்
அக் கட்சிகளின் விமர்சனங்களுக்கு
பலத்த அலட்சியமுமே
அரசின் பதிலாக இருக்கிறது!
ஏற்கனவே திறந்துகிடக்கும்
தரைப்பாதை ஊடாக
வவுனியா வந்த மக்கள்
முகாம்களுக்குள் கிடக்கிறார்கள்!
தமிழ்க் கட்சிகளும்
தொண்டைவரளும் அளவுக்கு
வேண்டுகோள் விடுத்துப் பார்த்தன!
முகாம் கதவுகள் திறக்கவில்லை!
வவுனியா-மன்னார்
தரைப்பாதை திறக்கப்பட்டும்கூட
மன்னார் மக்களுக்கான
போக்குவரத்து கெடுபிடிகள்
இன்னமும் தொடர்கின்றன!
யாழ்ப்பாணத்திற்குள்கூட
ஒரு பகுதியிலிருந்து
இன்னொரு பகுதிக்கு செல்ல
தடை பல தாண்டவேண்டும்!
இந் நிலையில்
புதிய தரைப்பாதை திறப்பு
கெடுபிடிகள் இல்லாத
பயணத்திற்கு உத்தரவாதமாகுமா?
இத்தனை உயிரிழப்புக்கள்
அழிவுகள்-அவலங்கள்
என்று கொடுக்கப்படும்
விலையோடு ஒப்பிட்டால்
தரைப்பாதை திறப்பு
அவற்றுக்கு ஈடாகுமா?
முதல் கட்ட நடவடிக்கையில்
இரு தரப்பிலுமாக
பல நூறுபேர் பலியாகி, காயமாகி
குருதி கொப்பளித்தது!
இன்னமும் போர் தொடர்கையில்
இருதரப்பு இழப்பும்
மேலும் பயங்கரமாக இருக்கும்!
எத்தனை இழப்புக்கும்
தயாரான நிலையில் அரசு
வியூகம் வகுத்திருப்பது
தரைப்பாதை திறப்புக்காக
மட்டுமே என்று நினைப்பது
சுத்த அபத்தம்!
அரசுக்கு அந்தக் கோஷம்
தனது இராணுவ நடவடிக்கைக்கு
அரசியல் நியாயம் கற்பிக்க
அவசியமாக இருக்கலாம்!
ஆனால் தமிழ்க் கட்சிகளுக்கும்
அந்த அவசியம் ஏன்?
போர் நிறுத்தப் பிரசாரமும்
செய்து கொண்டு
போருக்கும்-அந்த
போரின் விளைவுகளாக
சொல்லப்படும் விடயங்களுக்கு
வரவேற்பு கொடுத்தபடி
இரட்டைப் போக்கு ஏன்?
சரியோ - தவறோ
ஏதாவது ஒரு போக்கை
தமிழ்க் கட்சிகள் மேற்கொள்ளட்டும்!
இரட்டை வேடம் போட்டு
எதற்காக கஷ்டப்படவேண்டும்?
மக்கள் இப்போதெல்லாம்
அரசியல்வாதிகளின்
சொற்களுக்கும்-செயல்களுக்கும்
இடையேயுள்ள வேறுபாட்டை
கண்டறியக் கற்றுக்கொண்டுள்ளனர்!
■■
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஆசீர்வதியுங்கள்; சபியாதிருங்கள்!

இன்றைய உலகில் அடுத்தவரைக் கெடுப்பதுவும் அயலவருக்குத் துன்பம் விளைவித்தலும் என்பதை அன்றாடம் கேள்விப்படுகின்றோம். தான் வாழாவிட்டாலும் அடுத்தவன் நன்றாக வாழக் கூடாது என்ற எண்ணமே பெரிதும் காணப்படுகின்றது. ஆனால் இது சரியாகுமா? இல்லவே இல்லை.

ஆன்மீகத்துறையில் இது காணப்படுவதே இல்லை. லௌகீக வாழ்வில் இதனைத் தாராளமாகக் காண்கிறோம்.

எனவேதான் இயேசு சொல்கிறார்: "உங்களை விரோதிக்கிறவர் எவரும் எதிர் பேசவும் எதிர்த்திடவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்." (லூக்கா: 21:15)

ஆம் இறைவனின் வாக்கும் ஞானமும் பெற்றோர் இனிய ஆன்மிக வாழ்வு வாழுவோர்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. இதுபோலவே இன்னும் கூறப்படுகிறது. ஆம் உங்களுக்கு எவராவது துன்பம் இழைத்தால் என்ன செய்யவேண்டும் என்பதுவும் தரப்படுகிறது. உன்னுடைய விரோதியையும் நேசிப்பாயாக என்றவரிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்- அதாவது-

"உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை- ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள்."- (ரோமர்:12:14)

உடன்பாட்டிலும் எதிர் மறையிலும் கூறப்படுவது ஒன்றே: 'ஆசீர்வதியுங்கள், சபியாதிருங்கள்'.

ஏ.பி.வி. கோமஸ்.



## மணம் முடிக்கச் சிறந்தவள் மார்க்கப் பற்றுள்ள பெண்ணேயாவாள்!

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் நபி பெருமானாரின் பொன் மொழியை எடுத்தியம்புகின்றார்கள். "இளைஞர்களே! உங்களில் திருமணத்தின் பொறுப்பைச் சுமக்கும் சக்தி படைத்தவர் மணம் புரிந்து கொள்ளட்டும். ஏனெனில் திருமணம் பார்வையைத் தாழ்த்துகின்றது. வெட்கஸ்தலத்தைப் பாதுகாக்கின்றது. பார்வை இங்குமங்கும் அலைபாய்வதை விட்டும் காம இச்சையினால் ஏற்படும் தீவினைகளிலிருந்தும் பாதுகாக்கின்றது. திருமணத்தின் பொறுப்பைச் சுமக்கச் சக்தியற்றவர் இச்சையின் வேகத்தைத் தணிக்க அவ்வப்போது நோன்பு வைத்துக் கொள்ளட்டும்." மேலும் நபியவர்கள் "பெண்ணை அவர்களின் அழகுக்காக திருமணம் முடிக்காதீர்கள். அவர்களுடைய அழகு அவர்களை அழித்து விடக்கூடும். பெண்ணை செல்வந்தர் என்பதற்காக மணம் முடிக்காதீர்கள். அவர்களுடைய செல்வம் வரம்பு மீறுவதற்கும் அடங்காப்பிடாரித்தனத்திற்கும் அவர்களை ஆழ்த்திவிடக்கூடும். மாறாக மார்க்கப்பற்றின் அடிப்படையில் அவர்களை மணம் முடித்துக்கொள்ளுங்கள். மார்க்கப்பற்றுக் கொண்ட கறுப்பு நிற அடிமைப் பெண், அல்லாஹ்வின் பார்வையில் வெண்ணிறமுடைய மார்க்கப் பற்றில்லாத குடும்பப் பெண்ணை விடச் சிறந்தவள் ஆவாள்." என நவின்றார்கள். (ஆதாரம்-புஹாரி, முஸ்லிம்)

எம்.எச்.எம். அஸ்ஹர், அக்குறணை.

## கவிதைப் போட்டி இல.204



### பரிசுக்குரிய கவிதை

**(பே)பார்**

எட்டிப்பார்த்தால்
எட்டாங்குல நீர்!
கொட்டமடிக்கும் போரால்
கொட்டிய கண்ணீரது!!

செல்வி.ஜன்ஸி கபூர்-அநுராதபுரம்.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**யார் தருவார்?**

போர் அறியா வயதினிலே
யாருமில்லா வழியினிலே
தாய் அறியா நிலையினிலே
நீர் தருவார் யாருமில்லை
நீர்க்குமிழி வாழ்க்கையிலே!

செல்வி ரி.லோஜனா-
கொழும்பு-15.

**என்ன தான் முடிவு?**

ஊரோடு இருந்திருந்தால்
உறவுகள் கைகொடுக்கும்;
அனாதையாய் இருந்தாலும்
அரவணைக்க ஆளிருக்கும்;
அகதியாய் இருக்கும் என்
அவல வாழ்வின் முடிவென்ன?

சி.மு.சுந்தரேசன்-
அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

**தணிந்திடுமா?**

உயிர் சுமந்து நின்றவள்
உறவிழந்து போனதோ...?
சேயினை தாயவள்
தேற்றிட மறந்தாளோ...?
நீரினை சேயிங்கு
பருகிட துடிக்குது;
பாழும் போரிங்கு
பலவுயிர் குடிக்குது;
பாரினில் மழலைகள்
தெருவினில் தவிக்குது!

தெ.றஞ்ஜனா, வவுனியா.

**இனியேது!**

குடத்தில் நீருமில்லை.
குடிப்பதற்கு தோதுமில்லை
குருதி புனலாக கொப்பளித்து
ஓடுவதால், வானம் பொழியாது!
வையமும் செழியாது! மண்குடமும்
நிரம்பாது! தாகம் தீர்ப்பதற்கு
தண்ணீரும் இனியேது!

நிஜந்திக்கா கனகசிங்கம்- கல்லடி,
மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.207



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 07.06.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.207
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**ஓடிவந்து...**

குண்டு மழைப் பொழிந்து
குலை நடுங்கி ஓடிவந்த
குற்றுயிராம் பாலனுக்கு
குளிப்பதற்கு நீருண்டு
குடிக்க நீரில்லை.

திருமதி.சிவா மரகதம், கொழும்பு-6.

**சுமை!**

கொஞ்சம் தூக்கி விடுங்கள்
காலிழந்த அப்பாவைப்
குளிப்பாட்ட வேண்டும்!

ந.ரதீஸ்வரன்-பிரதான வீதி,
தம்பிலுவில்-02.

**பார்**

குடத்துக்குள் இருப்பது
குடிக்கும் நீரா இல்லை
வெடிக்கும் குண்டா??

எஸ்.ஏ.எம். ரிஸ்வி-
தெலம்புகல்ல, குருணாகல்.

**ஏமாற்றம்**

இருப்பதாகச் சொல்வார்கள்.
எட்டி எட்டிப் பார்த்து
ஏமாந்து போகவேண்டாம்!
ஏதுமில்லை அதற்குள்.
எல்லாமே இப்படித்தான்.
எங்கள் தேசத்திலே!

இதயநிலா- ஆரையம்பதி.

**துன்பக் கலசம்**

துன்பக் கலசமிது
நீங்காதோ எமைவிட்டு...?
இடம் பெயர் வினையால்;
இரைதேடுமிந்த
மொழியறியாப் பாலகனின்
ஏக்கமிதுவோ...?

அ.மன்னார்மணி- மன்னார்.

# வாசக(ர்)சாலை

என் இனிய தினமுரசே!

யாழ்குடாநாட்டில் வசித்த நான் உன்னைக் கண்டது இல்லை. ஆனால், கொழும்பு வந்த பிறகு நீதான் எனது தோழன். மே.04-10,1997 பத்திரிகையில் அதிரடி அய்யாத்துரை என்ற பகுதியில் அநியாயத்தின் அநியாயம் பற்றி வெளிப்படுத்தியதற்கு நன்றி. மற்றும் உண்மையே எழுதும் எனது முரசுக்கு மீண்டும் ஒருமுறை வாழ்த்துக்கள்.

எஸ். சாந்தன், வலிவடக்கு, யாழ்ப்பாணம்.

### கனவு

என் மனம் கவர்ந்த முரசே!

நீ வாரத்தில் ஒரு நாள் மறக்காமல் வெளி வருகிறாய். உன்னில் வரும் அனைத்து முத்துக்களும் என்னைக் கவர்ந்தவை. அதிலும் தொடர் முத்தான 'கனவு மெய்ப்பட வேண்டும்' தொடர் என் மனதை மிகவும் தொட்டுவிட்டது. பிரபஞ்சனுக்கு எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

ருமியா. பன்கொள்ளாமட.

என் இனிய முரசே!

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் இனிதிலும் இனிது. சிறுகதை, கவிதை, இலக்கிய நயம் போன்றவை சூப்பர். தகவல் பெட்டி தரும் செய்திகள் அதிசய மூட்டுகின்றது.

அன்பு முரசே! உன்னில் நீண்ட காலமாக ஒரு குறை நிலவுகிறது. விளையாட்டுச் செய்திகளில் நீ அதிகமாக அந்நிய நாட்டு வீரர்கள் புகழையே அறிவித்துக் கொண்டிருக்கின்றாய். இதன் பிறகாவது என் பிரிய முரசு இன்று உலகமே பாராட்டிக்கொண்டிருக்கும் எமது நாட்டு கிரிக்கெட் வீரர்களின் செய்திகளையும் அறிவிக்கும் என எதிர்பார்க்கிறேன்.

ரகு, நாவலப்பிட்டிய.

இனிய முரசே!

நீ இங்கு நலம். நான் அங்கு நலமா? நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் 'தேன் கிண்ணம்' போல் இனிக்கிறது. மற்றும் உன்னில் அடங்கி வரும் அதிரடி அய்யாத்துரை, பாப்பா முரசு, காயத்ரி, கனவுமெய்ப்பட வேண்டும் தொடர், இலக்கிய நயம் ஆகிய அனைத்தும் சூப்பர். என் இனிய முரசே! உன்னை பாராட்ட முடியாமல் போனதற்கு மன்னிக்கவும். உன் தொடர் என்றும் சிறப்பு அடைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இ. கந்தமூர்த்தி, ஆண்டிமுனை.

மனிதாபிமானமுள்ள, வெறித்தனமில்லாத மல்லாவைப் போன்றவர்களும் கொள்ளைக்கூட்டத்தில் இருந்திருக்கிறார்கள் என்பது ஆச்சரியத்தைத் தருகிறது. மல்லாவைப் பார்க்கவேண்டும் போல் ஒரு தவிப்பு. மல்லாவின் புகைப்படத்தைப் பிரசுரிக்க முடியாதா?

ஜே. ஆமிஸா, அக்கரைப்பற்று-05

### களக்காட்சி

வன்னி முற்றுகைக்கு முன்பாகவே முரசு கூறிய கணிப்புக்கள் கச்சிதம். வன்னியின் பூகோள நிலையை மிகத் துல்லியமாகப் புரிந்துகொண்டு தரப்பட்ட கணிப்புக்கள் என்பதால் இன்றைய களக்காட்சிகளை முன்கூட்டியே காட்ட முடிந்தது. பாராட்டுக்கள்.

கி. ஏகாம்பரம், வவுனியா.

### அங்குதான் மூண்டது

ஓமந்தையில்தான் மோதல் மூளும் என்று 'முரசு' எக்ஸ்ரே எடுத்துச் சொன்னது போலவே, அங்குதான் மூண்டது கடும் சண்டை. தினசரி பத்திரிகைகளில் படித்தபோது நாரதருக்கு சபாஷ் போடத் தோன்றியது.

ஜி. கணேஷ், கொழும்பு-01.

### சரியான அடி

"கட்டிடங்கள் வேண்டாம் பாலங்கள் வேண்டாம். தமிழ் ஈழம் வேண்டும்." என்று முழங்கியோர் நம் தலைவர்கள் இன்று கழுதை தேய்ந்து கட்டெறும் பானாரே. முரசு 'வழி தவறிய கோலங்கள்' மூலம் கொடுத்த அடி நியாயம்.

என். திருமாவளவன், மட்டக்களப்பு.

### துரோகங்களையும்

யாழ்ப்பாணத்தில் கடந்த காலத்தில் தங்கள் பத்திரிகை அனுமதிக்கப்படவில்லை; எனினும் 70வது முரசில் இருந்து பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சில முரசுகள் கிடைக்காமல் போயின. தங்கள் பத்திரிகைக்கு யாழ் மண்ணில் வரவேற்பு அதிகம்! அறிந்திருப்பீர்கள்! முதலில் தங்கள் பத்திரிகையில் வாசிப்பது அற்புதனின் வரலாற்றுப் படைப்பு. அற்புதமான, 'அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை', போராட்டத்தின் அற்புதமான அர்ப்பணிப்புக்களையும்; போராட்டத்தில் புரையோடி நிற்கும் துரோகத்தையும், நடுநிலையோடு எழுதுவது வரலாற்றுக் கடமை; அற்புதமாகச் செய்கின்றார் அற்புதன். இதனை நூல் வடிவமாக்க வேண்டும் என்று விரும்பும் தமிழ் உள்ளங்களில் நானும் ஒருவன்.

பா. துவாரகன், விஞ்ஞானபீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

ஆசிரியர் அவர்களுக்கு,

புலம்பெயர்ந்து வாழும் பல்லாயிரம் வாசகர்களின் இதயத்தையும் கொள்ளை கொண்ட தினமுரசின் நீண்டகால வாசகர்களில் நானும் ஒருவன். முரசின் அரசியல் கணிப்புக்கள் அருமை. 'இலக்கிய நயம்' தரும் ரசிகன், காதில பூ கந்தசாமி அண்ணர் ஆகியோருக்கு எனது பாராட்டுக்கள்.

கொற்றையூர் வாசன், ஜெர்மனி.



'மருந்தாலும் தீராதோ- நல்
விருந்தாலும் மாறாதோ?
மருந்தும் வேண்டாமடி- விருந்தும் வேண்டாமடி- அந்த பருந்தை வரச் சொல்லடி- என்னை விருந்தாய் பெறச்சொல்லடி..'

இலக்கிய நயத்தில் இடம்பெற்ற இந்த வரிகள் யாவும் முக்கனிகளில் தேன் கலந்ததைப்போல தித்திப்பாக இருந்தது. சுவையாக தந்த தினமுரசுவுக்கு, மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

திருமதி இந்திராணி பாலகிருஷ்ணன், அட்டன்.

### "சினிவிசிட்டுக்கோர் உம்மா...!"

"அதிகபட்ச அபிமானிகள்" எடுத்த எடுப்பிலேயே படித்துவிட ஆசையையும்; ஆவலையும் தூண்டுவதில் 'முன்னணி' வகிக்கிறாள் 'பூலான்தேவி!' வழக்கம் போல்; வித்தியாச வடிவங்களில் வாசகர் நம்மை வசீகரிக்கும்... 'சிறுகதை'களோடு; கூடவே தொடர்கதைகளும் தான் பரத்துகின்றன...! ஒரே சமயத்தில் பல்(பழ)வகை கதைகள் தந்து, கதைப்பிரியர்களைக் களிப்பிலாழ்த்தும் ப்ரிய முரசுக்கு எங்கள் இனிய கைகுலுக்கல்கள்...!

மற்றும் 'திரையுலக மறுபக்கம்!' புதிய பகுதி; சினிவிசிட்டில் அட்டகாசப்படுத்துகிறது...! 'சுகமான சுவாரஷ்யம் தரும் சினிவிசிட்டுக்கோர் உம்மா...!'

வாகிட் ஏ. குத்தூஸ். அக்குறணை.

### 'இதுதாண்டா பேனாக்குன்று'

'முரசு 205ல் தப்புத்தாளங்கள் வழிதவறிய கோலங்கள்' சொல்லி வேலையில்லை. காட்டவேண்டியதைக் காட்டி, தாக்க வேண்டியவர்களைத் தாக்கி அவர்களுக்கும் புதுவழிகாட்டி, தக்கதோர் முடிவுரையுடன் முடித்திருக்கிறது 'முரசு'. மக்கள் மனோ நிலையை நிலைக் கண்ணாடிபோல் காட்டி அவர்கள் நம்பிச்சென்ற தலைவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி இனிமேலாவது தலைவர்கள் மக்களை எவ்வழியில் அழைத்துச் செல்லவேண்டும் அந்தப் பாதை என்ன? என்பதையும் காட்டியிருக்கிறது. அவர்கள் திருந்துவார்களா?

விக்ரம் கமலநாதன், சூரியா றோட், நீர்கொழும்பு.

ருபராணியின் கதைகள் ஆவலைத் தூண்டுவதோடு சிந்திக்கவும் வைக்கின்றன. கதையின் தலைப்புக்களும் பிரமாதம்.

செல்வி வி. ஜெயமாலா, நல்லாயன் கல்லூரி, கண்டி.



படிப்பகம்

# சர்வதேச மத்தியஸ்தம்! அரசு தயக்கம்!
## தமிழ்க் கட்சிகள் விலை போகின்றன

சர்வதேச மத்தியஸ்தத்தை அரசாங்கம் நிராகரித்து வருவதாகவும், சர்வதேச மத்தியஸ்தம் முன்பாக பேச்சு நடத்தினால் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க வேண்டி இருக்கும் என்பதாலேயே அரசு அவ்வாறு நிராகரிப்பதாகவும் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் மேற்கண்ட குற்றச்சாட்டைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**மத்தியஸ்த மறுப்பு**

"சர்வதேச மத்தியஸ்தத்தை சிறிலங்கா அரசு மறுப்பதற்கு ஆழமான காரணங்கள் உண்டு. தமிழினத்தின் தேசிய தனித்துவத்தையும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும் புலிகள் இயக்கம் கட்டிக் காக்க முற்படுகிறது என்பது அரசுக்கு நன்கு தெரியும். உலகளாவிய ரீதியில் இந்தத் தேசிய தனித்துவங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன.

எனவே சர்வதேச மத்தியஸ்தத்தின்கீழ் புலிகள் இயக்கத்துடன் அரசியல் பேச்சு நடத்தினால் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை வழங்க வேண்டிவரும் என்று அரசு அஞ்சுகிறது.

இந்த உண்மையை மறைப்பதற்காக புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பு என்று உலகுக்குக் காட்டி அதன் வாயிலாக புலிகளுடன் பேசுவதைத் தவிர்ப்பதிலும், இனப்பிரச்சனையை உள்நாட்டு விவகாரம் என்ற பரிமாணத்துக்குள் அடக்கி, வெளிநாட்டு மத்தியஸ்தங்களை தட்டிக்கழிப்பதே அரசின் குறியாக இருக்கிறது.

**தமிழ்க் கட்சிகள்**

இன்றைய சூழலில் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக இராணுவத்தீர்வையே முன்வைத்திருக்கிறது. இராணுவ பலத்தின் மூலம் புலிகள் இயக்கத்தை நசுக்கிவிட்டு இலகுவில் விலைபோகக்கூடிய தமிழ்க் கட்சிகளை தமிழரின் ஜனநாயகப் பிரதிநிதிகளாக அங்கீகரித்து, அவர்களுடன் பேசி தமிழர்களின் அடிமைச் சாசனத்தை அவர்களைக் கொண்டே எழுதி முடித்துவிடலாம் என்று அரசாங்கம் கற்பனை செய்கிறது.

அந்த நோக்கம் காரணமாகவே 'போர் மூலம் சமாதானம்' என்ற கொள்கையை அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கிறது."

இவ்வாறு விடுதலைப் புலிகள் தனது தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

# "முற்றுகையை முறியடிப்போம்!" என்று தெரிவிப்பு!
# புலிகளின் பெண்கள் அணி முன்னணியில்!

(நமது நிருபர்)

வன்னியில் படையினரின் நகர்வுகளைத் தடுப்பதில் புலிகளின் பெண்கள் அணியும் தீவிரமாய் சமரில் ஈடுபட்டு வருகிறது.

ஓமந்தையில் இருந்து புறப்பட்ட படையினரைத் தடுத்து தாக்குதலில் புலிகளின் பெண்கள் அணி முக்கிய பங்கெடுத்துக் கொண்டது. மூன்று பெண்புலிகளும் பலியாகியுள்ளனர்.

சண்டையில் ஈடுபடும் தமது படையணிகள் களைத்துப் போய்விடாமல் இருப்பதற்காக புலிகள் சமர் முனையில் அடிக்கடி மாற்றங்களை செய்கின்றனர்.

குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு முறை சமர் முனையில் அணிகள் மாற்றப்படுகின்றன. அதனால்தான் புலிகளின் அணிகள் உத்வேகமான தாக்குதலில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, படையினரின் இதுவரை கால நடவடிக்கைகளில் தமது தரப்பில் 77 பேர் பலியானதாகவே புலிகள் விடுத்த செய்திக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. புலிகள் தரப்பில் லெப்டினன்ட் கேணல் தரத்தில் உள்ள சிலரும் பலியானதாக செய்திகள் வெளியாகி இருந்தன. லெப்டினன்ட் கேணல் என்பது படையணிகளின் தளபதிப் பொறுப்பில் இருப்போரின் தர நிலையாகும். புலிகள் விடுத்த செய்திக் குறிப்புக்களில் லெப்டினன்ட் கேணல் எவரும் பலியானதாகத் தெரிவிக்கப்படவில்லை. லெப்ரினன்ட்களே பலியானதாக அறிவிக்கப்பட்டது.

**டாங்கிகள்**

தம்மால் டாங்கிகள் தாக்கப்பட்டதாக புலிகள் கூறியுள்ளபோதும், எத்தனை டாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டன என்று அவர்கள் தெரிவிக்கவில்லை. நான்கு டாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டன; இரண்டு டாங்கிகள் சேதமாகின என்று ஏ.எப்.பி செய்தி நிறுவனம் கூறியுள்ளது என்ற தகவலையே புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. தம்மால் உறுதிப்படுத்தப்பட்ட செய்திகளை மட்டுமே தமது செய்தியாக புலிகள் வெளியிடுகின்றனர்.

முல்லை முற்றுகையை முறியடிக்கும் முகமாக வெலிஓயா பகுதிகளில் புலிகள் தொடர் தாக்குதல்களை நடத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நெடுங்கேணியில் நிலைகொண்டுள்ள படைகள் அங்கிருந்து புளியங்குளம் வரை சென்றால் புளியங்குளத்துக்கும் நெடுங்கேணிக்கும் இடைப்பட்ட பகுதியூடாக புலிகள் கிழக்கு மாகாணம் செல்லும் தரைப்பகுதி தடைப்படும். எனவே வெலிஓயா முகாம் படைகள் நெடுங்கேணியில் இருந்து முன்னேறினால் புலிகள் வெலிஓயாவின் பின்புறமாகத் தாக்கி ஊடறுத்துச் செல்ல முற்படலாம். அந்த ஊடறுப்பின் மூலமாக வெலிஓயாத் தரைப்பகுதியை புலிகள் பயன்படுத்தலாம்.

ஏற்கனவே வெலிஓயா முகாமை நோக்கியும், அருகிலுள்ள பகுதிகள் நோக்கியும் முல்லைத்தீவில் இருந்து புலிகள் ஷெல்களை ஏவியுள்ளனர்.

வெலிஓயாப் பகுதியில் நடமாடும் படையினரை முல்லைத்தீவில் இருந்து மட்டுமன்றி திருமலையில் உள்ள புலிகளின் அணிகள் சென்று பின்புறமாகவும் தாக்கக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன.

படையினரும் இதனை எதிர்பார்த்தே வெலிஓயா முகாம் பலத்தை பெருமளவில் குறைத்து அங்குள்ள படையினரை களத்தில் இறக்க முடியாதுள்ளது. அதனால்தான் நெடுங்கேணிவரை முன்னேறிய படையினர் தாமதித்து நிற்க, ஓமந்தையில் இருந்து படைகள் நகர்ந்தன.

**முற்றுகை**

முல்லை முற்றுகையை படையினரால் மேற்கொள்ள முடியாது. அவ்வாறு முற்றுகையிட்டால் அதனை முறியடிக்கும் மார்க்கங்கள் தம்மிடம் உள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர். தமது படையணிகள் சண்டை முனையில் சாதகமான நிலையில் உள்ளதாகவும் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்கும் வகையில், அணிகள் வழி நடத்தப்படுவதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகள் இயக்க படைத்துறை துணைத் தளபதி பால்ராஜ் கள நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கிறார். புலிகள் இயக்கத் தலைவரும் படைத்துறைத் தளபதியுமான பிரபாகரன் நேரடியாக கள நடவடிக்கைகளை நெறிப்படுத்தி வருகிறார் என்று புலிகளின் செய்திகள் தெரிவித்துள்ளன.

படையினருக்கும்-புலிகளுக்கும் இடையே காடுசார்ந்த களத்தில் நடைபெறும் முதலாவது பாரிய சமர் இதுவாகும்.

சமர் தொடங்க முன்னரே சண்டை தீவிரமாக நடக்கக்கூடிய பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறியதால் உயிர்ச் சேதங்கள் குறைந்தன.

**நெருக்கடி**

ஓமந்தை, நெடுங்கேணி பகுதிகளில் வெளியேறிய மக்கள், புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், ஆனந்தபுரம் வித்தியாலயம், மந்துவில் வித்தியாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ளனர். அங்கும் இட நெருக்கடி காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வீதியோரங்களிலும், மரங்களின் கீழும், காடுகளுக்குள்ளும் தஞ்சமடைந்துள்ளனர். தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

போதிய மருந்துகள் அங்கு இல்லையென்றும், வன்னி நிலவரம் வெளியே தெரியாமல் தடுப்பதற்காகவே கிளிநொச்சி அரச அதிபர் கொழும்பு வருவதற்கு படையினர் அனுமதி மறுத்தனர் என்றும் கூறப்படுகிறது.

## படகுகள் பறிமுதல்!

திருகோணமலை சீனக்குடாவைச் சேர்ந்த உப்பாறு என்னும் இடத்தில் முஸ்லிம் மீனவர்களுக்குச் சொந்தமான இரண்டு மீன்பிடிப்படகுகளை எல்.ரி.ரி.ஈ.யினர் பறித்துச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. இப்படகுகளிலுள்ள இயந்திரங்களையும், வலைகளையும் கூட அபகரித்துச் சென்றுவிட்டதாக மூதூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மே 16ம் திகதி இரவு நடுக்கடலில் இரு படகுகளில் 8 மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது ஆயுதங்களுடன் படகுகளில் வந்த எல்.ரி.ரி.ஈ.யினர் மீனவர்களைப் பயமுறுத்தி அப்படகுகளை அபகரித்துச் சென்றுள்ளதாகத் தெரிகிறது. ஒவ்வொரு படகுக்கும் 50 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் படகுகளைத் திருப்பித்தருவதாகக் கூறினாராம்.

## பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு!
### பிணையில் செல்ல அனுமதி!

இராணுவத்தைச் சேர்ந்த கப்டன் ஒருவர் 14 வயதுப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக கண்டி மேலதிக நீதிபதி விமல் நம்புவசம் முன்னிலையில் குற்றம்சாட்டப்பட்டார். சந்தேக நபரை கண்டி குற்றவியல் விசாரணைப் பொலிசார் நீதிபதி முன் நிறுத்தினர்.

சந்தேக நபருக்கான சட்டத்தரணி, சம்பந்தப்பட்ட கப்டன்மீது கோபம் கொண்ட எவரோ, அவர்மீது வேண்டுமென்றே பொய்க் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர், என்று வாதாடினார். அத்துடன் 'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையில் பங்குபற்றச் செல்லவேண்டி இருப்பதால் அவரை விடுவிக்குமாறும் கோரினார்.

சந்தேக நபரை 10,000 ரூபா ரொக்கப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்லுமாறு நீதிபதி தெரிவித்தார். பாதிப்புக்குள்ளான பெண்ணை இரட்சணிய சேனைக்கு அனுப்பிவைக்கும்படியும், அவரை சந்தேக நபரோ அல்லது அவருடன் தொடர்புடைய வேறு எவருமோ தொடர்பு கொள்ள இடம்தரலாகாதென்றும் நீதிபதி பணித்தார்.

வழக்கு ஜூன் 30ம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## பயணவிதிகள் தளர்வில் தாமதம்!

(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து கொழும்பு போன்ற பிற இடங்களுக்குச் செல்பவர்கள் மீது மேற்கொள்ளப்படும் பயண நடைமுறைகளில் இன்னும் தளர்வு கொண்டு வரப்படவில்லை என பயணிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி முதல் இந்நடைமுறையில் மாற்றம் வரும் என அரசாங்க அதிபர் செயலகத்தினால் கூறப்பட்டுள்ளபோதிலும், இது இன்னும் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை.

மூன்று படிவங்கள் நிரப்பும் முறை அமுலுக்கு வரும் என எதிர்பார்த்திருந்த பயணிகள் தற்போதும் முன்னரைப் போன்று 7 படிவங்களையே நிரப்ப வேண்டியுள்ளது. மன்னார் தீவுக்குட்பட்ட வர்த்தகர்கள் கூட சில நாட்கள் தாமதித்தே பயணம் செய்ய வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் வர்த்தகர்களுக்கும் சாதகமானதொரு பயண நடை முறையைக் கொண்டு வருமாறு அவர்கள் கோருகின்றனர்.

இதேவேளை, அகதிகளை மன்னாரிலிருந்து கப்பல் மூலமாக யாழ்ப்பாணம் அனுப்பும் நடவடிக்கையும் துரிதமடைந்து வருகிறது.

கடந்த 26.05.97 அன்றும் ஒரு தொகுதிப் பயணிகள் இவ்வாறு யாழ்ப்பாணம் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## "விமானங்களைத் திரும்பத் தா!"

கஸக்ஸ்தான் நாட்டு விமான நிறுவனம் சிறிலங்கா விமானப்படைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கிய அன்ரனோவ் 24 ரக விமானங்களைத் திரும்பப்பெறத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்விமானங்களைச் செலுத்த வேண்டாம் என்றும்- இவ் விமான உரிமையாளர்கள்- இங்கு பணிபுரியும் கஸக் விமானிகளைக் கேட்டுள்ளதாகவும் தெரிகிறது.

அன்ரனோவ் 24 விமானங்கள் கொழும்பிலிருந்து துருப்புகளை வடக்கே கொண்டு செல்லும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன. இவ் விமான நிறுவனத்தின் திடீர் முடிவினால், விடு முறையைக் கழிக்க கொழும்பு வந்த படையினர் மீண்டும் வடக்கே திரும்ப முடியாத நிலையில் காத்துக்கிடக்கின்றனர்.

தற்போது துருப்புக்களையும் பொருட்களையும் ஏற்றி இறக்கும் பணியில் அன்ரனோவ் 32 ரக விமானங்கள் 3 தான் ஈடுபடுத்தப்படுகின்றன. இவற்றையும் ஒரு குறிப்பிட்ட தடவைக்கு மேல் பணியிலீடுபடுத்த முடியாதிருக்கிறது. இதனால் மற்றுமொரு விமானக் கம்பனியுடன் ஒப்பந்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தெரிகிறது.

## "200 பேரைக் கொன்றவன் நான்!"

புத்தளம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் 1988/89ல் 200 பேரைக் கொலை செய்திருப்பதாக தனது வாயால் கூறியிருக்கிறார்.

புத்தளம் கல்பிட்டியில் 300 ஏக்கரில் நிர்மாணிக்கபடவிருக்கும் மின் உற்பத்தி நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக சமீபத்தில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சுடுமாறு தானே கட்டளையிட்டதாகவும் (இருவர் கொல்லப்பட்டனர்) மீண்டுமொரு முறை அத்தகைய கட்டளையைப் பிறப்பிக்கத் தயங்கப் போவதில்லை எனவும் அந்த பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தாராம்.

மின் நிலையத்தினால் ஏற்படவிருக்கும் பலாபலன்களை விளக்குவதற்காக புத்தளம் நகர மண்டபத்தில் மின்சார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் பொலிஸ் அதிகாரியின் இத்தகைய பேச்சினால் இடை நிறுத்தப்பட்டது. கூட்டத்தினர் வெளி நடப்புச் செய்தனர்.

## இரண்டு மரண தண்டனைகள்!
### காதலித்தவருக்குச் சூடு!

யாழ்ப்பாணம் வடமராட்சியில் இளம் பெண் ஒருவருக்கு புலிகள் மரணதண்டனை வழங்கியுள்ளனர்.

வடமராட்சியில் இமையானன் கேணியடியைச் சேர்ந்த தர்மலிங்கம் சைமினி (வயது 22) என்னும் பெண்ணே கொல்லப்பட்டவராவார்.

இவர் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரைக் காதலித்து வந்தாராம். அவரைக் காதலிப்பதை நிறுத்தும்படி மூன்று முறை புலிகள் எச்சரித்தனராம். அதையும் மீறி தொடர்ந்து காதலித்ததால் புலிகள் மரண தண்டனை விதித்தனராம்.

கொல்லப்பட்ட பெண்ணின் இறுதிச் சடங்கில் படையினரே முன்னின்று காரியங்களைக் கவனித்தனர்.

யாழ்ப்பாணம் தென்மராட்சியில் சரசாலை என்ற இடத்தில் ஒருவருக்கு புலிகள் மரண தண்டனை விதித்துள்ளனர்.

இதுபற்றி தெரியவருவதாவது: சரசாலையில் சில்லறைக் கடை நடத்திவருபவர் ஆறுமுகம் குமாரசூரியர். சுரேஸ் என்றும் அழைக்கப்படுவார். வயது 42.

இவர் படையினரிடம் பொருட்கள் வாங்கி விற்பனை செய்தாராம். படையினரோடும் நெருக்கமாகப் பழகினாராம். 23.05.97 அன்று இரவு ஒன்பது மணிக்கு இவரை வீட்டில் இருந்து புலிகள் அழைத்துச் சென்றனர்.

மறுநாள் மட்டுவில் கமலாசனி வித்தியசாலை அருகே அவர் பிணமாகக் கிடந்தார்.

## மீன்கூடைக்குள் துப்பாக்கி!
### பதிலடி நடத்திய இயக்கங்கள்

மட்டக்களப்பு-செங்கலடியில் கடந்த 23.05.97 அன்று இடம்பெற்றதான சம்பவமொன்றில் 'ரெலோ' இயக்கத்தின் ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும், மற்றும் நான்கு குடிமக்களும் கொல்லப்பட்டார்கள். மேலும் இரு 'ரெலோ' உறுப்பினர்களும் 12 குடிமக்களும் காயம்பட்டனர்.

கூடை ஒன்றுக்குள் மீன் கொண்டுவருவது போன்று இலை குழைகளால் கூடையை மூடி அதற்குள் துப்பாக்கியை வைத்துக்கொண்டு செங்கலடி சந்தைக்குள் வந்தே அங்கு நின்ற 'ரெலோ' அங்கத்தவரும் ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச சபை உறுப்பினருமான எஸ். துரைராஜா மீது வெடி தீர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர் சுடப்பட்டவுடன் அங்கு நின்ற அவ்வியக்கத்தினரும் படையினருடன் இணைந்து செயற்படும் மற்றுமொரு இயக்கத்தினரும் உடனடியாக மேற்கொண்ட சுமார் ஒன்றரை மணிநேர சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தில் நகரம் அல்லோல கல்லோலப்பட்டது. துப்பாக்கிச் சூட்டின் விளைவாக எம். கோவிந்தம்மா(56), என். கணேசன் (38), ஈ.சசிதரன் (2 1/2), பி.சிவசக்தி (17) ஆகிய குடிமக்கள் கொல்லப்பட்டார்கள்.

உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்த படையினரும், பொலிஸாரும் ஆகாயத்தை நோக்கிச் சுட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள்.

துப்பாக்கி மற்றும் 'ஷெல்' பிரயோகங்களின் காரணமாக அதிர்ச்சியுற்ற அருகிலிருந்த செங்கலடி மகாவித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் மேசைகளுக்குக் கீழும், நிலத்திலும் பதுங்கிக் கொண்டார்கள். சமீப சில நாட்களுக்கு முன்னர், செங்கலடியில் புலனாய்வுத்துறை அதிகாரியொருவரைப் புலிகள் சுட்டபோது, படையினர் பொதுமக்கள் மீது எதுவித துப்பாக்கித் தாக்குதல்களையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் பொதுமக்கள் குறிப்பாக ஞாபகமூட்டுகின்றனர். செங்கலடி சம்பவத்திற்கு படையினர் மட்டுமே காரணம் என்று வெளியான செய்திகளை- சம்பவங்களை நேரில் கண்ட மக்கள் மறுக்கின்றனர்.

செங்கலடிப் பிரதேச சபை 'ரெலோ' இயக்கத்தினரால் ஆளப்பட்டு வருகிறது. அதன் தலைவரும் கிழக்கு மாகாண 'ரெலோ' அமைப்பாளருமாக விருந்த 'பேட்டோ' மற்றும் அப்பிரதேச சபையின் ஏனைய மூன்று உறுப்பினர்களையும் புலிகள் இயக்கத்தினர் ஏற்கனவே சுட்டுக்கொன்றுள்ளனர்.

இதனிடையே 23.05.97 அன்று இடம்பெற்றதாக்குதலின் விளைவாக ஏற்பட்ட பொதுமக்களின் உயிரிழப்புக்கு 'பாசிசப் புலிகளே காரணம்' என்று 'ரெலோ' அமைப்பினர் துண்டுப்பிரசுரம் விநியோகித்துள்ளனர்.

இதேவேளை 26.05.97 அன்று வாழைச்சேனையில் வைத்து ரெலோ இயக்க உறுப்பினரான ரொபேர்ட் (வயது 26) என்பவர் புலிகளால் சுடப்பட்டார். படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

## மக்கள் முன்னிலையில் மரண தண்டனை!
### பொறுப்பாளர் பலியாகக் காரணமாயிருந்தாராம்!

மட்டக்களப்பு-மாங்கேணியில் கடந்த 23.05.97 அன்று புலிகள் இயக்கத்தினர் 4 பிள்ளைகளின் தந்தையான கே. வன்னியசிங்கம் (42) எனும் நபருக்கு பொது மக்கள் முன்னிலையில் பகிரங்க மரணதண்டனை வழங்கி அவ்விடத்திலேயே சுட்டுக் கொன்றனர். மூன்று மாதங்களுக்கு முன்னர் புலிகள் இயக்கத்தினர் இவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றிருந்தனர். விசாரணை முடிவில், தம்மால் அவர் காட்டிக் கொடுக்கும் சமூகத்துரோகியாகக் குற்றம் காணப்பட்டிருப்பதாலேயே இந்த மரண தண்டனை வழங்கப்படுவதாக புலிகள் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வாகரைப் பகுதி புலிகள் இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளர் குணாளனும் அவருடன் மேலும் 4 பேரும் வாழைச்சேனை காகித ஆலைக்குப் பின்னால் படையினரால் சுடப்படுவதற்கு இவரே காரணமாக இருந்தார் என்பதும் புலிகள் இயக்கத்தினர் இவர் மீது கூறும் குற்றச் சாட்டுக்களில் ஒன்றாகும்.

இதனிடையே வாழைச்சேனை-கறுவாக்கேணியில் 21.05.97 அன்று இரவு வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட சி.ஆனந்தராஜா (24) எனும் வாலிபர் சிறிது நேரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் மரவியாபாரம் செய்தவராதலால் இவருக்குப் புலிகளுடன் தொடர்பிருந்திருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே இவர் சுடப்பட்டிருக்கலாம் என்று பொதுமக்கள் மத்தியில் பேசப்படுகிறது.

மட்டக்களப்பு- பிள்ளையாரடியில் கே.சிவகுமார் (26) எனும் பொலிஸ்காரர் ஒருவரைப் புலிகள் இயக்கத்தினர் 25.05.97 அன்று சுட்டுக் கொன்றனர். வழக்கமாக அவர் அங்குள்ள வாவிக்கரைக்கு அதிகாலை வேளையில் மீன் வாங்கச் செல்வதுண்டாம். இதனை நெடுநாட்களாக அவதானித்துவிட்டே புலிகள் அங்குள்ள கண்டல் பற்றைகளுக்குள் மறைந்திருந்து சுட்டு விட்டுத் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ், இராணுவம் என்பன முகாம் அமைத்திருக்கும் இடத்திலிருந்து சுமார் 150 யார் தூரத்திலேயே இச்சம்பவம் இடம் பெற்றது. இவரது மைத்துனரும் காயங்களுக்குள்ளானார். இறந்த பொலிஸ்காரர் ஈரோஸ் இயகத்தின் முன்னாள் முக்கிய உறுப்பினர் ஒருவரின் தங்கையையே திருமணம் முடித்திருந்தார். சடலம் இவரது சொந்த ஊரான தியத்தலாவைப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ஒத்திவைப்பு!

திருகோணமலையில் மே 31ம் ஜூன் 1ம் திகதிகளில் நடைபெறுவதாகவிருந்த அம்பிகாவின் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காணரங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி ஜூன் 21ம், 22ம் திகதிகளில் நடைபெறும் என்று தெரிகிறது.

## மன்னிப்புக் கேட்டார் அதிகாரி!

யாழ்ப்பாணத்தில் மல்லாகம் மதவடி என்னும் இடத்தில் புலிகளின் அமுக்க வெடித் தாக்குதல் ஒன்று நடந்தது. அதனையடுத்து படையினர் நடத்திய தாக்குதலில் 15 பொதுமக்கள் வரை காயப்பட்டனர்.

இச் சம்பவத்தை அறிந்த படை உயரதிகாரி மேஜர் ஜெனரல் பலகல்ல, காயமடைந்த பொதுமக்களிடம் நடந்த தவறுக்காக மன்னிப்புக் கோரினார். "சாதாரண பொது மக்கள்மீதான இத்தகைய நடவடிக்கைகள் படையினர் அனைவருக்குமே கெட்ட பெயர் ஏற்படுத்துவதாகிவிடும்" என்று கூறினார். குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக ஒரு அதிகாரிமீதும் நடவடிக்கை எடுக்க உள்ளதாக உறுதியளித்தார்.

இச் சம்பவம் நடைபெற்ற பின்னர் 20.05.97 அன்று யாழ்ப்பாணம் இராசவீதியில் படையினரை நோக்கி கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. படையினர் ஒருவர் பலியானதாகவும், சிலர் காயமடைந்ததாகவும் தெரிகிறது. இதனை அடுத்து அவ்வழியால் சென்ற பொதுமக்கள் படையினரால் தாக்கப்பட்டனர். யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு பின்னர் படையினரே இரத்தமும் வழங்கினார்கள்.

www.padippakam.com

## "அலட்சியம் செய்யவில்லை!" ஆணையாளர் சொல்கிறார்!

தங்களது பத்திரிகையின் நீண்ட கால வாசகன் என்ற கோதாவிலும், முரசின் ஆக்பூர்வமான கருத்துக்களை ஆமோதிப்பவன் என்ற அடிப்படையிலும் எனது இந்த மடலைத் தங்களுக்கு வரைகின்றேன்.

204வது முரசின் 4ம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள "மாநகர ஆணையாளரின் புறக்கணிப்பு- வரியிறுப்பாளர் பொது நலக்குழு கவலை" எனும் தலைப்பிலான செய்தி குறித்து எனது இந்த விளக்கத்தினைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு அன்பாக வேண்டுகின்றேன்.

09.04.1997ம் திகதியன்று மட்டக்களப்பு பொது நலக்குழு அமைப்பைச் சேர்ந்த செயலாளர் என்னைச் சந்திக்க ஒரு தினத்தை ஒதுக்கித் தருமாறு தமது குழு சார்பாகக் கேட்டிருந்தார். அதன்படி 25.04.1997 பி.ப 3.30 மணியை அவர்களுக்காக ஒதுக்கிக் கொடுத்தேன். ஆனால் எதிர் பாராதவிதமாக அன்றைய தினம் எமது பகுதியில் இடம் பெற்ற ஒரு மரணச் சடங்கில் கலந்து கொள்ளவேண்டியிருந்ததால் எமது சபையின் நிகழ்ச்சி நிரல் ஒரு சில மணிகளால் பின்தள்ளப்பட்டது.

இதனால் பொது நலக் குழுவினரையும் உரிய நேரத்துக்கு சந்திக்க முடியாமல் போனதால் எமது நிர்வாக உத்தியோகத்தரிடம் எனது நிலைமையை விளக்கி, நான் கூட்டத்தை முடித்துக் கொண்டு வரும் வரை குழுவினருடன் உரையாடும்படி பணித்திருந்தேன். ஆனால் அவர்கள் நிர்வாக உத்தியோகத்தருடன் பேச முடியாதென்றும், தங்களால் காத்திருக்க முடியாதென்றும் கூறிவிட்டுச் சென்றதாக அறிந்தேன். பின்னர் அன்றைய தினமே அவர்கட்கு எனது நிலைமையை விளக்கி ஒரு கடிதத்தை வரைந்து நானே அவர்களிடம் கையளித்தேன்.

அக்கடிதத்தின்படி அவர்களுக்கு 05ம், 06ம் 07ம் திகதிகளை ஒதுக்கிக் கொடுத்து பொருத்தமான ஒரு திகதியில் வந்து சந்திக்குமாறு அழைத்திருந்தேன். அதன்படி 07ம் திகதி மாலை 3.30 மணியளவில் குழுவினருடன் சுமுகமான ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டு அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டு அறிந்து கொண்டேன்.

ஆனால் அக்குழுவைச் சேர்ந்த ஒரு உறுப்பினர், தங்கள் பத்திரிகையின் நிருபர் மூலம் ஒரு செய்தியைக் கொடுத்ததுடன் அதில் அவர்களை அலட்சியப்படுத்தியதாவும் தெரிவித்துள்ளார். உண்மையிலேயே அவர்களை நான் அலட்சியப்படுத்தவில்லை என்பது நான் இணைத்துள்ள இணைப்புக்களில் இருந்து தெரியவரும் என நம்புகின்றேன்.

ச.நவநீதன், மாநகர ஆணையாளர், மாநகர சபை, மட்டக்களப்பு.

## மருந்துத் தட்டுப்பாடு

பொகவந்தலாவை மாவட்ட வைத்திய சாலையில் மருந்து வகைகளுக்கு மோசமான தட்டுப்பாடு காணப்படுகின்றது. இவ்வைத்தியசாலைக்கு வைத்திய சிகிச்சைக்காக வரும் நோயாளிகளிடம், மருந்தகங்களில் பணம் செலுத்தி மருந்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

வருமானக் குறைவால் அவதியுறும் இப்பகுதி வாழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்நிலைமை மேலும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது. இவ்விடயம் சம்பந்தமாக சுகாதார அமைச்சு துரித நடவடிக்கை எடுக்காதாவென இப்பகுதி வாழ் பொதுமக்கள் ஏங்குகின்றனர்.

சோ. ஸ்ரீதரன், ஸ்ரீபுர.

## முஸ்லிம் பாடசாலைகள் ஆசிரியர் தட்டுப்பாடு

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்டத்தில் இயங்கும் முஸ்லிம் பாடசாலைகளில் 500 ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

44/90 அரச சுற்று நிருபத்தின்படி கண்டிப்பிரதேசத்தில் இருந்து சுமார் 250 ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டனர். அவர்கள் ஓய்வில் செல்வதற்கு முன்பும் கூட 250 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவியது. இப்பொழுது இதன் முழு எண்ணிக்கை 500 ஆகும் எனவும் ஏராளமான கிராமப்புற பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி ஆகிய துறைகளில் ஆசிரியர் வெற்றிடம் நிலவுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இப்பொழுது வேலையற்றிருக்கும் பட்டதாரிகளைக் கொண்டும் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் திகதி இடம்பெற்ற- கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களில் தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நியமிக்கும் பொருட்டு- நடாத்திய போட்டிப் பரீட்சை முடிவுகளின் பெறுபேற்றின் அடிப்படையில் நியமனங்களை வழங்கி ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்கும்படியும் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவிடம் பலரும் கேட்டுள்ளனர்.

இதே வேளையில் தோட்டப்பாடசாலைகள் உட்பட தமிழ்ப்பாடசாலைகள் பலவற்றில்- மத்திய மாகாணத்தில் 2200 ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே மேற் குறிப்பிட்ட போட்டிப் பரீட்சை (தோட்டப் பாடசாலைகள்) க்குத் தோற்றிய இந்தியவம்சாவளியினரில் 300 பேருக்கும் ஜூன்மாதம் முதலாம் திகதி உதவி ஆசிரியர் நியமனம் வழங்க இருப்பதாகவும் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் திரு வீ.புத்திரசிகாமணி தெவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் பேச்சு– வாசுதேவ கடும் ஆட்சேபம்!

இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் சீரான அபிவிருத்திகள் மேம்பாடடைய வேண்டுமென்றால் ஒரு சர்வாதிகார ஆட்சி முறையே உகந்தது-என்று சூசகமாக, ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்திருப்பதாக, பொதுஜன முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

மிரிகமவிலுள்ள இளைஞர் மையத்தில் கடந்த மே மாதம் 11ம் திகதியன்று, ஜனாதிபதி இவ்வாறு உரை நிகழ்த்தியதாகத் தனது ஆட்சேபத்தை வெளிப்படுத்தியிருக்கிறார், வாசுதேவ நாணயக்கார.

கொரியா நாட்டை உதாரணமாகக் காட்டிய ஜனாதிபதி, அந்த நாட்டில் ஒரே கட்சி ஆட்சி நடப்பதாகவும், ஒரே வானொலி மட்டுமே இருப்பதாகவும், ஒரே செய்தித்தாள் மட்டுமே வெளியிடப்படுவதாகவும் கூறியதுடன், அங்கு வேலை நிறுத்தங்களில் எவரும் ஈடுபடுவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலதிகச் சம்பளம் கேட்டோ, சம்பள உயர்வுகேட்டோ எவராவது குரலெழுப்பினால், அவர் உடனடியாக வேலை நீக்கம் செய்யப்படுவார், அல்லது காணாமல் போய்விடுவார். அங்கெல்லாம் 'வேலை.. தொடர்ந்து வேலை,' என்பது மட்டும்தான் ஒரே இலட்சியம்.

இக்கருத்தை வலியுறுத்தி ஜனாதிபதி இளைஞர் மத்தியில் பேசியமை, இந்த நாட்டில் ஜனநாயக அடிப்படையிலான ஆட்சி முறைக்குப் பதிலாக சர்வாதிகார முறையினைப் புகுத்துவதே சிறப்பாகும், என்று மறைமுகமாக எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது என்று திரு.வாசுதேவ நாணயக்கார தனது ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கிறார்.

## "சுயேச்சையாக இயங்க அனுமதிக்கவும்!" ஆயுர்வேத வைத்தியர் கோரிக்கை!

(திருமலை நிருபர்)

"சித்த- ஆயுர்வேத வைத்தியத் துறையை தனிப் பிரிவாக்கி சுயேச்சையாக இயங்க அனுமதிப்பதோடு அதற்கான ஆளணி வளங்களையும் பெற்றுத்தாருங்கள்."

இவ்வாறு கோரும் மகஜரொன்று வடக்குக் கிழக்கில் சகல தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் திருக்கோணமலை ஆயுர்வேத வைத்தியப் பாதுகாப்புச் சபையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் வடக்கு- கிழக்கு மாகாண பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர், மாவட்ட ஆயுர்வேதப் பணிப்பாளர் ஆகியோருக்கும் உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பழைய சுவடிகளில் உள்ள வைத்தியம் சம்பந்தப்பட்ட கருத்துக்களை உரைநடைப்படுத்தி நூல்கள் வெளியிடல், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பூரணமான ஒவ்வொரு ஆயுர்வேத வைத்தியசாலை நிறுவுதல், கிராமங்கள் தோறும் மருந்தகங்கள் அமைத்தல், மாவட்டங்கள் தோறும் மூலிகைப்பண்ணை அமைத்தல், திருக்கோணமலையில் சித்த- ஆயுர்வேத ஆராய்ச்சி மையமொன்று நிறுவுதல், பட்டப்பின் படிப்பு, புலமைப் பரிசிற் படிப்பு என்பவற்றுக்கான வசதிகளை அமைத்துக் கொடுத்தல் ஆகிய கோரிக்கைகளுக்கு செயல் வடிவம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ள இம் மகஜரில், மொழிக் கொள்கைக்கு முரணாக கொழும்பு ஆயுர்வேதத் திணைக்களம் தனிச் சிங்களத்தில் வடக்கு-கிழக்கு வைத்தியர்களுடன் தொடர்பு கொள்வதையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வயது முதிர்ந்த சித்த- ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் அவர்களது குடும்ப வருமான நிலையை அனுசரித்து மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பாதுகாப்புச் சபை- பாராளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

## ஓய்வு பெறாமையால் தொல்லை!

(திருமலை நிருபர்)

வடக்கு- கிழக்கு மாகாண அமைச்சு அலுவலகங்கள் பல வயோதிபர் மடம் போன்று காட்சியளிக்கின்றன. அமைச்சில் அலுவல் நிமித்தமாகப் போகும் ஒருவர், காது கேளாதவர்களுடனும் கண் புகைந்து போனவர்களிடமுமே தங்கள் தேவைகளைக் கூறவேண்டியிருக்கிறது.

அங்கு பணிபுரியும் இளம் பணியாளர்களும் இவர்களால் பாதிக்கப்பட வேண்டியிருக்கிறது. சேவைமூப்பு, திறமை காரணமாகக் கிடைக்கக் கூடிய பதவி ஏற்றங்கள் இவர்களால் தடைபட்டுப் போவதாக அதிகாரியொருவர் 'முரசு'க்குத் தெரிவித்தார்.

இந்த வயோதிபர்களது இயல்பான இயலாமை, சோம்பேறித்தனம், 'அறளை' பெயர்ந்ததால் ஏற்படும் தவறுகள் என்பவை மாகாண நிர்வாகத்தைப் பாதிப்படையச் செய்வதாக அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வயோதிபர்கள் இவ்வாறு தொல்லை தருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 37/94ன் படியும் மாகாணசபை தலைமைச் செயலரின் 15/8/96ன் படியும் அறுபதுக்கு மேற்பட்ட வயதையுடைய சகல உத்தியோகத்தர்களும் 31.12.1996 உடன் வெளியேற்றப்பட்டிருக்க வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மாநகரசபை கவனிக்குமா?

நூற்றுக்கு நூறு வீதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இம் மாநகர சபையால் அனுப்பப்படும் நீண்ட கடித உறை (என்வலப்) ஒன்றை தங்களுக்கு அனுப்பி வைத்துள்ளேன். இதில் தமிழில் மாநகர சபை என்பதற்குப் பதிலாக 'மாதகர சபை' என்று எழுதப்பட்டுள்ளது.




எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று முழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழ் படும் பாட்டை- அதுவும் தமிழ்ப்பகுதியில் பாருங்கள்! தவறு ஏற்படுவது சகஜம். இதுவரை அதனைக் கவனித்து திருத்தவோ, அல்லது குறிப்பிட்ட கடித உறைகளை கழித்துவிடவோ நடவடிக்கை எடுக்காதது ஏன்?

எம்.வசந்தன், மட்டக்களப்பு.

## விளம்பரப் பகுதி


**தபால் மூலம் கல்வி ஆங்கிலம் (English)**

வெளிவாரிப்பட்டப்படிப்புகள் நிறுவனத்தால் நடாத்தப் படவுள்ள பின்வரும் தபால மூல பாடநெறிகளைப் பயில விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆங்கில இலக்கணம் (English Grammar)**

ஆங்கில இலக்கணம் முழுவதும் 60 நாட்களில் தபால் மூலம் கற்பிக்கப்படுகின்றது. தமிழில் போதியளவு விளக்கம் தரப்படுகிறது. முழுக் கட்டணம் ரூபா 350/-

**ஆங்கில கடிதம் எழுதுதல் (English Letter - Writing)**

சாதாரண குடும்ப கடிதங்கள் முதல் உத்தியோக பூர்வ கடிதங்கள் வரை இலக்கண முறைப்படி ஆங்கிலத்தில் எழுத தபால் மூலம் 60 நாட்களில் பயிற்சியளிக்கப் படுகிறது. தமிழில் போதியளவு விளக்கம் தரப்படுகிறது. முழுக் கட்டணம் ரூபா 350/-

**ஆங்கில பேச்சு பயிற்சி (English Speaking Course)**

இலங்கை பரீட்சைப் பகுதியினரின் பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டது. இப்பாடநெறியைப் பயிலும் மாணவர்கள் இலங்கை பரீட்சைப் பகுதியினரின் "SPOKEN ENGLISH" பரீட்சைக்கு தோற்ற முடியும். உங்களுக்கு தெரிந்த ஆங்கிலத்தில் இலக்கண முறைப்படி சுலபமாக எந்த இடத்திலும் உரையாடுவதற்கு 3 மாத காலத்தில் தபால் மூலம் பயிற்சியளிக்கப்படுகிறது. தமிழில் போதியளவு விளக்கம் தரப்படுகிறது. முழுக் கட்டணம் ரூபா 350/-

விபரங்களுக்கு: உங்கள் சொந்த முகவரி எழுதப்பட்ட, இரண்டு ரூபா ஐம்பது சதம் முத்திரை ஒட்டப்பட்ட நீள கடிதவுறையை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். "கடிதவுறையின் இடது புறத்தில்" விண்ணப்பிக்கும் பாடநெறியைக் குறிப்பிடவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30. 06. 1997

EXTERNAL STUDIES ACADEMY
(Correspondence School)
P. O. Box: 660, COLOMBO.

**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு 11,
போன்: 421398

**வீடு விற்பனைக்கு**

சாய்ந்தமருது முதலாம்குறிச்சி இல.151 மாவடி வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு நியாயவிலையில் விற்பனைக்குஉண்டு.
தொடர்பு:
AHAMED LEBBE
6D/109, JAYAWADANAGAMA, BATHARAMULLA
T.P.: 01-71488-7

**SPOKEN ENGLISH**

By.PON.SAKTHIVEL ACEA(Lond) IPFM (Lond) Dip. in. Eng (Lond)

மூன்றே மாதகாலத்தில் ஆங்கிலம், பேச, எழுத, வாசிக்க அதிசிறந்த நவீன கற்பித்தல் முறையின் கீழ் உளவியல் அடிப்படையில் எல்லோரும் விரும்புகின்ற முறையில் கற்றுத் தரப்படும்.

12 துணை நூல்களை அடிப்படையாக கொண்ட பாடத் திட்டம்.

ஆரம்பம் : 1.6.97 முதல் 31.8.97 வரை
நேரம் : 10.30 AM - 12.30 PM

BRIGHT TUITION CENTRE
77/20, JAMPATTA STREET,
COLOMBO - 13. T.P. 345367

**SPOKEN ENGLISH தபால் மூலம் கல்வி**

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE(PVT) LTD.
P.O.BOX-162, COLOMBO.

**ரெறாசோ ஷிப்ஸ் (TERRAZZO CHIPS)**

★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு. கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் கஷ்ட நஷ்டங்கள் நீங்கவும் எண்ணங்கள் நிறைவேறி எதிர்கால நலன் பெறவும் தொன்மையும் பழைமையும் வாய்ந்த மட்டக்களப்பு மாந்திரீகபரம்பரை வைத்திய நிபுணர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள்.

டாக்டர். ஏ.பி.எஸ்.குட்டி
50. தியேட்டர் றோட். நிந்தவூர்–21.
கோட் நம்பர் – 32340

DR.A.P.S. KUTTY,
NO-50, THEATRE ROAD,
NINTAVUR-21, SRI LANKA.
Code No - 32340

**பழுது பார்த்தல்**

வீடியோ கமெரா, போட்டோ கமெரா திருத்திக்கொடுக்கப்படும்

நியூ விக்ரேஸ்
New Victors
40 1/3, Galle Road, Colombo-06.
(Hongkongbank அருகாமையில்)
T.P-594492


**ஓராண்டு நினைவு**



சதாசிவம்-சிறிகரன் (பாபுஜி)

மலர்வு 1975.07.08 — உதிர்வு 1996.05.22

ஓராண்டு ஆனாலும்
எம்துயர் மாறாது, என்றும்
உன் நினைவுகளோடும்,
உணர்வுகளோடும் கலந்து
வாழும் அப்பா, அம்மா,
அக்காமார், அத்தான்,
மருமகள்மார், அம்மம்மா,
அன்ரிமார், சித்தப்பாமார்,
மாமாமார், மாமிமார் மற்றும்
உற்றார் உறவினர்
நண்பர்கள்.

வை. சதாசிவம்
பிரதான வீதி, களுதாவளை–4,
களுவாஞ்சிக் குடி.



படிப்பகம்

www.padippakam.com

# சேதமில்லாத கெரில்லா உத்திகள் ஒன்று குவிந்து நகரும் படையணிகள்!

'ஜயசிகுறுய்' படை நடவடிக்கையின் கட்டம் இரண்டு ஓமந்தையில் இருந்து புளியங்குளம் நோக்கி முன்னெடுக்கப் பட்டது.

படையினர் ஒவ்வோர் அங்குலத்தையும் புலிகள் பலத்த எதிர்ப்பு யுத்தத்தை சந்தித்தே கடக்க வேண்டியிருக்கிறது.

ஓமந்தையில் இருந்து படையினர் முன்னேறத் தொடங்கியபோதே இரண்டு காரியங்களில் ஈடுபட்டனர்.

ஒன்று: சாலையின் இரு புறமும் உள்ள காடுகளை பாரிய இயந்திர சாதனங்கள் கொண்டு அழித்தல்.

இரண்டு: கட்டுப்பாட்டுக்குள் வந்த பகுதிகளில் மண் அணைகளை (பண்ட்) அமைத்தல்.

'பண்ட்' என்பதும் 'பங்கர்' என்பதும் ஒன்றல்ல. பண்ட் என்பது தரைக்கு மேலே அமைக்கப்படும் பாதுகாப்பு அரண். பங்கர் என்பது தரைக்குக் கீழே அமைக்கப்படும் பதுங்கு குழிகள்.

'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை மூலம் யாழ் குடாநாட்டைப் படையினர் கட்டுப்பாட்டில் கொண்டுவந்த பின்னர் தான் 'பண்ட்' அமைக்கும் உத்தி பிரதான இடம்பெறத் தொடங்கியது.

ஓமந்தையில் இருந்து முன்னேறும் படையினரை, அவர்களின் பக்கவாட்டில் புலிகளின் அணிகள் நெருங்கிவந்து தாக்கக் கூடியதாக இரு புறமும் காடுகள் உள்ளன.

அவ்வாறான தாக்குதலில் இருந்து தப்புவதற்காகவே சாலையின் இருபுறமும் உள்ள காடுகள் ஒரு குறிப்பிட்டளவு பரப்பளவுவரை அழிக்கப்பட்டு பரந்த வெளியாக்கப்படுகின்றன.

முன்னேறும் படைகளின் தொடர் அணிகள் மத்தியில் இடைப்பட்ட பகுதிக்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்கவே 'பண்ட்' அமைக்கும் வேலையும் கூடவே சூடாக நடந்துகொண்டிருக்கிறது.

புலிகளின் பலத்த எதிர்ப்பு காரணமாக மேலும் படைகளை ஒன்றுகுவித்தே ஒவ்வொரு முனையையும் தாண்ட வேண்டியிருக்கிறது. எனவே கைப்பற்றிய பகுதிகளில் பெருமளவான படையினரை நிறுத்திவைத்தால் புலிகளின் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க படைபலம் போதாது.

**எனவே 'பண்ட்' கட்டுவது மூலமாக கைப்பற்றிய பகுதிகளில் குறிப்பிட்டளவு படையினர் மூலமே பாதுகாப்பு கண்காணிப்பை மேற்கொள்ள முடிகிறது. அதாவது- ஒரு குறிப்பிட்ட பகுதியை புலி**

## முற்றுகையை எதிர்பார்த்த முன்னைய தாக்குதல்கள்! இரு தரப்பும் பெற்றுள்ள அனுபவங்கள்! யுத்தத்தில் பங்குபெறும் காட்டு மரங்கள்!

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**களின் ஊடுருவலில் இருந்து பாதுகாக்க ஐயாயிரம் படையினர் தேவை என்று வைத்துக் கொள்வோம். 'பண்ட்' கட்டுவது மூலமாக இரண்டாயிரம் படையினரை வைத்தே அதனைச் செய்துவிடலாம். அங்குலம் அங்குலமாக படையினர் நிறுத்தப்பட வேண்டியதும் இல்லை.**

ஆனால் புலிகள் அவ்வாறு 'பண்ட்' கட்டமுடியாது. டாங்கிகள், புல்டோசர்கள் போன்ற கனரக வாகனங்கள் மூலம் படையினர் இடித்துச் சென்றுவிடலாம். மரபுப் படையணிக்குத்தான் 'பண்ட்'உத்தி கைகொடுக்கும்.

**புலிகளாலும் 'பண்ட்'டை உடைத்து ஊடறுக்க முடியும். ஆனால் இரகசியமாகச் செய்ய முடியாது.**

நீண்ட நிலப்பரப்பைக் கைப்பற்றி நிலைகொள்ளும் நம்பிக்கை படையினருக்கு ஏற்பட 'பண்ட்' உத்தியும் பிரதான காரணம் என்பது தற்போதைய படை நடவடிக்கை தொடங்கும் முன்பே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் தெரிவிக்கப்பட்டது.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கை கட்டம் கட்டமாகவே மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்பார்க்கப்பட்ட கணிப்புத்தான்.

படையினர் கட்டம் கட்டமாகவே நகர்கின்றனர். நகர்கின்றனர் என்று சொல்வதே சாலப் பொருத்தம்.

தரைப்படை போதாது என்று கடற்படையினரும் தரை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தகவல்களின்படி 25 ஆயிரம் படைகள் ஒன்று குவிந்து நகர்வுகளை மேற்கொள்கின்றன. அது தவிர வான்படையினர் மேலிருந்து குண்டுகள் பொழிந்து, புலிகள் நிலை எடுத்துத் தாக்க முடியாமல் அடிக்கின்றனர்.

எனினும் படை நடவடிக்கையை எதிர்பார்த்து மிகப் பலமான கொங்கிரீட் பங்கர்களை புலிகள் அமைத்திருந்தனர். தரையோடு தரையாகவே நகர்வுகளை மேற்கொள்ளக் கூடிய- நீண்டதூர பங்கர்கள்- நிலக்கீழ் பாதைகள் ஊடாக புலிகளின் அணிகள் தமது நகர்வுகளை மேற்கொள்கின்றன. அதனால்தான் புலிகளின் தரப்பில் சேதம் குறைவாக இருக்கிறது.

**உண்மையாகவே படைபலத்துக்கும், மனபலத்துக்கும் இடையேயான யுத்தம் என்று இதனைச் சொல்லலாம். மாபெரும் படைபலம் மறுபுறத்தில் ஒன்றுகுவிந்திருப்பது தெரிந்தும் களத்தில் இறங்கும் புலிகளின் அணியில் உள்ள ஒவ்வொருவரும் 'செய் அல்லது செத்துமடி' என்ற கோட்பாட்டினால் வழி நடத்தப்படுகின்றனர்.**

ஆனாலும் அந்த உணர்ச்சியால் உந்தப்பட்டு தங்கள் பலத்தை இழக்கும் நிதானமின்மையும் புலிகளிடம் கிடையாது. மரபுப் போரில் பலம் வாய்ந்த படையினரை, கெரில்லா உத்திகள் மூலம் திட்டமிட்டபடி தாக்குதல்கள் ஊடாக மிக நிதானமாகவே புலிகள் எதிர்த்து வருகின்றனர்.

படையினர் நடவடிக்கையை ஆரம்பித்தது முதல் 27.05.97 வரை புலிகள் தரப்பில் மொத்தம் 77 போர்தான் பலியாகி உள்ளனர். அதேவேளை, படையினர் தரப்பில் ஒரு பிளாட்டூன் முழுவதுமே சேதமாகியுள்ளது. ஒரு பிளாட்டூன் என்பது குறைந்தது 500 படையினரையாவது கொண்டதாக இருக்கும்.

தகவல்களின் படி 150க்கு மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். 600-650 படையினர் காயமடைந்துள்ளனர்.

சமர் நடைபெறும் தரையமைப்பு கெரில்லாக்களுக்கு சாதகமாக இருக்கிறது. மோட்டார் ஷெல்களை சரமாரியாக புலிகள் ஏவுகின்றனர். சம தரையில் நகரும் படைகள் உடனே பதுங்க முடியாது.

படையினர் ஆட்டிலெறி பீரங்கிகளால் சுடுகின்றனர். மோட்டார்களையும் பாவிக்கின்றனர். ஆனால் புலிகள் எங்கே நிலை கொண்டுள்ளனர் என்று படையினருக்குத் துல்லியமாகத் தெரியாது.

புலிகள் ஏவும் மோட்டார் ஷெல்கள் வரும் திசையையும், மோட்டார் ஷெல்கள் மூலம் என்ன ரக மோட்டார், அதன் சுடு தூரம் எவ்வளவு என்று தெரிந்துவிடும். அதன்மூலம் புலிகள் எங்கிருந்து தாக்கியிருப்பர் என்று ஒரு பகுதியை கணிப்பிட்டு படையினரும் ஷெல் அடிப்பர்.

படையினர் போல புலிகள் ஓரிடத்தில் ஒன்றாகக் குவிந்திருப்பதில்லை என்பதாலும், ஏவப்படும் ஷெல்கள் மரங்களில் பட்டு இடைநடுவில் வெடித்து விடுவதும் உண்டு என்பதாலும் படையினர் எதிர்பார்க்கும் இழப்பு புலிகள் தரப்பில் ஏற்படுவதில்லை.

காட்டுப் பகுதிக்குள் விமானக் குண்டு வீச்சு, ஷெல் வீச்சு போன்றவற்றை தடுப்பு அரண்போல நின்று மரங்கள் தடுத்து விடுகின்றன.

அடங்காத் தமிழர் முன்னணி என்ற அமைப்பின் தலைவராக இருந்தவர் அமரர் சுந்தரலிங்கம். அடங்காத்தமிழன் என்றும் அவரை அழைப்பார்கள். முன்னாள் வவுனியா எம்.பி. அவர் ஒருமுறை சொன்னது இது: **"வன்னிக் காடுகளில் உள்ள மரங்களும் சுடும்!"**

ஏவுகணைகளை இடை நடுவே எதிர் கொண்டு தாக்கியழிக்கும் ஏவுகணைகளும் இருக்கின்றன. வளைகுடாப் போரை தொலைக்காட்சிகளில் கண்டவர்கள் ஏவுகணைகளின் நேருக்கு நேர் மோதலைக் கண்டிருக்கலாம்.

**புலிகளிடம் ஏவுகணைகளை எதிர்க்கும் ஏவுகணைகள் இல்லாத குறையை காட்டு மரங்கள்தான் ஓரளவு பூர்த்தி செய்கின்றன. ஆக, புலிகளின் ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணை-காட்டுமரங்கள்தான் இயற்கை ஆயுதம்.**

வியட்நாம் காடுகளில் அமெரிக்கப் படையினரையும், விமானக் குண்டு வீச்சுக்களையும்



ஆர்.பி.ஜி. டாங்கிக்குக் குறி

சமாளிக்க பெரிதும் உதவியவையும் மரங்கள்தான்.

**வன்னியில் சாலையோரக் காடுகளை அழித்தாலும் முழுக் காடுகளையும் அழிக்க முடியாது. அப்படி அழிப்பதாக இருந்தால் நாடு முழுவதுமே மீள முடியாத வரட்சிக்கு நீண்ட நெடுங்காலம் முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.**

இந்தியப் படையினருக்கு எதிரான யுத்தத்தில்-வன்னியை முற்றுகையிட்ட இந்தியப் படைகளை-புலிகள் காடுகளுக்குள் எதிர்த்துத் தாக்கினார்கள்.

மணலாற்றுக் காடுகளுக்குள் இந்தியப் படையினரை நன்றாக உள்ளே இழுத்துவிட்டு புலிகள் தாக்கினார்கள். நூற்றுக்கணக்கான கூர்க்கா படையினர் மணலாற்றுக் காடுகளுக்குள் பலியாகினர்.

அப்போதிருந்து ஆயுத பலம், ஆட்பலம் என்பவற்றுக்கு ஏற்ப நடத்தப்பட்ட கெரில்லா தாக்குதலாக அது அமைந்தது.

**அப்போதிருந்ததைவிட போர் அனுபவம், ஆயுதபலம், ஆட்பலம் என்பவற்றில் புலிகள் தற்போது வளர்ச்சி அடைந்திருப்பதால் சமதரைப் பகுதியில் முன்னேறும் படையினரை கெரில்லா அணிகள் தடுத்து நிறுத்திப் போரிட முடிகிறது.**

இதுதவிர, முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் பிரபாகரனின் நீண்டகாலப் பார்வையும், சூழல் மாற்றங்களை சமாளிக்க முன்கூட்டியே மேற்கொண்ட நடவடிக்கைகளும்தான்.

யாழ் குடாநாடு முக்கிய தளமாக இருந்தபோதும் சமர்களை விஸ்தரிப்பதிலும், யாழ் குடாநாடு தவிர்ந்த பகுதிகளிலும் தம் பலத்தை மேலோங்கச் செய்வதிலும் பிரபாகரன் கவனம் செலுத்தினார்.

யாழ் குடாநாடு தளமாக இருந்தாலும் தமது யுத்தத்தில் வன்னி ஒரு பிரதான பாத்திரம் வகிப்பதை பிரபாகரன் மறக்கவில்லை.

வன்னியில் சிலாவத்துறை பிரதான முகாம்மீதான நான்குநாள் முற்றுகை, மாங்குளம் முகாம்மீதான அழித்தொழிப்பு யுத்தம், கட்டுப்பொத்த முகாம் தாக்குதல், கொக்கிளாய் முகாம் தாக்குதல் போன்ற பாரிய நடவடிக்கைகள் மூலம் வன்னியில் படையினரின் பிடியைத் தளரச் செய்தனர் புலிகள். 1990ம் ஆண்டிலேயே இத் தாக்குதல்களை நடத்தி முடித்திருந்தனர்.

பாரிய மாங்குளம் முகாம் 1990 நவம்பர் மாதம் 24ம் திகதி, பால்ராஜ் தலைமையில் தாக்குதல். இருநாள் தொடர்ந்தது. முடிவில் முகாம் வீழ்ந்தது. புலிகளின் படைத்துறைத் துணைத் தளபதியாக பால்ராஜ் மாறுவதற்கும் வழியமைத்துக் கொடுத்ததும் இத் தாக்குதல் தான்.

மாங்குளம் முகாம் இன்று இருந்திருந்தால் படையினர் மிகச் சுலபமாக வன்னி முற்றுகையை மேற்கொண்டிருப்பர். தரைப் பாதை திறப்பும் வெகு துரிதமாக நடந்திருக்கும்.

யாழ்ப்பாணத்தில் படையினர் பாரிய நடவடிக்கைக்குத் தயாரான போதே பிரபாகரன் தமது பிரதான அணியை வன்னிக்கு அனுப்பியிருந்தார். மணலாற்று (வெலிஓயா) முகாம் தாக்குதல்தான் நோக்கம். அதற்கிடையே படையினர் 'முன்னேறிப் பாய்ச்சல்' ஆரம்பித்ததால் வன்னிக்கு சென்ற அணி திரும்பி வந்தது. 'புலிப்பாய்ச்சல்'லில் எதிர் பட்டது.

புலிப்பாய்ச்சல் முடிந்த பின்னர் மணலாற்று முகாம்மீது நடத்தப்பட்ட புலிகளின் பாரிய தாக்குதல் தோல்வியில் முடிந்தது. அத்தாக்குதல் மட்டும் முறியடிக்கப்படாமல் இருந்திருந்தால் தற்போதைய படை நடவடிக்கை இந்தளவுக்கு முன்னேறியிருக்காது. அதுதவிர வடக்கு-கிழக்கு நிலத் தொடர்பை துண்டிக்கும் முல்லை முற்றுகையும், வியூகமும்கூட சாத்தியமில்லாமல் போயிருக்கும்.

அதுமட்டுமல்லாமல் ஆனையிறவு முகாமை தாக்கியழிக்கவும் ஒருமாதகாலமாக புலிகள் போரிட்டனர். அம் முகாம்தான் வன்னி முற்றுகைக்கான முக்கிய தளங்களில் ஒன்றாகவும், யாழ்குடாநாட்டு முற்றுகைக்கான முக்கிய தளங்களில் ஒன்றாகவும் இன்று விளங்குகிறது.

ஆக, படையினர் வடக்கே தம் வியூகங்களை எப்படியெல்லாம் வகுப்பர், வியூகங்களுக்கான பிரதான முனைகளாக இருக்கக் கூடிய முனைகள் எவை என்பதை இனம் கண்டு தாம் முந்திக்கொள்ள, 1990ம் ஆண்டு முதலே பிரபாகரன் முயன்றுவந்திருக்கிறார்.

அந்த முயற்சிகளில் சில தோல்வியைத் தழுவின. குறிப்பாக ஆனையிறவு, மணலாறு முகாம்களை புலிகளால் அழிக்க முடியாமல் போனதால் இன்றைய சமரில் சில சாதகங்களை புலிகள் இழந்துள்ளனர்.

அதேவேளை மாங்குளம் முகாம் தகர்ப்பு போன்றவையும், குறிப்பாக 1996ல் முல்லைத் தீவு முகாம்மீதான அழித்தொழிப்பு யுத்தமும் புலிகளுக்கு இன்று கைகொடுத்துள்ளன.

**முல்லைத்தீவு முகாம் மட்டும் புலிகளால் தாக்கப்படாமல் இருந்திருந்தால் இன்றைய சமரில் புலிகளின் பிரதான தளப்பகுதியின் இதயமான முல்லைத்தீவுக்குள் படையினரின் கரம் நீண்டிருக்கும். புலிகளுக்கு பலத்த பாதகம் ஏற்பட்டிருக்கும்.**

யாழ் குடாநாடு புலிகளின் பிரதான தளம்: தனிநாடே கிடைத்தமாதிரித்தான் என்ற பிரமைகள் புலிகளின் ஆதரவாளர்கள் மத்தியில் இருந்தபோதும், பிரபாகரன் அந்த மாயைக்குள் சிக்கிக் கொள்ளவில்லை. மாறக் கூடிய சூழல்களை எதிர்நோக்கும் அளவுக்கு சமர்களை விஸ்தரித்திருந்தார். அதனால்தான் தளம் மாறியபோதும் புலிகள் தம் பலம் இழக்காமல் தாக்குப்பிடிக்க முடிந்தது.

யாழ் குடாநாட்டை இழந்தமை, கிளிநொச்சி நகரை இழந்தமை, இன்று முல்லையைச் சுற்றிய முற்றுகைகள் என்பவை புலிகள்தம் கால்களைப் பரப்பி நிற்பதைத் தடுத்துள்ளன. மக்களிடமும்- குறிப்பாக வடபகுதி மக்களிடம் நம்பிக்கையீனங்கள், விரக்திகளை உருவாக்கியுள்ளன. இதனால் அரசியல் ரீதியிலும், உள்நாட்டு பொருளாதார நிதி ஆதார நிலையிலும் புலிகள் பலவீனமாகியுள்ளனர்.

ஆனால் புலிகளின் உண்மையான பலத்திற்கு- பலநூறு மடங்கு மேலாக- பிரமைகள் காரணமாக மக்கள் கொண்டிருந்த அதீத நம்பிக்கைகள்தான் உடைந்துள்ளன. அதனைத்தான் புலிகளால் காப்பாற்ற முடியாமல் போயிருக்கிறது.

**உண்மையில் இன்றுவரை தாம் ஒரு மிகச் சிறந்த கெரில்லா இயக்கம் என்பதை புலிகள் நிரூபித்தே வருகின்றனர். சர்வதேச கெரில்லா இயக்க வரலாற்றில் எந்தவொரு வெளிச்சக்தியின் பின்பலமும் இல்லாமல் ஒரு நாட்டின் ஒன்று குவிந்த படைபலத்தைச் சந்திக்கும் கெரில்லா அணி புலிகள் மட்டும்தான்.**

தற்போதைய நிலையை வைத்து, புலிகளின் பலம் வீழ்ச்சியடைந்துவிட்டது, என்பவர்கள் இரு தரப்பு ஆட்பலம், ஆயுதபலம் என்பவற்றையே ஒப்பிடத் தவறுகிறார்கள்.

நீண்டகால யுத்தம் இரு தரப்புக்கும் புதிய அனுபவங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. ஆட்பலம், ஆயுதபலம் உத்திகள் என்பவற்றில் மாற்றங்கள், வளர்ச்சிகள் என்பவற்றைக் கொண்டுவந்திருக்கிறது. எனவே அதற்கேற்பவே களநிலவரங்களில் புதிய காட்சிகள் தோன்றுகின்றன.

படையினரால் தொடர்ந்து கட்டம் கட்டமாக நகரமுடியும் அனுபவங்கள் மூலம் அதற்கேற்ற நகர்வுகளை மேற்கொள்ளுகின்றனர். முதல் முயற்சியாக புளியங்குளத்தையும் நெடுங்கேணியையும் இணைத்து முல்லையை கிழக்கில் இருந்து தனிமைப்படுத்தி துண்டாட முடியும். ஆனால் அத்தோடு புலிகளின் யுத்தம் முடிவடையப் போவதில்லை. அது மட்டுமல்லாமல் புலிகளின் கெரில்லாப் போர் வீச்சும் புதிய உத்திகளுடன் தொடரவே செய்யும். அதற்கேற்ப தமது சக்திகளுக்கு பலத்த சேதாரம் இல்லாத சமர் உத்திகளையே புலிகள் கையாளுகின்றனர்.

**இதேவேளை படை நடவடிக்கையில் தொடர்ந்து அரசு முனைப்பு காட்டும் போது தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கின்றனர். அதனால் சேதமான அரசியல் செல்வாக்கையும் புலிகள் மீளப் பெற்றுக் கொள்வார்கள். புலிகள் மீதான அதீத பிரமைகள் தகர்ந்து புலிகளின் உண்மையான பலம் பற்றிய மதிப்பீடு உருவாகும் போது புலிகள் மீதான நம்பிக்கைகளும் இல்லாமல் போய்விடும்.**

நிலப்பகுதிகளைக் கைப்பற்றும்போது அங்குள்ள மக்கள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் பின்னர் அரசியல் நம்பிக்கையீனங்களை கொள்வதை தடுக்கக்கூடிய அணுகுமுறை அரசிடம் இல்லை. சலுகைகள், நிவாரணங்கள் என்பன மட்டும் மக்களைத் திருப்தி செய்யும் என்று அரசு நினைக்குமானால் அது தற்காலிக சூழ்நிலை மட்டும்தான்.

**புலிகளின் கைகளை பின்புறமாக திருகுவது மூலம் தான் விரும்பிய தீர்வை திணிப்பதுதான் அரசின் நோக்கமா? அதுதான் அரசியல் தீர்வு தாமதமா? என்ற சந்தேகம் பரவலாக எழுந்து கொண்டிருப்பதை அரசு கவனிக்கவில்லை என்றால், தற்காலிக யுத்த வெற்றிகள் ஓட்டைப் பாத்திரத்தில் அள்ளப்படும் தண்ணீர் போன்றதுதான்.**

"புலிகள் வீழ்ந்தால் தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கைச் சின்னம் வீழ்ந்த மாதிரித்தான். மறுபடி இதே பலம் உருவாக வேண்டுமானால் பல தலைமுறைகள் காத்திருந்து ஆகவேண்டும்!" என்று புலிகளின் ஆதரவாளர் ஒருவர் கூறியிருந்தார்.

அக் கூற்று புலிகளின் ஆதரவாளரிடம் இருந்து வந்தாலும்கூட பெரும் படை பலத்தை எதிர்த்து புலிகள் போரிடும் காட்சியை- அவர்கள் பெற்றுள்ள அனுபவத்தைக் காட்டுகிறது. இவ்வாறான கெரில்லா அணி உருவாகுவது அபூர்வம்தான்!

படைத்தரப்பினர்கூட- புலிகளை எதிர்த்தாலும்- அவர்களது ஆற்றலை குறைத்து மதிப்பிடவில்லை.

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**தலைநகரில்** தமிழர் நடவடிக்கைக்குழுக் கூட்டம் கடச்கட நடைபெற்ற சூடு தணியாமலேயே முடிவுற்றதாம். நீலமானவரை ஒரு பிடி பிடித்தாராம் குமாரர். உடையார், பிறத்தியார் செத்தவீட்டுக்கு தன் பொல்லை அனுப்பினமாதிரி கூட்டான கட்சித் தலைவர்களும் ஒரு பார்வையாளரை அனுப்பி வைச்சவையாம். என்ன சங்கதி நடக்கிறது எண்டு 'வோச்' பண்ணி மேலிடத்துக்கு ரிப்போர்ட் கொடுக்கிறதும் ஆச்சு, ஆள் அனுப்பின மாதிரியும் ஆச்சு. கல் ஒன்று மாங்காய் இரண்டு. விஷயம் வெளிச்சதாலைதான் குமாரர் கொதிச்சாராக்கும்!

**யார் இந்த** தமிழர் நடவடிக்கைக்குழு? கடந்தவாரத்தின் முக்கிய கேள்வி அதுதான். அவை யாராக இருந்தால் என்ன? எத்தனையோ தமிழ்க் கட்சிகள் இருந்தும், நாலுபேர் புதுசாக வந்துதான் புத்திசொல்ல வேண்டி இருக்குது எண்டால் யார் விட்ட பிழை? குறிப்பிட்ட குழுவில் உள்ளோருக்கு எத்தனை பிள்ளைகள்? எந்தெந்த நாட்டில் செட்டிலாகியிருக்கினம்? எண்டதெல்லாம் இப்ப தேவையான ஆராய்ச்சிதானோ? பிள்ளையள் பிற நாடு போயும், அவை ஓடாமல் இந்த நாட்டில் இருக்கினமல்லோ; அது போதும். "தமிழ்க் கட்சித் தலைவர்களின் குடும்பங்கள் மட்டும் என்ன களத்தில் நிற்கிறார்களா? அங்கு களைத்துப் பணியாற்றும் தோழர்களுக்கு பீனேன்ரீ போட்டுக் கொடுக்கிறார்களா?" எண்ட ஸ்ரைலில் கேட்டார் பாருங்கோ அந்தக் குழுப் பிரமுகர் ஒருத்தர். "அப்படி எதிர்பார்க்கிறது தவறுதானே!" எண்டு சொன்னேன். "அப்பிடி எண்டால் எங்களுக்கு ஏன் அது பொருந்தாது? கிண்டலும் கண்டலும் தேவைதானோ?" எண்டு அவர் கேட்டார் பாருங்கோ ஒரு கேள்வி. நான் கப்சிப்! உதுக்குத்தான் சொல்லுறது யோசித்துக் கதைக்க வேணும் எண்டு. குடும்பத்தை இழுப்பானேன்? குறிப்பிட்டவர்கள்மீது சரி பிழை இருந்தால், அல்லது குடும்பம் அரசியலில சம்பந்தப்பட்டு இருந்தால் அதைப்பற்றி பேசலாங்கோவன். அதுதானுங்கோ ஆரோக்கிய அரசியல்.

**நீங்களும்** கேள்விப்பட்டிருப்பியள், நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தர் பல்டி, சூப்பர் பல்டி, சுருள் பல்டி எண்டு பலரகமாய் இருக்குதுங்கோ பல்டி. ஆனால் எந்தப் பல்டியும் கூட்டான கட்சியின் சங்கரியார் அடிச்ச பல்டிக்கு முன்னால் கவ்வவேணும் மண்ணை! தரைப்பாதை திறப்பு... அதென்ன பிரசாதம்...? ஆ... வரப்பிரசாதம் எண்ட சீமானை, கொள்ளைக் கோமானை "நல்லா மாட்டுப்பட்டுப் போனியள்!" எண்டு யாரோ மிரட்டிப்போட்டினமாம். அதனால் கடந்த வாரம் அடித்தார் பல்டி. உடன் சண்டை நிறுத்தப்படவேண்டுமாம். அடிடாசக்கை. 97ம் ஆண்டின் சிறந்த பல்டியாளராக அவரை கௌரவித்து மெய்சிலிர்ப்போமாக. நல்லா குத்துகினம் காது. கொடுக்கிறவை கொடுக்கலாம்.

**யாழ்ப்பாணத்தில்** சிவில் அதிகாரிகளாகவும் சீருடையினரே நியமனமாம். நல்லதொரு முயற்சி. இப்படியே போனால் தீர்வுப் பொதியைப் பற்றியும் எதிர்காலத்தில் அவர்களுடன்தான் பேச்சு நடத்தக்கூடிய சீரிய மாற்றம் தோன்றும். பிறகென்ன- எல்லாம் தீர்ந்தமாதிரித்தான். இதுவும் ஒரு வரப்பிரசாதம் மாதிரித்தானோ தெரியேல்லை? சங்கரியாரிடம்தான்கேட்டு அறிய வேணும்.

**ஒரு வார காலத்திற்கு** ஆடு மாடு வெட்டக்கூடாது எண்டு கடும் தடை. வெசாக்கை முன்னிட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு. உயிர்ப்பலி கூடாது எண்டது நல்ல பொலிசி. மனமார நான் பாராட்டிக் கதைச்சுக் கொண்டிருக்கும்போது, பாழாய்ப்போன ரேடியோவிலை வன்னியில் சண்டை எண்டு இரு தரப்பிலும் பலியான ஸ்கோர் சொல்லத் தொடங்கிப்போட்டினம். "இப்ப என்ன மாதிரி சொல்லப்போறீர்?" எண்டார் நண்பர். நான் விட்டுக் கொடுப்பேனோ. அவை சொன்னது ஆடு மாட்டைத்தானே; சண்டை புலியோடையல்லோ! "புலி புலிதான். ஆடு மாடு, ஆடு மாடுதான். வித்தியாசம் புரியாட்டி என்ன செய்யுறது?"

**பெரும்பான்மை** இன அதிகாரிகளைவிட தமிழ் அதிகாரிகள்தான் தமிழ்ச் சனத்தை கசக்கிப் பிழிவிறதிலை முன்னணியில் நிக்கினமாம். ஒரு அதிகாரியிடம் நெற்றிக்கு நேராகவே கேட்டுப்போட்டேன். அவர் சொன்ன விளக்கம் இதுதான்: "அப்படிச் செய்யாட்டி எங்களிலும் சந்தேகம் வந்துபோடுமல்லோ, அதுதான் கொஞ்சம் ரஃப்பா நடக்க வேண்டிக் கிடக்கு" எண்டார். எல்லோரும் நல்லவரே! சனம்தான் பாவம் கெட்ட சனம்.

**ச் சா...ச்சா** சென்னையில் நடந்த இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியில் சென்னை வானொலியில் கொடுத்தினம் பாருங்கோ வர்ணனை! செந்தமிழ் தேன் வந்து பாய்ந்தது காதினிலே. போட்டியை நேரில் பார்த்தது மாதிரியே இருந்தது. இங்கும் கொடுக்கினம் வர்ணனை. கொடுக்கிறது கொஞ்சூண்டு நேரம். அதுக்குள்ளும் தூங்கி எழுந்த மாதிரி ஒரு குரல். அது போதாது எண்டு ஒரு வேடிக்கை. "இப்போது அரவிந்த டி சில்வா ஆட்டம்...பைரவி ஒரு நல்ல நடன ஆசிரியை!" கேட்டவர்களுக்கு அதிர்ச்சி. பீம்சிங் என்ன இது புதுக்குழப்பம்? அதொன்றுமில்லை- விளம்பரம் குறுக்கே புகுந்திட்டுது! இப்படியே போனால் "விளையாடுவது எங்கள் ரீம்; நாம இலங்கையர்" எண்டு அடிக்கடி நினைவூட்டி அறிக்கை விடத்தானே வேணும்!

**போரில் அல்லல் படுவோர் நிலையை அன்றே சொன்னாருங்கோ பட்டினத்தார்.**

**"மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம்**
**கேடுண்டு எனும்படி கேட்டுவிட்டோம் இனிக் கேள்மனமே**
**ஓடுண்டு கந்தையுண் டுள்ளேயெழுத் தைந்தும் ஓதவுண்டு**
**தோடுண்ட கண்டன் அடியார் தமக்குத் துணையுமுண்டே!"**


படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# 'புலி' வேட்டை என்ற பெயரில் 'மான்' வேட்டை

அரசியல் தொடர்

132

அற்புதன் எழுதுவது

## கைவிடப்பட்ட கோட்பாடுகள்

யாழ்ப்பாணத்திற்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் இந்தியப் படையினருடன் சென்றபோது ஆட்பற்றாக் குறையை தீர்க்கும் நோக்கமே முன்நின்றது. அதனால் தவறான நபர்களுக்கும் முக்கியத்துவம் ஏற்பட்டது என்று கூறியிருந்தேன் அல்லவா.

உதாரணத்திற்காக ஒரு சம்பவம்;

யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்தவர் பொன்னுத்துரை தங்கராசா. சுதாகர் என்பது இயக்கப் பெயர். தங்கன் என்றும் அழைக்கப்பட்டார்.

இவர் முதலில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க ஆதரவாளராக இருந்தவர்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தை குறிப்பிடவேண்டும். ஆதரவாளர் என்றால் என்ன, உறுப்பினர் என்றால் என்ன? என்னும் வேறுபாடு 1983க்கு பின்னர் இல்லாமல் போயிருந்தது.

அதனால் இயக்க உறுப்பினர்களை விட ஆதரவாளர்களே முக்கியஸ்தர்களாக மாறிய சம்பவங்களும் உண்டு.

உறுப்பினர் என்பவர் இயக்கத்தின் வளர்ச்சிக்காக தன் நலன்களை கீழ்ப் படுத்தி உழைப்பவர். இயக்கத்தின் கட்டளைகளுக்கு எந்நேரமும் கீழ்ப்படிய வேண்டியவர். ஆதரவாளர் என்பவர் அப்படியல்ல. அவர் இயக்கத்திற்கு வெளியே இருந்து ஆதரவு வழங்குபவர். இயக்க நலனுக்கு தன் சொந்த நலன்களை கீழ்ப்படுத்தும் தேவை ஆதரவாளருக்கு கிடையாது.

இயக்க ஆதரவாளர் என்பவர் இயக்க உறுப்பினருக்கு மேற்பட்டவரல்ல. தன் நலன்களை இயக்கக் கொள்கைக்காக அர்ப்பணிக்க முன்வந்த உறுப்பினருடன் ஒப்பிடும்போது இயக்க ஆதரவாளருக்கு உள்ள முக்கியத்துவம் இரண்டாம் பட்சமானதே.



காட்டுக்குள் பெண்புலிகள்

தற்போதும் புலிகள் இயக்கத்தின் சில அஞ்சலிப் பிரசுரங்களில் உறுப்பினர்களுடன் இணைந்து ஆதரவாளர் ஒருவர் பலியானால் உறுப்பினருக்கு முதல் மரியாதை கொடுத்துவிட்டே இயக்க ஆதரவாளருக்கும் மரியாதை வழங்கப் பட்டிருப்பதை கவனிக்கலாம்.

அன்றுமுதல் இன்றுவரை இயக்க கட்டமைப்பு தொடர்பான அடிப்படை விடயங்களில் பிரபாகரன் உறுதியாக இருப்பதும் அந்த இயக்கத்தின் ஆச்சரிய கரமான சாதனைகளுக்கு ஒரு பிரதான காரணம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்பில் 1983க்கு முன்பாக அவ்வாறான அடிப்படைக் கோட்பாடுகள் இருந்தபோதும் பின்னர் கைவிடப்பட்டன.

அதனால் தமது சொந்த நலன்களுக்காக இயக்கங்களை ஆதரித்தவர்கள் கூட இயக்கத் தலைமைகளை துதிபாடிக் கொண்டு தங்களை முக்கிய நபர்களாக மாற்றிக் கொண்டனர். இயக்க உறுப்பினர்களைக்கூட அந்த ஆதரவாளர்கள் மேய்க்கத் தொடங்கினர். சுயமரியாதை உள்ள உறுப்பினர்கள் அதனை விரும்பாத போது அவர்களுக்கு இயக்கம்மீதான பற்றுக் குறைந்தது. அது இலட்சியம் மீதான நம்பிக்கையீனமாக மாறியது. அதனால் போர்க்குணமிக்க பலநூறு உறுப்பினர்களை ஏனைய இயக்கங்கள் இழந்தன.

## பதவிகளும்-பாய்ச்சலும்

அவ்வாறு இழந்தபோது வெற்றிடங்களை நிரப்ப தகுதியில்லாத நபர்கள் கொண்டுவரப்பட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்பிலும் அதுதான் நடந்தது. இயக்க ஆதரவாளராக இருந்து கொண்டே இயக்கத்தின் பெயரைப் பயன் படுத்தி சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர் தங்கன். அதனால் தண்டிக்கப் பட்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத் தொடர்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

அதன்பின்னர் புளொட் இயக்கத்தின் ஆதரவாளராக மாறினார். அங்கும் சரிப்பட்டு வரவில்லை. கொழும்பில் நின்ற வரதராஜப்பெருமாளை சந்தித்து உணர்ச்சிப்பிழம்பாக நடித்தார் தங்கன்.

நம்பிவிட்டார் வரதராஜப்பெருமாள். ஈ.பி.ஆர்.எல்.எஃப் இந்தியப் படையோடு யாழ் சென்றபோது தங்கன் எனப்படும் சுதாகரும் ஒரு முக்கிய புள்ளி.

யாழ்மாவட்டத்தின் அரசியல் பொறுப்பாளர்களில் ஒருவராக சுதாகருக்கும் பதவி வழங்கப்பட்டது.

மானிப்பாய் பகுதிக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவர் நிசாம். அவரது சொந்தப் பெயர் பிரபாகரன். இணுவிலைச் சேர்ந்தவர்.

நிசாமுக்கும்-சுதாகருக்கும் இடையே தங்களில் யார் பெரியவர் என்று போட்டி இருந்தாலும் படுபாதகச் செயல்களிலும் இருவரும் சளைத்தவர்களல்ல.

படுபாதகச்செயல் என்றதும் வீரமான செயல்கள் என்று நினைத்துவிடக்கூடாது. அப்பாவிகளை கொல்லுவதில் காட்டிய வீரம் என்பதே அர்த்தம்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைக்கு புலிகள் இயக்கப் பொறுப்பாளராக இருந்தவர் பாரத்.

சுதாகர் கோஷ்டி பாரத்தைத் தேடிச் சென்றது. பாரத் வீட்டுக்குள் புகுந்தது. அங்கு பாரத் இல்லை. பாரத் இல்லா விட்டால் என்ன? பாரத்தின் தங்கை அழகாக இருந்தாள்.

அந்தப் பெண்மீது பாய்ந்தான் சுதாகர். அழுதாள். துடித்தாள். மன்றாடினாள். பாய்ந்தவர்களுக்கு மனம் இரங்கவில்லை. பாலியல் வல்லுறவுக்கு உள்ளானாள்.

அத்தோடு விட்டார்களா? பாலியல் வல்லுறவுகொண்டுவிட்டு அப் பெண்ணின் உடலை துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாக்கிவிட்டுச் சென்றனர். அப் பெண்ணின் பெயர் ரஞ்சி.

சுதாகர் குழுவில் இருந்த உறுப்பினர்களில் ஒருவர் ராஜா. அவருக்கு ஒரு பெண் மீது காதல் ஏற்பட்டது. காதலுக்கு வீட்டார் எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஆயுதம் ஏந்தி களம் புகுந்தார் சுதாகர். சாதாரண களமல்ல. ஒரு முகாமைத் தாக்கும் தீவிரத்துடன் குறிப்பிட்ட பெண்ணின் வீட்டை நோக்கிமோட்டார் ஷெல்கள் ஏவப்பட்டன. துப்பாக்கி வேட்டுக்கள் பொழியப்பட்டன. கதவை உடைத்து உட்பிரவேசித்து வெற்றிகரமாக பெண்ணைக் கைப்பற்றிச் சென்றனர்.

புலிகளின் ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்படுவோர் வீடுகளில் கொள்ளையடிப்பது, பணம் கறப்பது போன்ற நடவடிக்கைகளால் தனக்கு சொந்தமாகவே பணம் திரட்டிக் கொள்ளவும் சுதாகர் மறக்கவில்லை.

## கிட்டு மன்னிப்பு

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் கொள்கைரீதியாக உறுதிவாய்ந்த உறுப்பினர் ஒருவர் புலிகள்மீது கோபப்பட்டிருந்தால் அதனைப் புரிந்துகொள்ள முடியும்.

தமது இயக்கத்தை புலிகள் ஏன் தடை செய்யவேண்டும். தமது தோழர்களை புலிகள் ஏன் கொல்லவேண்டும் என்ற கோபத்தில் புலிகள்மீது ஆத்திரப்பட்டார்கள் என்று சொல்லலாம்.

# கட்டுப்பாடற்ற உறுப்பினர்களும் கெட்டுப்போன இயக்கங்களும்

ஆனால் சுதாகர் போன்ற சமூகவிரோத சக்திகளுக்கு புலிகள் மீது ஏன் அத்தனை ஆத்திரம்?

அதற்கும் காரணம் இருக்கிறது.

சுதாகர் சமூகவிரோத செயல்களில் ஈடுபடுவதாக மானிப்பாய் மக்கள் பலர் கிட்டுவிடம் முறையிட்டனர்.

50 பேர் கையொப்பமிட்டு கிட்டுவிடம் மனுக் கொடுத்தனர். சுதாகரை பிடிப்பதற்காக கிட்டு சென்றார்.

சுதாகரின் மனைவி அப்போது கர்ப்பிணியாக இருந்தார். தன் கணவரை தண்டித்தால் தனக்கும் வயிற்றில் உள்ள குழந்தைக்கும் யாருமில்லாமல் போய்விடுவார்கள் என்று மன்றாடினார். கிட்டுவின் வாகனம் முன்பாக றோட்டில் படுத்துவிட்டார்.

அதனால் சுதாகரை மண்டையில் போடும் எண்ணத்தை கைவிட்டு திருப்பிச் சென்றார் கிட்டு. இது நடந்தது கிட்டு யாழ் மாவட்ட புலிகளின் தளபதியாக இருந்த காலத்தில்.

கிட்டு மட்டும் அன்று மனமிரங்காமல் இருந்திருந்தால் சுதாகர் என்ற சமூகவிரோதியால் 1987க்கு பின்னர் அப்பாவிகள் பலர் படுகொலையாகியிருக்க மாட்டார்கள்.

## சாதனை

மானிப்பாய் பகுதிக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப் இராணுவப் பொறுப்பாளராக இருந்த நிசாம் படுகொலைகளில் தனிச்சாதனையாக 87 பேரைக் கொலை செய்தவர்.

மண்வெட்டியால் தலையை வெட்ட, வெட்டப்பட்ட தலை எப்படித் துடித்தது என்பதை விபரிப்பதில் இவர் கோஷ்டியில் இருந்த சிலருக்கு அலாதிக்குஷி.

நிசாமால் கொல்லப்பட்டவர்களில் சுன்னாகத்தைச் சேர்ந்த கஜன் போன்ற சிலர்தான் புலிகள் இயக்கத்தினர். ஏனையோர் பெரும்பாலும் அப்பாவிகள்.

தனது சகோதரியின் கணவரையும் புலிகள் இயக்க ஆதரவாளர் என்று குற்றம் சாட்டிச் சுட்டுக் கொன்றார் நிசாம்.

சகோதரியின் கணவரை நிசாமுக்கு சிறுவயதில் இருந்தே பிடிக்காது. நிசாமின் போக்கையும் அவர் கண்டித்துவந்தார். அதனால்தான் அதிகாரமும் துப்பாக்கியும் கைக்கு வந்ததும் சுட்டுத்தள்ளினான்.

நிசாமுக்கும்-சுதாகருக்கும் இடையே நிலவிய பூசல் பெரிதாகியது. அதற்குக் கொள்கை முரண்பாடு என்று பெயர் சூட்ட முடியாது. 'கொள்ளை முரண்பாடு' என்பதே பொருத்தமான பெயர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளராக இருந்தவர் ரவீந்திரன். இயக்கப் பெயர் ராபீக்.

ராபீக் முதலில் சிறந்த உறுப்பினர்களில் ஒருவராகவே இருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். உளவுப்பிரிவிலும் இருந்தவர். பின்னர் இயக்க உட்பிரச்சனைகளின்போது பத்மநாபா இவரை நேரடியாக வழிநடத்தத் தொடங்கினார். பத்மநாபா மற்றும் இயக்கத் தலைமையின் பலவீனங்கள் தடுமாற்றங்கள் என்பவற்றை புரிந்துகொண்ட ராபீக் தனது பங்குக்கு தானும் பணம், நகை சேர்த்து வைப்பது தவறில்லை என்ற முடிவுக்கு வந்தார்.

தவறான சக்திகளை உள்வாங்கி ஊக்குவிக்கும்போதும், குறைந்த பட்சமாக சில அடிப்படை நியதிகளைக்கூட இயக்கத் தலைமை கைவிடும்போதும் ஏற்கனவே இருந்த போர்க்குணமிக்க உறுப்பினர்கள் ஒன்றில் அந்த அலைக்குள் சிக்கி கெட்டுப் போகிறார்கள். அல்லது இயக்கத்தைவிட்டு வெளியேறுகிறார்கள்.

ராபீக் வெளியேறவில்லை. சுதாகர் போன்றவர்கள் எத்தனை மோசமானவர்கள் என்று தெரிந்தும்கூட அவர்களுடன் இணைந்து செல்லத் தீர்மானித்தார். பத்மநாபாவின் கட்டளைகளை மறுபேச்சின்றி நிறைவேற்றும் ஒருவராக இருந்தமையால் யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பு ராபீக்குக்கு தரப்பட்டது.

ராபீக்குடன் சுதாகருக்கு நெருக்கம் அதிகமானது. அடித்த கொள்ளையில் ஒரு பகுதியில் ராபீக்குக்கு கொடுத்துக் கொண்டார்.

சுதாகர் ஒரு அருமையான தோழர் என்று பத்மநாபாவிடமும் அடிக்கடி பரிந்துரை செய்தார் ராபீக்.

சுதாகருக்கும் நிசாமுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையில் ராபீக் சுதாகர் பக்கம் நின்றதால், நிசாம் இயக்கத்தை விட்டு வெளியேறினார்.

வெளியேறியவர் வெறுங்கையுடன் செல்லவில்லை. திரட்டிய பணம், சுருட்டிய நகை சில ஆயுதங்கள் என்பவற்றுடன் வெளியேறினார்.

கொழும்புக்கு ஓடிய நிசாம் அங்கு அட்டகாசம் செய்தார். கொழும்பு தங்குவிடுதி ஒன்றில் ஏ.கே.47 துப்பாக்கிகள் இரண்டு, பிஸ்டல் இரண்டு என்பவற்றுடன் கைது செய்யப்பட்டார். தற்போது இந்த சமூகவிரோதி மட்டக்களப்பில் குடும்பஸ்தராக இருக்கிறார்.

அதன்பின்னர் மானிப்பாய் தொகுதியில் சுதாகர்தான் தனிக்காட்டு ராஜா.

இப்படிப் பல சுதாகர்கள் இயக்கங்களில் இருந்தனர். பின்னர் ஆடி முடிந்ததும் விலகிப் போய் சுருட்டியதை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்தியப் படை காலத்தில் இயக்கப் பெயரில் சமூகவிரோதச் செயல்களுக்கு தலைமைதாங்கிய அல்லது பொறுப்பாக இருந்த பலர் தற்போதுள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப்புக்குள் இல்லை என்பதையும் குறிப்பிட்டேயாகவேண்டும்.

இப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப்பின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு இந்தியப் படை காலகட்டத்தில் முடிவுகளை எடுக்கும் அதிகாரங்களும் இருந்ததாகத் தெரியவில்லை. வரதராஜப் பெருமாள் மட்டுமே விதிவிலக்கு.

மறைந்த பத்மநாபாவைவிட பல படிகள் உயர்ந்த அதிகாரம் கொண்டவராக வரதராஜப்பெருமாள் விளங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு.

திருமலையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்க பொறுப்பாளராக இருந்தவர் ஜோச். புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளிலும் ஜோச் முன்னணியில் நின்றவர்.



காயமடைந்த இந்தியப்படையின் வீரர்களை 'புனே' இராணுவ மருத்துவமனையில் பார்வையிடுகிறார்கள் ராஜீவ், சோனியா, திருமதி திபீந்தர் சிங் மற்றும் திபீந்தர் சிங்.

ஜோச்சின் துணிச்சலையும், துடிப்பையும் பார்த்த வரதராஜப்பெருமாள் அவரை தன் கைக்குள் போட்டுக் கொண்டார்.

வரதராஜப் பெருமாளைவிட ஈ.பி.ஆர்.எல்.எஃப்பின் மூத்த உறுப்பினர் ஜோச்தான். ஆனாலும் வரதன் கிழித்த கோட்டைத் தாண்டாத ஒருவராக ஜோச் மாறினார்.

பத்மநாபா திருமலை சென்றால் வரதராஜப் பெருமாள், ஜோச் இருவரும்தான் அவர் யார் யாரைச் சந்திக்க வேண்டும் என்பதையும் முடிவு செய்யக்கூடியவர்களாக இருந்தனர்.

## அதிகாரி சொன்னது

கட்டாய ஆட்சேர்ப்பில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். ஆகிய இரண்டும்தான் இந்தியப்படை காலத்தில் முன்னணியில் நின்றனர்.

ரெலோ இயக்கத்தினர் அத்தனை தீவிரம் காட்டவில்லை. புளொட் இயக்கம் இந்தியப் படையுடன் இணைந்து செயற்பட ஆர்வம் காட்டவில்லை.

கொழும்பிலிருந்து புளொட் இயக்கத்தினர் வெளியிட்ட அவர்களது கட்சிப் பத்திரிகையில் இந்தியப் படைக்கு எதிராக புலிகள் போரிடுவதை பாராட்டியும் இருந்தனர்.

ஆனால் அதே பத்திரிகையில் புலிகளை பாசிஸ்டுக்கள் என்றும் குறிப்பிட்டிருந்தனர். இது அவர்களுக்குள் நிலவிய குழப்பத்தையே காட்டியது. ஆனாலும் புளொட் இறுதிவரை இந்தியப் படையுடன் இணைந்து புலிவேட்டைக்கு செல்லவேயில்லை.

புலிகள் தம்முடன் போரிட்டபோதும் இந்தியப் படையினரும், குறிப்பாக உயர் மட்ட அதிகாரிகளும் புலிகள்மீது மதிப்பு வைத்திருந்தனர்.

தம்முடன் இணைந்து செயற்பட்ட இயக்கங்களைவிட புலிகளையே அவர்கள் பெரிதும் மதித்தனர்.

யாழ் பல்கலைக்கழக தூதுக்கோஷ்டி ஒன்று இந்தியப் படை உயரதிகாரி ஒருவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது. அப்போது இயக்கங்களின் அத்துமீறல்கள், புலிவேட்டை என்ற பெயரில் நடைபெறும் படுகொலைகள் பற்றியும் அந்தத் தூதுக்குழுவினர் எடுத்துக் கூறினார்கள்.

அனைத்தையும் பொறுமையாகச் செவிமடுத்த அதிகாரி இறுதியில் சொன்ன கருத்து தூதுக்குழுவினரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அந்த அதிகாரி சொன்னது இதுதான்;

"புலிகளை எதிர்த்துப் போரிட இவர்களின் உதவி தேவையாக இருக்கிறது. இந்த ராஸ்கல்களை உபயோகப்படுத்திவிட்டு பின்னர் இவர்களிடம் உள்ள ஆயுதங்களைப் பறித்துவிடுவோம்"

(தொடர்ந்து வரும்)

## கொசு வேட்டையில் புலிகள்!



வன்னிக் காட்டுக்குள் புலிகள் இருந்த நேரம் அது. காட்டுக்கு வெளியே தரைப்பாதையெங்கும் இந்தியப்படை முற்றுகை. மறுபுறம் இந்திய விமானங்களின் குண்டுகள் காட்டுக்குள் மழை பொழிந்தன.

இத்தனையையும் பற்றி கவலைப்படாமல் காட்டுக்குள் இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு ஒரு பிரச்சனை. கொசுக்கள் படை படையாகச் சென்று தூங்கவும் விடாமல், இருக்கவும் விடாமல் தாக்கிக் கொண்டிருந்தன.

முகாம் பொறுப்பாளர்கள் பேச்சோடு பேச்சாக பிரபாகரனிடம் அதனைக் கூறினார்களாம். இதை வந்து என்னிடம் சொல்கிறீர்களே என்று கோபிக்கவில்லை பிரபாகரன்.

"இரண்டே நாளில் ஒழித்துக் காட்டுகிறேன்" என்று கூறினார். பொறுப்பாளர்களுக்கு சந்தேகம்.

மறுநாள் முகாம்களில் உள்ள உறுப்பினர்களுக்கு கையகலமுள்ள இரு அட்டைகள் கொடுக்கப்பட்டன. ஆளுக்கு இருநூறு கொசு அடித்துவரவேண்டும் என்று கூறப்பட்டது. பிரபாகரனும் கொசு வேட்டையில் இறங்கினார்.

கொசுத் தொல்லை குறைந்தது. சூழ்நிலைகளுக்கு பணியாமல், சூழ்நிலைகளை மாற்றும் உறுதியே தேவை என்று தன் உறுப்பினர்களுக்கு விளக்க கொசு வேட்டையையும் உதாரணமாக காட்டினாராம் பிரபாகரன்.





படிப்பகம்

www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# சமாதானத்துக்காகவே போர் என்பது வெட்டிப்பேச்சு

ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை புத்தரின் ஜனனத்தைக் குறிக்கும் வெசாக் தினத்தை முன்னிட்டு இடை நிறுத்தப்பட்டிருந்தது, என்று கூறப்பட்டது. ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினரின் மூர்க்கமான எதிர்ப்பு யுத்தம் காரணமாகவே நினைத்த வேகத்தில் படையினர் முன்னேற முடியவில்லை.

ஜயசிக்குறுய் நகர்வின் மூலம் ஓமந்தை, நெடுங்கேணி ஆகிய இடங்களைப் படையினர் கைப்பற்றி, அங்கு தம்மைப் பலப்படுத்தி வருகின்றனர்.

ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையில் ஓமந்தை, நெடுங்கேணி ஆகிய இடங்கள்வரை முன்னேறியது பற்றியே படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் இந்த இரு முன்னேற்றங்களின் போதும் படையினர் பெருமளவிலான இழப்புகளுக்கே முகங்கொடுத்திருந்தனர்.

கொல்லப்பட்டோர், காயமடைந்தோர் என ஏராளமானோர் படையினர் தரப்பில் இழப்பை எதிர்நோக்கியிருந்தனர்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பிலும் கணிசமானளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதையே அவர்கள் தரப்புச் செய்திகள் மூலமாகவும் அறியமுடிகின்றது. முதல் கட்ட சமரில் தமது தரப்பில் 64 பேர் பலியானதாக அவர்கள் கூறியிருந்தனர்.

கொல்லாமை, அஹிம்சை என்பவற்றை முதன்மைப்படுத்தியதாகவே புத்ததர்மம் விளங்குகின்றது. மனுதர்மத்தையே முழு அளவில் வலியுறுத்தி அதனையே

வாழ்க்கை நெறியாகவும் கொள்ளவேண்டுமென புத்தமதம் போதித்து நிற்கின்றது.

**இருந்தபோதிலும் புத்த மதத்தையே அரச மதமாகக் கொண்ட இலங்கையில் நடைபெறுபவை அனைத்துமே அம்மதத்தின் போதனைகளுக்கு எதிர்மாறானவையாகவே இருக்கின்றன.**

யுத்தம் மட்டுமல்ல- கொலை, சூது, கொள்ளை, பாலியல் வன்முறைகள், மோசடி என்பவை நாட்டில் பரவலாகவே பெருமளவில் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

இத்தடவை வெசாக் தினத்திற்கு முதல்நாள், கொழும்பை அண்டிய பாணந்துறைப் பகுதியில் பாலியல் வன்முறையொன்று நிகழ்ந்துள்ளது. இதுவோர் மயிர்க்கூச்செறியும் சம்பவமாகும்.

புத்த சந்நியாசியான பெண்ணொருவர், அதாவது பிக்குணி ஒருவர் காமுகர் ஒருவரால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டிருந்தார்.

இக்குற்றத்தைப் புரிந்தவர் இராணுவத்திலிருந்து விலகிய ஒரு நபர் என்று இனங்காணப்பட்டுள்ளது.

இது தவிர கொழும்பில் ஃபிஜிநாட்டைச் சேர்ந்த ஜொயல் பெரா என்ற றகர் விளையாட்டு வீரர் சில வாரங்களுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் ஈடுபட்டோருக்கு மேலிடத்து அரசியல் உறவுகள் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது.

**எனவே ஆயுதங்களைக் களைவது, வன்முறைகளை ஒடுக்குவது என இன்றைய ஆட்சியாளர்கள் எவ்வளவுதான் ஆர்ப்பரித்தாலும் அவர்களால் உறுதியாக எதனையும் மேற்கொள்ள முடியாதுள்ளது.**

தனது நியாயங்களை நியாயப்படுத்தவே அரசு போர்புரிகின்றது. ஆனால் மறுபுறத்தே இப்போரே மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ, நாட்டில் பல மாறுபாடான தன்மைகளை உருவாக்கிவிட்டுள்ளது.

**அண்மைக் காலங்களில் குற்றச் சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களில் அநேகர் ஆயுதப்படைகளிலிருந்து தப்பிவந்தோர் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.**

எனவே யுத்தத்தையே இந்த நாட்டுக்கு நேர்ந்துள்ள ஒரு சாபக்கேடு எனவும், எல்.ரி.ரி.ஈ.யினரையே பயங்கரவாதிகள் எனவும் அரசு தெரிவித்து வருகின்றது.

ஆனால் நாட்டில் இடம்பெறும் வன்முறைகள் படுமோசமானவையாகவும், அவற்றில் ஈடுபடுவோர் படுபாதகர்களாகவுமே இருக்கின்றனர்.

அண்மையில் அரசியல் பிரமுகர்களின் மெய்ப்பாதுகாப்பாளர்களுக்குப் போர்ப்பயிற்சி வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அப்போர்ப் பயிற்சி பெறச் சென்றவர்கள், பயிற்சி முடிவில் தமது வேலையை உதறித் தள்ளிவிட்டு ஓட்டம் பிடித்துள்ளனர். இச்சம்பவம் போரில் அவர்களுக்குள்ள அச்சத்தையும் வெறுப்பையுமே புலப்படுத்தியிருந்தது.

இந்நாட்டைப் பொறுத்தவரை பல்லின, பலமதக் கலாசாரங்கள்



## சிறுபான்மையினரின் நம்பிக்கையை இழக்கும் ஆட்சியாளர்கள்!

காணப்படுகின்றபோதிலும் அவற்றினிடையேயான ஒற்றுமை, நல்லிணக்கம் என்பவை தூர்ந்து போயுள்ளமைக்கு அருவருக்கத்தக்க அரசியல் நடவடிக்கைகளே முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

கடந்த வாரம் வெளியான பத்திரிகைகளில் இப்படி ஒரு வேடிக்கையான செய்தி வெளியாகியிருந்தது:

ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான அஸ்வர், முஸ்லிம் மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார். அதில் பாகிஸ்தான் அணிக்கும், இலங்கை அணிக்கும் இடம்பெறும் கிரிக்கெட் பந்தயங்களின் போது, இலங்கை முஸ்லிம்கள் இலங்கை அணிக்கே தமது ஆதரவைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டிருந்தார்.

ஏனெனில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை முஸ்லிம்களில் பலர் பாகிஸ்தான் அணிக்கு ஆதரவாகவே கோஷமெழுப்பியிருந்தனர்.

அதே சமயம் இலங்கை அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான கிரிக்கெட் பந்தயங்கள் நடைபெறும்போது இலங்கைத் தமிழர்களில் பலர் இந்திய அணிக்கே ஆதரவளிப்பதுண்டு.

இத்தகைய நடவடிக்கைகள் இலங்கையில் உள்ள சிறுபான்மை இன மக்கள், தாமும் இலங்கையர்கள் என்று பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடியவகையில் ஆட்சியதிகாரங்களில் இருப்போர் அரசியல் மற்றும் கல்வி, சமூக, பொருளாதார விடயங்களை அணுகாதிருப்பதே முக்கிய காரணமாக இருக்கின்றது.

சுருக்கமாகக் கூறப்போனால், இலங்கையின் சிறுபான்மை இனமக்கள் பெரும்பான்மைச் சிங்கள இனத்தவர்களையே ஆட்சியாளராகக் கொண்டுள்ள அரசாங்கங்கள் மீது நம்பிக்கை இழந்தவர்களாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இந்த நம்பிக்கை இன்மையைப் போக்குவதற்கு அரசியல் அணுகுமுறைகளே நல்ல பரிகாரமாக இருக்க முடியுமே தவிர, யுத்தமல்ல.

"சமாதானத்துக்காகவே யுத்தம்," என்று இன்றைய அரசு கூறிவருகின்றது. அதே சமயம் இராணுவத்தீர்வு மூலம் சமாதானத்தை எட்டிவிட முடியாது என்பதையும் ஆட்சியதிகாரத்தில் இருப்போர் அவ்வப்போது குறிப்பிட்டு வருகின்றனர்.

**வெசாக் பண்டிகை நாடு பூராவும் அனுஷ்டிக்கப்பட்ட அதே சமயம், ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட படையினரின் ஈமச்சடங்குகளுக்காக ஆங்காங்கே வெள்ளைக் கொடிகளும் பறந்ததைக் காணமுடிந்தது.**

பகைமையைப் பகைமையால் வெல்ல முடியாதென்பதையே புத்தமதம் இடித்துரைத்து நிற்கின்றது. இந்நிலையில் ஒரு பௌத்தநாடான இலங்கையில் "சமாதானத்துக்காகவே யுத்த"மென்பது ஒரு வெட்டிப்பேச்சாகவே இருக்கின்றது.

ஒருவரையொருவர் கொன்றொழிக்கும் மனப்பான்மை எப்போது அகலுகின்றதோ அப்போதுதான் ஒரு பூரண சமாதானத்தை நோக்கிச் செல்லமுடியும்.

நாட்டில் ஒரு புறம் கொடிய யுத்தமும், அதனால் பல்லாயிரம்பேர் பரிதவித்தும் நிற்கின்றனர்.

ஆனால் மறுபுறத்தே மூலை முடுக்குகளிலெல்லாம் புத்தரின் போதனைகளும், அவரது சிந்தனைகளும் பறை சாற்றப்படுவதைக் காணமுடிகின்றது.

இந்த இருவேறு மாறுபாடான தன்மைகளில் போலியாகக் காலத்தைப் போக்குவதை விடுத்து, உண்மையான சமாதானத்தை எட்டவே ஆட்சியாளர்கள் முன்வரவேண்டும்.

ஆனால் இந்த உண்மையான சமாதானம் என்பது எவ்விதத்திலும் கண்ணுக்கு எட்டுவதாக இல்லை. போர் மேகங்களே தொடர்ந்து கருக்கட்டிவருவதையே காணமுடிகின்றது.

---

# கச்சிதமான கட்டுக்கதை

## சந்திரகாசன் + ஜோசப் = கூட்டணித்தலைமை

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவராக சந்திரகாசன். செயலாளர் நாயகமாக ஜோசப் பரராஜசிங்கம். சமீபத்தில் அப்படியொரு தகவல் வெளியாகியிருந்தது.

கச்சிதமான திட்டத்தோடு கட்டப்பட்ட கதைதான். ஆனால் தமிழினத்தின் ஒற்றுமைக்கே உலைவைக்கக்கூடிய வகையில் பொறுப்பற்ற முறையில் கட்டப்பட்ட கதை.

சந்திரகாசனும் கிறிஸ்தவர். ஜோசப் பரராஜசிங்கமும் கிறிஸ்தவர். எனவே மதரீதியாக ஒன்றுபட்டு கட்சியைக் கைப்பற்றப் போகிறார்கள் என்பதுதான் சாரம்சம்.

உண்மையில் அப்படியொரு முயற்சியே நடைபெறவில்லை. பின்னர் எப்படி கதை வந்தது.

நெருப்பில்லாமல் புகையுமா? நெருப்பு இருக்கிறது.

கூட்டணிக்குள் ஜோசப் பரராஜசிங்கத்தின் செல்வாக்கு வளருவதைக் கண்டு பயந்த கூட்டணிப் பிரமுகர்கள் சிலர்தான் அந்த வதந்தி புகைய நெருப்பாக இருந்திருக்கிறார்கள்.

கூட்டணிக்குள் இரண்டு அணிகள் இப்போது இருக்கின்றன.

ஒன்று, மக்களிடம் செல்வாக்கு இழந்த போதும் தலைமைப் பதவியில் ஒட்டியிருக்கும் கொழும்பு அணி.

அரசியல் சட்ட ஞானிகள், அரசியலமைப்பு வரைவுகளில் அறிவுக் கூர்மை பெற்றவர்கள் என்று கூறப்படும் ஓரிருவரும் அவர்களின் சொல்லை மீறமுடியாமல் இருக்கும் சிவசிதம்பரம் அவர்களும்தான் அந்த முதலாவது அணி.

நீலன் திருச்செல்வம், இரா.சம்பந்தன், ஆனந்தசங்கரி ஆகியோர்தான் அந்த ஞானிகள்.

இந்த மூவருக்கும் இயக்கங்கள் என்றாலே பிடிக்காது. ஆனால் தவிர்க்க முடியாமல் புலிகளை உதட்டளவில் எதிர்க்கமுடியாமல் இருந்தாலும், புலிகளை அடிக்கும் நடவடிக்கைகளை உளமார வரவேற்பவர்கள்.

இந்த மூவர் அணியில் ஒருவரான ஆனந்தசங்கரிதான் 'தரைப்பாதை திறப்பு வரப்பிரசாதம்' என்று பேட்டி கொடுத்தவர். காரணம், வன்னி நடவடிக்கை காரணமாக இனிமேல் புலிகள் எதுவும் செய்யமுடியாது என்ற அசட்டுத் துணிச்சலில் அப்படிச் சொல்லிவிட்டார்.

இந்த மூவரில் இரா.சம்பந்தனுக்கு திருமலையில் ஓரளவு செல்வாக்கு இருக்கிறது. ஏனைய இருவரும் தமிழர்கள் மத்தியில்




அபாரமான அதிருப்தியை சம்பாதித்துக் கொண்டவர்கள்.

நீலன் திருச்செல்வம் ஒருபோதும் வடக்கு-கிழக்கில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறவே முடியாது.

இன்று நீலன் வகிக்கும் அரசியல் பாத்திரத்தை தமிழர்கள் கவனித்தே வருகின்றனர். அதற்கான பரிசை தமிழர்கள் அவருக்கு வழங்கவும் காத்திருக்கின்றனர்.

இந்த மூவர் அணியின் பிடியில் சிக்கி இருக்கிறார் மு.சிவசிதம்பரம்.

எதிர்க்கட்சியுடன் நடைபெற்ற சந்திப்பிலும் இரா.சம்பந்தன்தான் அம்பாறையை விட்டுக் கொடுப்பது, காணி அதிகாரத்தில் விட்டுக் கொடுப்பது பற்றியெல்லாம் மும்முரமாக நின்றார். சிவா மௌனமாக காணப்பட்டார்.

விட்டுக்கொடுப்பு விடயத்தில் மும்முரமாக முன்னிற்கும் இரா.சம்பந்தன் திருமலைக் குடியேற்றங்கள் பற்றி மூச்சே விடவில்லை என்பதையும் திருவாளர் பொதுஜனம் கவனித்தே வருகிறார்.

இரண்டாவது அணி எனப்படுவது ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் உள்ள அணி.

கூட்டணிக்கு இன்று ஒரு அரசியல் முத்திரை இருக்கிறது என்றால் அதற்கு காரணமே ஜோசப் பரராஜசிங்கம்தான்.

ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெற்றுக் கொடுத்த வாக்குகளுக்கு மேற்கண்ட மூவர் அணி உரிமை கொண்டாடவே முடியாது. அது தவிர அந்த மூவரில் இருவர் தேர்தலில் படுதோல்வி கண்டவர்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த தேர்தலில் கூட்டணி அலை வீசியதற்கு இரண்டே இரண்டு காரணம்தான் இருந்தது.

1. ஜோசப் பரராஜசிங்கத்தின் தனிப்பட்ட அரசியல் செல்வாக்கு. (மற்றும் போட்டியிட்ட வேட்பாளர்களின் ஓரளவான செல்வாக்கு).

2. இயக்கங்கள்மீது மக்களுக்கு ஏற்பட்டிருந்த அதிருப்தியும், மாற்று அரசியல் தலைமை இல்லாமல் போனதும்.

அதனால் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் காலத்திற்கு ஏற்ப தமது வாக்கை பயன்படுத்தினர். ஒப்பீட்டளவில் பரவாயில்லை என்ற அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தனர். அது சரியான தீர்ப்புத்தான்!

ஆக, கூட்டணிக்குள் இன்றுள்ள மக்கள் செல்வாக்குள்ள தலைவர் ஜோசப் பரராஜசிங்கம்தான்.

நியாயமாகப் பார்த்தால் கூட்டணியின் தலைமைக்கு இன்று தகுதியானவரும் அவர்தான்.

அதுதவிர கூட்டணி ஒரு ஜனநாயகக் கட்சி என்பது உண்மையானால், ஜோசப் பரராஜசிங்கத்தின் கருத்துக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஏனெனில் பல்லாயிரம் வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அவர்.

ஆனால், சமீபகாலமாக ஜோசப் பரராஜசிங்கத்தை வெட்டிவிடும் வேலைகள் நடந்திருக்கின்றன.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன முன்னணிக்கு ஆதரவு தெரிவித்தது கூட்டணி அதற்கு பிரதான காரணம் மூவர் அணிதான். அது தொடர்பாக தனது அதிருப்தியை ஜோசப் பரராஜசிங்கம் நேரடியாகவே காட்டினாராம். நொண்டிச் சாட்டுக்கள்கூறி சமாளித்தார்களாம்.

பாராளுமன்ற தெரிவுக் குழுவில் கூட்டணியின் நிலைப்பாடு, எதிர்க்கட்சியுடனான சந்திப்பில் அம்பாறையை விட்டுக் கொடுப்பது போன்றவற்றில் கூட்டணி காட்டிய வேகம் போன்றவற்றிலும் தனக்கு உடன்பாடில்லை என்று கூறிவருகிறார் ஜோசப் பரராஜசிங்கம்.

இதனால் ஜோசப் பரராஜசிங்கம் புலி அபிமானி என்பதுபோல கூட்டணியின் ஒரு முக்கிய பிரமுகரே ஆளும்தரப்பு மத்தியில் நைசாகப் பிரசாரம் செய்யத் தொடங்கியிருந்தார்.

ஒரு கட்டத்தின் பின்னர் ஜோசப் பகிரங்கமாக தமக்கு எதிராகத் திரும்பிவிடுவாரோ என்ற அச்சம் மூவர் அணிக்கு இருக்கிறது.

அதனால்தான் கச்சிதமான மூளை ஒன்றினால் பரப்பப்பட்ட மதரீதியான சதிக் கதையை மூவர் அணியும் முன்னின்று ஊக்குவித்ததாம்.

"ஜோசப் பரராஜசிங்கம் ஒரு கிறிஸ்தவர் என்பதால்தான் கூட்டணியின் இன்றைய தலைமையை வெறுக்கிறார்" என்ற எண்ணம் ஏற்படுவதை ஜோசப் விரும்பமாட்டார். எதிர்காலத் தேர்தலில் பாதிப்பு ஏற்படுத்தும் என்று கருதுவார். அதனால் இனிமேல் மௌனமாக இருந்துவிடுவார் என்று கச்சிதமான மூளைகள் கணக்குப் போடுகின்றன.

இத்தனைக்கும் தந்தை செல்வா கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்தான். மதப்பாகுபாடுகளைக் கடந்து வளர்ந்த ஒற்றுமையின் சின்னமாக அவர் விளங்கினார். இப்போது அவரது கட்சியில் சிலரே தங்கள் தலைமையை பாதுகாக்க மதப் பூசலை மெல்ல மெல்ல வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல தமிழர்கள் மத்தியில் செலுத்த நினைக்கின்றனர்.

அப்படி இல்லாவிட்டால் குறிப்பிட்ட தகவல் பரவலாக வெளியாகத் தொடங்கிய சூட்டோடு சூடாகவே கூட்டணித் தலைமை மறுத்திருக்கலாம். ஜோசப் பரராஜசிங்கத்துக்கு ஆதரவாக குரல் கொடுத்திருக்கலாம்.

உறுதியாக முரசு கூறும் தகவல் இதுதான்: சென்னையில் உள்ள தந்தை செல்வாவின் புத்திரர் சந்திரகாசனையும், ஜோசப் பரராஜசிங்கத்தையும் முடிச்சுப்போட்டு தூண்டிவிடப்பட்ட வதந்திகளில் துளியும் உண்மை இல்லை. கச்சிதமான கட்டுக்கதை. ஆனால் ஆபத்தான கட்டுக்கதை.


படிப்பகம்

www.padippakam.com

**கடந்த வாரம்**

**பூலானை பாலியல் பலாத்காரம் செய்த கல்பி பொலிஸ் நிலையத்துக்குள் பூலான் தேவியும் மல்லாவின் ஆட்களும் புகுந்து தாக்குகிறார்கள். நள்ளிரவு என்பதால் ஐந்து பொலிசார் மட்டுமே கடமையில் இருக்கின்றனர். அதில் மூன்றுபேர் மட்டுமே பூலானை பலாத்காரம் செய்த சம்பவத்தோடு தொடர்புடையவர்கள்.**

**இனி...**

பூலான் தன் துப்பாக்கியைச் சுழற்றி அடித்ததில் மண்டை பிளந்து இரத்தம் பீறிட சுருண்டு நிலத்தில் விழுந்த பொலிஸ்காரன் துடிதுடித்தான்.

பூலானின் கோபத்தையும், அவள் தம்பில் ஒருத்தனை அடித்த வேகத்தையும் கண்ட பொலிஸ்காரர்களுக்கு கை கால்கள் எல்லாம் பயங்கரக் குளிரில் நடுங்குவது போல வெடவெடக்கத் தொடங்கிவிட்டன.

முகங்கள் வெளிறி சவக்களை தோன்ற விகாரமாகக் காட்சியளித்தனர்.

பூலானும் மல்லாவும் அவர்கள்மீதே கவனமாக இருந்தனர். நாலுபேர்தான் இருக்கிறார்கள் என்று நினைத்துவிட்டனர்.

மறைவில் இருந்து துப்பாக்கியை நீட்டிக் குறிவைத்த பொலிஸ்காரர்களை அவர்கள் கவனிக்கவில்லை.

பூலான் மீண்டும் கோபம் கொப்பளிக்கும் குரலில் கத்தினாள்:

"என்னடா பார்க்கிறீர்கள்? துணிகளை எல்லாம் அவிழ்த்துப் போடுங்கடா நாய்களே!"

சொன்னவள் சட்டென்று தன் துப்பாக்கி முனையால் ஒரு பொலிஸ்காரனின் வயிற்றில் இடித்தாள்.

'ஹக்...'

என்று அவன் முனகி கைகளைத் தூக்கிக் குவித்து மன்றாடினான்.

"சீ நாயே வெட்கமாயில்லை! இந்தப் பொலிஸ் நிலையத்தில் வைத்துத்தானேயடா என்னை.... என்னை...டேய் நீங்கள் எல்லாம் என்னை.... டேய்...டேய்ய்."

கத்திக்கொண்டே பூலான் தன் காலால் உதைத்த உதையில் கைகூப்பிய நிலையில் நின்றவன் அப்படியே பின்னடைந்து சுவரில் பிடறிபட மோதினான்.

பிடறி அடிபட மோதியவன் கண்களில், மறைவில் இருந்து குறிபார்த்த பொலிஸ்காரன் பட்டுவிட்டான். அதனால் கண்களில் அதிர்ச்சியும், ஆச்சரியமும் கலந்து அவன் அங்கேயே பார்த்த பார்வையின் வித்தியாசம் உணர்ந்த மல்லா உஷாராகி அதே திசையில் தன் பார்வையைச் செலுத்தினான்.

மல்லாவின் பார்வை திரும்புவதற்கும், பொலிஸ்காரன் தன் துப்பாக்கி விசையைத் தட்டுவதற்கும் சரியாக இருந்தது.

ஒரே பாய்ச்சலாக பாய்ந்தான் மல்லா.

மல்லா- பூலானை பாய்ந்து தள்ளிய வேகத்தில் பூலான் நிலை தடுமாறி கீழே விழுந்தாள். மல்லாவும் பூலான்மீது விழுந்தான்.

'-டுமீல்-'

துப்பாக்கிக் குண்டு குறி தவறியது.

'டுமீல்'

இன்னொரு குண்டு பாய்ந்தது.

இம்முறை குறிதவறவில்லை.

குறிவைத்த பொலிஸ்காரன் செத்துப் போனான்.

மல்லாவின் ஆள் ஒருவன்தான் அவனைச் சுட்டுக்கொன்றான்.

இரத்தவெள்ளத்தில் கிடந்த பொலிஸ்காரன் அருகே சென்று அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் பூலான்.

அடையாளம் தெரிந்தது.

நிர்வாணமாய் சிறைக்கூண்டுக்குள் கிடந்தபோது நாக்கில் ஜலம் ஊற இரசித்த நாய்தான் இது.

செத்துக் கிடந்தவன்மீது காறித்துப்பிவிட்டு தன் காலால் உடலை உதைத்துத் தள்ளினாள்.

அதே வேகத்தில் பூலான் திரும்பியபோது. மூன்று பொலிஸ்காரர்களும் வெற்றுடம்போடு. அடிவயிறுக்குக்கீழே கைகளால் மூடிக்கொண்டு நடுநடுங்கிக் கொண்டிருந்த காட்சி பூலானுக்கு திருப்தியாக இருந்தது.

மண்டைபிளந்த பொலிஸ்காரன் மயக்கமாகக் கிடந்தான்.

சற்றுநேரம் அவனை முறைத்த பூலான், அவன் நெற்றியின் மையத்தில் தன் துப்பாக்கி முனையை வைத்து அழுத்தினாள்.

'-டுமீல்-'

நெற்றியில் பொத்தல்.

நிச்சயமான மரணம்!

திரும்பி மூன்று பொலிஸ்காரர்களையும் பார்த்து: "ஓடுங்கடா வெளியே" என்றாள்.

தயங்கினார்கள்.

பூலானின் துப்பாக்கி வெடித்தது.

"அ...அம்மா!"

ஒருத்தனுக்கு முழங்காலுக்குச் சற்று மேலே தொடையில் பட்டது சூடு.

"உனக்கெல்லாம் தாய் இருக்கிறாளா நாயே? வெட்கமாயில்லை? என்ன சூடு வேணுமா ஓடுகிறீர்களா?"

ஓடினார்கள்.

பின்னாலேயே துரத்திப்போன பூலான் துப்பாக்கியைத் தூக்கிக் குறி பார்த்தாள்.

அதேபோல மல்லாவும் அவன் ஆட்களும் பூலான் அருகே நின்று தம் துப்பாக்கிகளை உயர்த்திக் குறிவைத்தனர்.

'டுமீல்'

'டுமீல்'

'டுமீல்'

கச்சிதமான வெடி!

மூன்று பொலிஸ்காரர்களுக்கும் பிடறியில் துல்லியமாகப் பாய்ந்தன துப்பாக்கிக் குண்டுகள்.

பொலிஸ் நிலையம் முன்பாக மண்கவ்வியபடி விழுந்து கிடந்தனர் மூவரும்.

வெடிச்சத்தங்கள் அந்தப்பகுதி முழுவதுமே அதிர்ந்து ஓய்ந்ததுபோலிருந்தது.

மளமளவென்று உள்ளே சென்றான் மல்லா.

பொலிஸ் நிலைய மேசையில் இருந்த தாள் ஒன்றை எடுத்து அங்கிருந்த பேனாவால் விறுவிறுவென்று எழுதினான்.

"இது மல்லாவும் பூலான் தேவியும் கொடுத்த தண்டனை. புத்லிபாயின் அவதாரம் பிறந்துவிட்டாள். பெண்களை குதறும் நாய்களுக்கு இனி இதுதான் கதி! கேட்க ஆளில்லை, உதைக்க யாருமில்லை என்ற தைரியத்தில் பெண்களின் மானத்தோடு விளையாடும் நாய்களே! ஜாக்கிரதை! உதைக்கமாட்டோம்- சுட்டுத்தள்ளுவோம் அல்லது வெட்டிக் கொல்லுவோம்!- இப்படிக்கு விக்கிரம் மல்லா!"

# கொள்ளை ராணி



பூலான்

# பூலான் தேவி

46

தருவது **ரசிகன்**

என்று எழுதிவிட்டு பூலானுக்குப் படித்துக் காட்டினான்.

பூலான் வெறி அடங்கியவள்போலத் தெரிந்தாள். துடிதுடிப்புக்களையும், குபீரிட்ட குருதியையும் பார்த்ததில் அவள் வெறி- கொந்தளித்த உணர்ச்சி அடங்கியது. இதயத்துடிப்பும் நிதானமாகி மூச்சு சீராக வந்தது.

வெளியே கிடந்த மூன்று பொலிஸ்காரர்களையும் ஒரே இடத்தில் இழுத்துப் போட்டுவிட்டு அருகே மல்லா எழுதிய எச்சரிக்கை காகிதத்தை வைத்தனர். காகிதம் பறக்காமலிருக்க அதன்மேல் கல்லை வைத்தான் மல்லா.

பொலிஸ் நிலையத்தில் மொத்தம் ஒன்பது துப்பாக்கிகள் இருந்தன. நூற்றுக்கு மேற்பட்ட துப்பாக்கிக் குண்டுகள் இருந்தன. நான்கைந்து கைக்குண்டுகளும் இருந்தன. அத்தனையையும் மல்லாவின் ஆட்கள் சேகரித்துக்கொண்டனர். துப்பாக்கிகளை ஒன்றாகச் சேர்த்து ஒரு கயிற்றால் பிணைத்துக்கட்டி வைத்துக் கொண்டார்கள்.

மூன்று பொலிஸ்காரர்களும் அவிழ்த்துப் போட்ட சீருடைகளையும் சுருட்டி எடுத்து ஒரு பைக்குள் போட்டு எடுத்துக் கொண்டான் மல்லா.

புறப்படும்போது பூலானை வைத்திருந்த சிறைக்கூண்டுக்குள் கைக்குண்டை வீசினான் மல்லா.

பெரிய சத்தத்துடன் கைக்குண்டு வெடிக்க, சிறைக்கூண்டு இடிந்து சிதைந்தது.

பூலான் மல்லாவை நன்றியுடன் நோக்கினாள். பூலானின் கண்கள் ஈரமாகியிருந்தன.

"இனியும் தாமதிப்பது கேடு. புறப்படலாம்," என்றான் மல்லா.

புறப்பட்டனர்.

திடீரென்று நினைவு வந்தவளாக பூலான்; "சே...சே..." என்றாள்.

விரைவாக நடந்தபடியே "என்ன பூலான்?"

"அந்த இன்ஸ்பெக்டர் எங்கே இருக்கிறான் என்று கேட்டு அறிந்துவிட்டு இவர்களை சுட்டிருக்கலாம்," என்றாள் பூலான்.

தனக்கும் ஏன் அந்த யோசனை வரவில்லை என்று தன்னை நொந்தபடியே "அதுதானே, தவறவிட்டு விட்டோமே, சரி எங்கே போகப்போகிறான். கண்டுபிடித்துத் தருகிறேன். போட்டுப் புரட்டி எடு- என்ன?"

பூலான் இப்போது காதலும், காதலுக்குள் காமமும் கலந்து, அதனால் மார்புகள் புடைத்துக்கொள்ள கிளர்ந்த பெருமூச்சுடன் மல்லாவை நோக்கினாள். கண்களால் விழுங்கினாள்.

## பாகம் 02

மல்லாவின் ஆட்கள் மட்டும் அருகில் வந்திருக்காவிட்டால் மல்லாவை அப்படியே கட்டிப்பிடித்து, அப்படியே.... அப்படியே...! விரிந்த கற்பனையால் பூலான் வெட்கப்பட்டாள்.

முகாமுக்குச் சென்றபோது மாலை மயங்கி இரவாகிக் கொண்டிருந்தது.

ஸ்ரீராமிடமிருந்து செய்தி வந்திருந்தது. லாலா ராமுடன் எப்படியாவது அங்கு வந்துவிடுவதாகவும் மல்லா எங்கும் வரத்தேவையில்லை என்றும் தகவல் அனுப்பியிருந்தான்.

ஸ்ரீராம் வரப்போவதாக அறிவித்திருந்ததைக் கேட்டதும் பூலானின் மனம் சஞ்சலப்பட்டது.

ஆனாலும் பொலிஸ்காரர்களைச் சுட்டு பழிக்குப்பழி தீர்த்ததில் உள்ளமெங்கும் பரவிக்கிடந்த மகிழ்ச்சியாலும், திருப்தியாலும் பூலானின் அந்தச்சஞ்சலம் நீடிக்க முடியாமல் போனது.

முகாமுக்கு அருகே இருந்த ஆற்றில் அசதிபோக ஆனந்தமாக நீராடினாள் பூலான். குளிர்ந்த நீர் அங்கங்களைத் தழுவிக் கொள்ளும்போது அலாதிச் சுகமாக இருந்தது.

குளித்து முடிந்ததும் சீருடைக்குப் பதிலாக சேலையைக் கட்டிக்கொண்டாள்.

பூலான் சீருடைக்கு மாறியபின்னர் சேலை கட்டுவது இதுதான் முதல் முறை.

நீண்டநாட்களின் பின்னர் சேலையுடன் பூலானைப் பார்த்ததும் மல்லா வழிகளை விரித்தான்.

அன்றிரவு மல்லா தன் ஆட்களுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தான்.

பூலான் சென்று படுத்துவிட்டாள். ஆனால் தூக்கம் வரவில்லை. மல்லாவுக்காக அவள் தூங்காமல் காத்திருந்தாள்.

மல்லாவுடன் மகிழ்ச்சியைப் பரிமாறினால்தான் தூக்கம் வரும்போல இருந்தது. மல்லாவை அணைத்தபடிதான் இன்று தூங்கவேண்டும் போன்றும் இருந்தது.

மல்லா சீட்டாடிவிட்டு வந்தான்.

பூலான் தூங்குவதுபோல கண்களை மூடிக்கொண்டாள்.

மெல்லிய விளக்கொளியில் மல்லாந்து தூங்கும் பூலானைப் பார்க்க மல்லாவுக்கு உணர்ச்சிகள் கட்டறுத்தன.

பூலானின் சேலை நெகிழ்ந்தும், சிறிது விலகியும் ஆங்காங்கு தெரிந்த அழகுகளும், எழுச்சிகளும், சீராக உயர்ந்து தணியும் உயர்ச்சிகளும் மல்லாவை நிறைபோதையில் விழுந்த மனிதன் போலாக்கின.

மெல்ல அவள் பக்கத்தில் படுத்துக் கொண்டான். "பூலான்" என்று கிசுகிசுப்பாய் அழைத்தான்.

பூலான் தூக்கம் போலக் கிடந்தாள். மல்லாவின் அருகாமை, மல்லாவின் பார்வை, மல்லாவின் ஏக்கம், மல்லாவின் தவிப்பு எல்லாமே புறக்கண் மூடியிருந்தாலும்கூட பூலானின் மனக்கண்ணில் தெரிந்தன.

பூலானுக்கும் இதயத்துடிப்பு எகிறியது. உடல் தணலானது. தணல் குளிர் தேடியது. உச்சி முதல் உள்ளங்கால்வரை வெப்பம் பரவ, சாரைப்பாம்பு ஊர்வது போல உடம்பெங்கும் சிலிர்ப்பு எழுந்தது. தவிப்புப் படர்ந்தது. தகிப்பில் கால் கட்டைவிரல்கள்கூட தணல் துண்டாகச் சுட்டன.

மல்லா பூலானை தழுவிக்கொண்டான். கன்னத்தில் முத்தமிட்டான். முத்தமிட்ட இடம் சூட்டுக்கோல் பட்டதுபோல சுட்டது. மல்லாவும் உணர்ச்சிவேகத்தில் பிளம்பாகிவிட்டான் என்று பூலானுக்குப் புரிந்தது.

இப்போதும் பூலான் கண்களைத் திறக்கவில்லை. மல்லா பூலான்மீதிருந்த தடைகளை ஒவ்வொன்றாய் விலக்கத் தொடங்கினான். பூலான் கண்களைத் திறக்கவில்லை. மல்லா பூலானை முழுச் சுதந்திரமாக இரசித்தான். பூலான் கண்களைத் திறக்கவில்லை. மல்லா பூலானை முழுதாக- முற்றுமுழுதாக கண்களால் விழுங்கினான். பூலான் கண்களை மூடிக்கொண்டிருக்கக் கஷ்டப்பட்டாள். மல்லா பூலானை கண்கள் விழுங்கியதில் ஏற்பட்ட மகா மகா போதையில் தன்னை மறந்து, தன்நிலை இழந்து பூலான்மீது பற்றிப் பரவினான். பூலான் இப்போதும் கண்களைத் திறக்காமல், உதடுகளை மட்டும் திறந்து "என் ராஜா... என் ராஜா.. எனக்கே ராஜா..." என்று முணுமுணுக்க, முணுமுணுக்க மல்லா மேலும் மேலும் தூண்டப்பட்டான். மேலும் மேலும் இழுக்கப்பட்டான்.

மறுநாள் விடிந்தபோது பூலான் மல்லாவைப் பார்த்து அதிர்ந்து போனாள்.

மல்லாவின் கீழ் உதட்டில் சின்னதாய் ஒரு காயம் இருந்தது.

காரணம் பூலானுக்குத் தெரியும். தங்கள் ஆட்களுக்கும் தெரிந்துவிடுமே, என்றுதான் பாதி பயந்தாள். மீதி வெட்கப்பட்டாள்.

மல்லா தன் ஆள் ஒருவனுக்கு சொன்னான்: "இரவு பூச்சி கடித்துவிட்டது." அந்த ஆள் பயந்து; "மல்லாஜி, விஷப்பூச்சி என்றால் ஆபத்தாச்சே! மருத்துவரை அழைத்துவரட்டுமா?"

"சேச்சே... அது நல்ல பூச்சிதான்; காயம் வலிக்கவேயில்லையே!" என்றான். மல்லா ஒரு குறும்புச் சிரிப்புடன்.

அந்தச் சிரிப்பில் பூலான் கலந்துகொள்ள முடியாதபடி.. ஸ்ரீராம் தூரத்தில் வருவதை அவள் கண்கள் கண்டுகொண்டன.

(தொடர்ந்து வரும்)

## இதுவரை மூவாயிரம்
## விவகாரமான சாதனை



பெண்களின் கவர்ச்சிக்குத்தான் மவுசு என்று நினைப்பது தப்பு. ஆண்களின் கவர்ச்சிக்கும் ஏகப்பட்ட மவுசு இருக்கிறது என்று நிரூபித்திருக்கிறார் ஒரு ஆண் அழகன். அவரது பெயர் ஆடம் பெர்லி.

விளம்பரப் படங்களுக்கு தன் கட்டுடல் காண்பித்து போஸ் கொடுப்பதுதான் அவரது தொழில். இலண்டனில் புகழ் பெற்ற மொடல் அழகன் அவர்தான்.

பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் அவரது கட்டான உடலைக் கண்ட பெண்கள் அவரது தீவிர இரசிகைகளாகி பைத்தியமாக அலைந்தனர்.

ஒரு குழந்தையை ஆடம் பெர்லி அணைத்துக் கொண்டிருப்பதுபோன்ற விளம்பர போஸ்டர் ஒன்று 1986ல் வெளியானது. அந்தப்போஸ்டருக்கு பெண்களிடம் பயங்கரக் கிராக்கி.

செக்ஸ் சிம்பல், பொறுப்பான தந்தை, உண்மையான காதலன், எங்கள் இலட்சிய ஆண்மகன் ஆடம் பெர்லிதான் என்றுதான் ஆயிரக்கணக்கான பெண்கள் கூறத்தொடங்கினார்கள்.

பத்துவருடத்தின் பின்னர்- இப்போதுதான் ஆடம் பெர்லியின் வண்டவாளங்கள் தண்டவாளம் ஏறியிருக்கின்றன.

ஆடம் பெர்லி அப்படி ஒன்றும் ஏக பத்தினி விரதன் அல்ல. இதுவரை அவர் காதலித்த அழகிகளின் எண்ணிக்கை ஒன்று, இரண்டு, பத்து, நூறல்ல, மூவாயிரம் பேர்.

இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை தன் காதலிகளை மாற்றிக் கொண்டிருக்கிறார். கிரிக்கெட்டில் மூவாயிரம் ஓட்டங்களைப் பெறுவதற்கே வீரர்கள் கஷ்டப்படும்போது, ஆடம் பெர்லி மூவாயிரம் ஆட்டங்களை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார் என்பது சாதனைதானே!

"நான் பெண்களைக் கவர எந்த முயற்சியும் எடுக்கவில்லை. என் பின்னால் அவர்களாகவே வந்தனர். நான் என்ன செய்வது?" என்று கேட்கும் ஆடம் பெர்லிக்கு இப்போது வயது 33.

தன் அந்தரங்கங்கள் வெளியானதை நினைத்து மனிதர் கவலையே படவில்லை. என்ன செய்கிறார் தெரியுமா? 'பெண்களைக் கவருவது எப்படி?' என்று ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறார். விரைவில் வெளிவந்து விற்பனையில் சூடு கிளப்பப்போகிறதாம். ஜொள்ளர்களுக்கு துடிப்பான செய்திதான்!

## காட்டூண் செய்த வம்பு!

வெளிநாட்டுப் பத்திரிகைக்காரர்கள் சிலர் ரொம்ப ரொம்ப விவகாரம் பிடித்த ஆட்கள். எங்கேயெல்லாம் அவர்கள் மூக்கு நீளும் என்று விவஸ்தையே கிடையாது.



டயானா பயிற்சி செய்யும் அறையில்கூட வீடியோ கமரா பொருத்தி படம் எடுத்த கில்லாடிகள் எல்லாம் இருக்கிறார்கள்.

வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் மற்றும் அவர்களது மனைவிமார்களும் இப்போதெல்லாம் உஷார் பேர்வழிகள் ஆகிவிட்டனர். ஏதாவது தப்புத்தண்டா. சில்மிஷம் பண்ணுவதென்றால் சுற்றுப்புறச் சூழலை நன்கு ஆராய்ந்தபின்னர்தான் கோதாவில் இறங்குகிறார்களாம்.

இதனால் முன்புபோல பத்திரிகைகளுக்கு சில்மிஷ விவகாரங்கள் கிடைப்பதில்லை. அதனால்தான் ஜெர்மன் நாட்டில் சிக்கலில் மாட்டியுள்ளது ஒரு பத்திரிகை. அதன்பெயர் பென்த் ஹவுஸ். நிர்வாணப் படங்களை வெளியிடுவதில் பேர் போன பத்திரிகை.

சமீபத்தில் அதன் வம்பு சற்று எல்லை மீறியதால்தான் சிக்கலில் செருகிக் கொண்டிருக்கிறது. வேறொன்றுமில்லை ஜெர்மன் அதிபரின் மனைவி கார் டிக்கியில் நிர்வாணமாக படுத்திருப்பது போலவும், அதிபர் எட்டிப்பார்ப்பது போலவும் காட்டூண் போட்டுத் தொலைத்ததாம்.

அதிகபட்ச கோபத்தில் மானநஷ்ட வழக்கும் போட்டுள்ளார் ஜெர்மன் அதிபர். 'அதையும் தான் பார்க்கலாம்' என்கிறது பத்திரிகை நிர்வாகம்.

## இதுதாண்(டா) பொலிஸ்



நம் நாட்டிலும் பெண் பொலிசார் தொகை அதிகரித்துவருகிறது. சந்திக்கு சந்தி பெண் பொலிசார் நிற்கிறார்கள். முன்பெல்லாம் சற்று கூச்சம் சங்கடம் போன்ற உணர்ச்சிக் கலவைகளோடு காணப்பட்டனர். தற்போது சுறுசுறுப்புடன் பளிச்சென்று பணியாற்றுகிறார்கள்.

சில இடங்களில் மட்டும் ஆண் பொலிசாரும் பெண் பொலிசாரும் அந்நியோன்யமாக பழகும் காட்சிகளும் கண்ணில்படாமலில்லை. நிற்க, பெண் பொலிசாரின் தீரத்தை விளக்க சமீபத்தில் இஸ்ரேலில் நடந்த ஒரு சம்பவத்தை தருகிறோம்.

இஸ்ரேலின் ஹைஃபா என்ற ஊரைச் சேர்ந்த 22 வயது இளைஞன் மிக சமார்த்தியமாய் பெரிய திருட்டுக்களை நடத்திவிட்டு பொலிசாரின் கண்ணில் விரலை விட்டு ஆட்டிக்கொண்டிருந்தான்.

இறுதியாக அவன் பஸ்சை திருடினான். அந்த பஸ்சில் தொலைபேசி வசதி உண்டு. அந்த தொலைபேசி இலக்கத்தை பெற்றுக்கொண்ட பெண் பொலிஸ் ஒருவர் புத்திசாலித்தனமாக வலை விரித்தார்.

தற்செயலாக போனில் பேசுவதுபோல பேசி, "நான் தனியே தான் இருக்கிறேன். வருகிறாயா, உன் குரலே கம்பீர ஆண்மகன் என்று தெரிவிக்கிறதே டியர், வருகிறாயா?" என்று வழிய வழியப் பேசினாராம். இளைஞனுக்கு சபலமோ சபலம். விழுந்தடித்து ஓடினான். குறிப்பிட்ட இடத்தில் மறைந்திருந்த பொலிசார் அவனைக் கொத்தாகப் பிடித்து தூக்கிக் கொண்டு போனார்கள்.

## ராசியான பிச்சை!



கண்டியில் ஒரு பிச்சைக்காரர் 'செல்டெல்' போனுடன் பிடிபட்டார் என்று செய்தி வந்ததல்லவா?

ஹொங்கொங்கில் நடந்த செய்தி இது. அங்கு சென்சுலா என்று ஒரு ஆசாமி பிச்சையெடுத்துக் கொண்டிருந்தார்.

பகலில் பிச்சையெடுத்துக் கொண்டிருந் தாலும் இரவில் மட்டும் பகட்டாக உடை அணிந்துகொண்டு இராவிடுதிகளுக்குபோய் ஜாலியாக இருப்பார் ஆசாமி. விதம்விதமான கார்களும் மூன்று வைத்திருந்தாராம்.

அவரது ஜாலியான பிச்சைக்கார வாழ்க்கையில் ஒரு சிக்கல். அவரது காதலிகளில் ஒருத்தி சற்று முரண்டு பிடிக்கவே கழுத்தை நெரித்துக் கொல்ல முயன்றாராம். இத்தனைக்கும் ஆசாமிக்கு கால்கள் இரண்டும் ஊனம்.

காதலி புகார் செய்ய, பொலிஸ் ஆசாமியைக் கைது செய்யப்போனது. கோபத்தில் ஊன்றுகோலால் பொலிசாரைத் தாக்கினாராம். அப்படியே மடக்கிப் பிடித்தார்கள்.

நீதிமன்றத்தில் விஷயத்தைக் கேட்ட நீதிபதி டென்ஷனாகிவிட்டார். "அந்த ஊன்றுகோலை பறித்து தடயமாக சமர்ப்பியுங்கள்" என்று கட்டளையிட்டார். "ஊன்றுகோல் இல்லாவிட்டால் நடக்க முடியாது" என்றாராம் பிச்சைக்கார பணக்காரர். "பரவாயில்லை தவழ்ந்து போங்கள்!" என்றார் நீதிபதி. விசாரணை முடிந்தபின் நீதிமன்றத்தில் இருந்து தவழ்ந்து தவழ்ந்து வெளியே போனாராம் பிச்சைக்காரர்.




படிப்பகம்

## தேள் என் தோழன்



↑ இந்தியாவில் கல்கத்தாவாசிகள் பலருக்கு பரிச்சயமானவர். உச்சிமுதல் உடம்பெங்கும் கருந்தேள்களுக்கு ஊர்ந்து விளையாட உரிமை வழங்கி யிருக்கிறார். 'கொஞ்சம் கூச்சமாக கிச்சு முச்சு மூட்டுவதுபோல இருக்கும் அவ்வளவுதான்' என்கிறார். சாதாரண தேள் கொட்டினாலே தாங்க முடியாது. இவரோ கருந்தேள்களுடன் சகவாசம் வைத்திருக்கிறாரே படா கில்லாடிதானப்பா!

மற்றொரு விஷயம். கொஞ்சம் காதைக் கொடுங்கள். தேள்களை கொன்று பிழிந்தால் எண்ணெய் போன்ற பொருள் கிடைக்கிறதாம். அந்த எண்ணெய் வியாபாரத்தில் இவருக்கு அமோக வசூல். அந்த எண்ணெய் 'அந்த' விடயத்தில் ஆடவர்களுக்கு போதிய ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கிறதாம். விஷயமறிந்த பலர் அண்ணரை முற்றுகையிட வியாபாரம் ஜே ஜே என்று நடக்கிறது. ■



## போவோமா ஊர்கோலம்


↑ மனிதர்கள் தங்கள் சுயநலம் காரணமாக தங்களுக்குள் மோதிக்கொள்கிறார்கள். அதற்காகவே விதம் விதமான ஆயுதங்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். மனிதனின் புத்தி இப்படிக் கெட்டுக் குட்டிச் சுவராகிக் கொண்டிருப்பதால் விலங்குகளும், பிராணிகளும் தங்கள் புத்தியை மாற்றிக்கொள்ளத் தொடங்கிவிட்டனவோ?!

படத்தில் நீங்கள் காண்பது ஆட்டின்மீது சவாரி செய்யும் குரங்காரைத்தான். தமிழ் நாட்டின் தலைநகரான சிங்காரச் சென்னையில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சிதான் இது.

இந்த விசித்திரப் பாசத்தின் பின்னால் ஒரு செண்டிமெண்டான கதையும் இருக்கிறது. இந்தக் குரங்குக் குட்டியை தாய் கைவிட்டுப் போய்விட்டது. ஆட்டின் எஜமானரான வீட்டுக்காரர் இதனை எடுத்துவந்து கண்போல் காத்து வளர்த்தாராம். குரங்குக் குட்டிமீது இந்த ஆடும் பாசத்தைக் கொட்டியதாம். அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ். இப்போது ஆடும் குரங்காரும் இணைபிரியாத பாசத்தில் இருக்கின்றனர். குரங்காரை ஜாலியாக சுமந்து திரிகிறது ஆடு. இனிய சுமை. கனக்காது இனிக்கும்!

## தங்கமடா தங்கம்

↓ சட்டென்று எடுத்தால் 'சுடப்படப்போகிறோமோ' என்று எதிரே நிற்பவர் பயந்துதான் போவார்.



ஆனால் உதட்டில் சிகரட்டை பொருத்தி இதனை 'கிளிக்' என்று தட்டி பற்றவைத்த பின்னர்தான் போன உயிர் திரும்பி வரும். அட...இது லைற்றர்! முழுக்க முழுக்க தங்கத்தால் செய்யப்பட்ட லைட்டர் இது. அமெரிக்காவில் நியூயோர்க்கில் இருக்கிறது. பணமிருந்தால் உபயோகிக்கக் கூடிய பலதில் இதுவும் ஒன்று.



## வாழையடி வாழை

↑ வாழையடி வாழையாக தலைமுறை பல கண்டவர்தான் தலையணையில் தலைவைத்துள்ள ஆச்சி. வயது என்ன தெரியுமா? அதிகமில்லை 138 மட்டும்தான்! இன்று உலகில் உள்ளோரில் அதிக வயதானவர் இவர்தான். அதாவது மூத்தோருக்கெல்லாம் மூத்தவர் இவர்தான். அதனால் கின்னஸ் புத்தக நிறுவனத்தினர் இவரது வயதை உறுதிப்படுத்திய பின்னர் கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்ய முன்வந்துள்ளனர்.

இவரது பெயர் மரியா டெல் பிலார் மெண்டிஸ். ஈகுவடோர் நாட்டைச் சேர்ந்தவர். இவருக்கு 13 பிள்ளைகள் (ஒரு டசினுக்கு ஒன்றுகூட), 63 பேரப் பிள்ளைகள். கொள்ளுப்பேரப்பிள்ளைகள் விடயத்தில் சதம் போட்டுள்ளார். நடமாட முடியாவிட்டாலும் தெளிவாகப் பேசுகிறார். ஒன்றரை சதத்தை எட்டும் ஆசை இருக்கிறதாம். எல்லாம் ஒ.கே. அருகே இருந்து பரிவோடு தலையைத் தடவும் மூதாட்டிதான் ஆச்சியின் மூத்த மகள். அவருக்கு என்ன வயதிருக்கும் என்கிறீர்கள்? ஆக 110. ■



## தகவல் பெட்டி

## விமானம் வீட்டுக்குள்

← இப்போதெல்லாம் விமான விபத்துச் செய்திகள் சர்வசாதாரணமாகிவிட்டன. விமானத்தின் இயந்திரங்கள் கைவிட்டாலும் விமானிகளின் புத்திசாலித்தனத்தால் உயிர் சேதமில்லாமல் முடிந்த விபத்துக்களும் இருக்கின்றன.

படத்தில் இருக்கும் காட்சி புல்லரிப்பானது. வீட்டின்மேல் பொத்தென்று விமானம் விழுந்தால் எப்படியிருக்கும் தெரியுமா? இப்படித்தான் இருக்கும். அவுஸ்திரேலிய நாட்டின் பெர்த் நகரில் உள்ள வீடொன்றில்தான் இந்த டுரோமடார் விமானம் டமார் என்று விழுந்தது. வீடு கடமுடா என்று இடிந்துபோனது. அதன்பின்னர் இரண்டு ஆச்சரியங்கள் நிகழ்ந்தன. ஒன்று; இடிபாடுகள் மத்தியில் இருந்து ஒரு சேதமும் இல்லாமல் கம்புபோல எழுந்து நடந்துவந்தார் விமானி. ஆச்சரியம் இரண்டு; வீட்டில் இருந்தவர்கள் அப்போதுதான் வெளியே காற்றாட நடந்துபோனதால் மயிரிழையில் உயிர்தப்பினர். (விமானத்திற்குள்ளும் வேறு யாரும் இருக்கவில்லை) தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்பது இதுதானோ! ■


படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 5

மித்ரவாசு

# நடிகர் கட்டிய அதிரடிப் பந்தயம் நடிகையிடம் தப்பிய இளம் நடிகர்

வேற்றுமொழிப் படங்களின் உரிமை பெற்று தமிழில் படங்கள் தயாரித்த ஏழுமலையானை பெயரில் கொண்ட தயாரிப்பாளர் அவர். பெயரில் கணபதியைக் கொண்டிருக்கும் நடிகரைக் கொண்டு நிறையப் படங்கள் தயாரித்தவர் அவர். அவர் ஒரு நடிகரும்கூட. இருவரும் வெள்ளி விழா கண்ட படமொன்றில் நடித்தனர். படத்தின் நாயகி வாணிஸ்ரீ.

ஒருநாள் படப்பிடிப்பு இடைவேளையில் இரண்டு நடிகர்களுக்கும் பொழுது போகவில்லை. அவர்கள் பார்வை கதாநாயகியின்மீது சென்றது. அவரைவைத்து ஒரு பந்தயம் கட்டினர்.

"டேய்! நான் வாணிஸ்ரீயின் கன்னத்தில் முத்தம் கொடுக்கிறேன். என்ன பந்தயம்?" என்று கேட்டார் நடிகர்.

"உங்களால் கொடுக்க முடியாது" என்றார் தயாரிப்பாளர்.

வாணிஸ்ரீ படப்பிடிப்பு அரங்கில் இருந்தவர்களுடன் சுவாரஸ்யமாக பேசிக் கொண்டிருக்க, நடிகர் அவரை நோக்கிச் சென்று 'பச்' என்று கன்னத்தில் முத்தம் கொடுத்துவிட்டுப் போனார்.

கதாநாயகன் தனக்கு ஏன் முத்தம் கொடுத்துவிட்டுப் போனார் என்று வாணிஸ்ரீ விழிக்க, நடிகர் "எங்கேடா பணம்?" என்று தயாரிப்பாளரை விரட்ட, "நீங்க முத்தம் கொடுக்க மாட்டீர்கள் என்று அப்படிச் சொன்னேன்" என்று தயாரிப்பாளர் நழுவினார். அவர்கள் செயலைக் கண்டு அங்கிருந்தோர் முகம் சுளித்தனர்.

**பி.குறிப்பு:** சொன்னால் நம்பமாட்டீர்கள்; நடிப்பில் வெளுத்துக் கட்டிய நடிகர் அவர். அவரும் வாணிஸ்ரீயும் நடித்து தமிழகத்தில் வெள்ளிவிழாக்கண்ட அப்படம் நம் நாட்டிலும் வெள்ளிவிழாக் கொண்டாடி வசூலில் 'வசந்த'மான சாதனை படைத்தது.

## மணியின் சறுக்கல்

காலம்சென்ற கராத்தே மணியின் குணாதிசயங்கள் விசித்திரமானவை. மத்திய அரசுவரை அவருக்கு செல்வாக்கு இருந்தது. அமைச்சரின் அந்தஸ்தில் இருந்தார். உயர் பொலிஸ் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோர் அவரிடம் இரகசியமாக தற்காப்புக்கலைகளை பயின்றனர்.

எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக இருந்தபோது மணிக்கு அவரிடம் நல்ல செல்வாக்கு இருந்தது. எம்.ஜி.ஆரிடம் சில வித்தைகள் செய்து காண்பித்து அவரை வியப்பிலாழ்த்தி இருக்கிறார்.

கராத்தே மணிக்கு சினிமாவில் நடித்து புகழ்பெற ஆசை ஏற்பட்டது. தேவர் பிலிம்சின் 'அன்புக்கு நான் அடிமை' படத்தில் நடித்தார். ரஜினியோடு சண்டைக்காட்சி ஒன்றில் நடித்தபோது நான்தோற்றுப்போவதுபோல் நடிக்க முடியாது என்று மறுத்துவிட்டார். அதனால் அதற்கேற்ப காட்சி மாற்றியமைக்கப்பட்டது.

'ரங்கா'வில் நடித்தபோது அதில் நடித்த கே.ஆர்.விஜயாவுடன் ஜோடியாக நடிக்க ஆசைப்பட்டார். அதற்கேற்ப படம் தயாரானது. கராத்தேமணி ஹீரோ. படம் முடிந்தபோது அது சரியாக வராததால் மணிக்கு கோபம். இயக்குநரை தன் வீட்டுக்கு அழைத்தார். மதுவை ஊற்றிக் கொடுத்தார். தானும் அருந்தினார்.

உச்சத்திற்கு போனதும் "என்னய்யா படமா எடுக்கிறே?" என்று கேட்டபடி இயக்குநரை அடித்துத்தள்ள, தப்பியோடி உயிர் பிழைத்தார் இயக்குநர்.

மணியின் இந்த முரட்டுத்தனம் திரையுலகினரை அதிரவைத்தது. 'பாயும் புலி' படத்தில் ரஜினியுடன் மணி நடித்தார். பின்னர் தனது பாத்திரம் திருப்தி இல்லையென்று மாற்றச் சொன்னார். அதனால் ஜெய்சங்கரை அந்த வேடத்தில் நடிக்க வைத்தனர்.

'மகனே கேள்' படத்தில் மணிக்கு பிரதான வேடம். அவருக்கு ஜோடி மஞ்சுபார்கவி. மணி மஞ்சுமீது மையல் கொண்டார். மஞ்சு மணியின் வீட்டில் குடியேறினார். ஒரு கட்டத்தில் அந்த வீட்டை தனக்கே எழுதிவைக்கும்படி கேட்டார். மணியும் இசைந்தார். நண்பர்கள் புத்தி சொன்னதால் மணி மனம் மாறினார். மணி தன் இழுப்புக்கு வரமாட்டார் என்பதால் மஞ்சு புதிய உறவுகளை தேடினார்.

மணிக்கு விஷயம் தெரிந்து மஞ்சுவைக் கண்டித்தார். "உங்களை மட்டும் நம்பி எப்படி இருப்பது?" என்று கேட்டார் நடிகை. மணி அவரை அழைத்துத் தள்ளினார். மஞ்சுவின் தாயார் குறுக்கே புகுந்து தடுத்ததால் மணியின் வேகம் குறைந்தது. இனியும் அங்கேயிருந்தால் உயிர் ஆபத்து ஏற்படும் என்று பயந்து மஞ்சுபார்கவி விலகிப்போனார்.

## நடிகையின் துணிச்சல்

பாரதிராஜா படத்தில் அறிமுகமான நடிகை அவர். மேற்கத்திய நாகரீகத்தில் ஊறியவர். அவருடன் முதல் படத்தில் ஜோடி சேர்ந்த நடிகருக்கு தாய்மொழி தெலுங்கு. தமிழில் இரவல் குரலில் நடித்தவர்.

முதல் படத்தில் ஜோடி சேர்ந்தவர்கள் நிஜத்திலும் நெருக்கமாயினர். படப்பிடிப்பு இல்லாத நாட்களில் சென்னையைவிட்டு புறநகர் பகுதிகளுக்கு பறந்துவிடுவர்.

இருவரும் நடித்த முதல் பட வெற்றிவிழா தென் சென்னை திரையரங்கு ஒன்றில் நடைபெற்றது.

படத்தில் நடித்த நாயகனும், நாயகியும் முதல் வரிசையில் இருந்தனர். எல்லார் கவனமும் மேடை மீது இருக்க நாயகனும், நாயகியும் சில்மிஷங்களில் ஈடுபட்டிருந்தனர். அதில் நாயகியின் கைவரிசையே அதிகம். ஒரு கட்டத்தில் நாயகி நாயகனின் பேண்ட் ஜிப்பில் கைவைத்துவிட்டார். அதிலிருந்து விடுபடுவதற்குள் நாயகனுக்கு வியர்வை வெள்ளமாய் பொங்கி விட்டது.

நாயகியின் இதுபோன்ற வேகங்களை தாக்குப் பிடிக்க முடியாத நாயகன் கொஞ்சம் கொஞ்சமாக விலகிப்போனார். பின்னர் நாயகிக்கு ஆளா இல்லை! அதையெல்லாம் பட்டியல் போட்டால் வாசகர்கள் தாங்கமாட்டார்கள்.

**பி.குறிப்பு:-** நாயகி மறைந்த பிரபல நடிகரின் மகள். இலங்கையுடனும் தொடர்பு உள்ளவர். ரயில் நடிகை என்றும் அழைக்கப்படுபவர். இவரது சகோதரியும் நடிகைதான். தற்போதும் நடிகை குணச்சித்திரமாக நடித்துக் கொண்டிருக்கிறார். பெயர் ஆங்கில எழுத்தில் ஆர் என்பதில் ஆரம்பிக்கும். அந்த நடிகர் தற்போது தெலுங்கில் பிஸி. 'சுதாகரித்து' தப்பியதால் உருப்படியாய் இருக்கிறார். அவரது பெயரும் சுவில் தொடங்கி 'கர்'என்று முடியும். ■

## ரம்பா விரும்பும் குணம்

ரம்பாவுக்கு பிடித்த ஆள் எப்படி இருப்பார்? ரம்பாவே கூறுகிறார். (தவறவிடாமல் படியுங்கள்.)

"முதல்ல ஹேண்ட்ஸம்மா இருக்கணும். நல்ல அழகான பெண்ணை எதிர்பார்க்கும்போது அவனும் ஹேண்ட்ஸம்மா இருக்கணும், எந்தக் கெட்ட பழக்கமும், புகை பிடிப்பது, குடிப்பது போன்ற பழக்கம் இருக்கக் கூடாது. ஏற்கனவே இருந்தாலும் என்னைக் கண்டதும் விட்டுடணும். வேறு பெண்ணை லவ் பண்ணியவராக இருக்கலாம். ஆனால் என்னைப் பார்த்ததும் அவளை மறந்துடணும். அந்த மாதிரி ஆளைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்!"

## குஷ்பு கலக்கம்

'உள்ளத்தை அள்ளித்தா' படத்தி... ஆரம்பித்து 'அருணாச்சலம்' உட்ப... இப்போது 'ஜானகிராமன்' பட... திலும் ரம்பாவை இயக்கி வருகிறா... சி.சுந்தர்.

சுந்தரின் புதிய படம் ஒன்றிலு... ரம்பாதான் கதாநாயகி. குஷ்பு எதற்கு... ஜாக்கிரதையாக இருப்பது நல்ல... இல்லாவிட்டால் கலக்கம்தான் ஏற்படு...

## கூலி 50

'பாரதி கண்ணம்மா' படம் பிய்த்து... கொண்டு ஓடிய சூட்டோடு சூட... தனது சம்பளத்தை உயர்த்தினா... பார்த்திபன். அடுத்து வந்த 'வாய்மையே வெல்லும்' படமும் ஹிட்டானது. மேலு... உயர்த்தினார். தற்போதைய சம்பள... இந்திய மதிப்பில் 50 இலட்சம்.



ராம்கி-சங்கவி
படம் ஆகா என்ன பொருத்தம்

## சங்கவி போடும் சவால்

சங்கவியின் வயிற்றெரிச்சலை லேட்டஸ்ட்டாக வாங்கிக் கட்டிக் கொண்டிருப்பவர் சிம்ரான். கவர்ச்சியில் சங்கவி போலவே எந்த எல்லைக்கும் போகத் தயங்காதவர் சிம்ரான்.

ஆனால் போட்டி நடிப்பு விஷயத்தில் அல்ல. பிடிப்பு விஷயத்தில்தான் போட்டி.

'இனியெல்லாம் சுகமே' படம் மூலம் அப்பாசுடன் நெருங்கினார் சங்கவி. அப்பாசும் சங்கவியின் அதிரடி அணுகுமுறைகளால் மயங்கித்தான் போனார். 'இனியெல்லாம் சுகமே' என்று சங்கவி நினைத்த நேரத்தில்தான் கரடியாகப் புகுந்தார் சிம்ரான்.

வி.ஐ.பி. படம் மூலமாக அப்பாசுடன் ஐக்கியமாகி விட்டார் சிம்ரான். இருவரும் நெருக்கமாகப் பழகும் விஷயம் அறிந்த சங்கவி சிம்ரானை கடித்துத் தின்றுவிடும் ஆத்திரத்தில் இருக்கிறார். அப்பாஸ் இருவரையும் சமாளித்துவிட்டு கடைசியில் இருவரையும் வெட்டிவிடும் ஐடியாவில் இருக்கிறாராம்.

"சிம்ரான் எல்லாம் சும்மாதான், என்னுடன் போட்டி போட்டு கவர்ச்சி காட்டினால் காணாமல் போகவேண்டியதுதான்!" என்று சங்கவி சவால் விட்டுக் கொண்டிருக்கிறார்.

சங்கவி என்னதான் சவால்விட்டாலும் சிம்ரான் சத்தமில்லாமல் முன்னேறிக் கொண்டிருக்கிறார் என்பது மட்டும் உண்மையிலும் உண்மை.

## எம்மிடம் இல்லாததா?

பார்த்திபனின் அன்புக்கு சம்பத்தில் பாத்திரமான நடிகை ரவளி. சிமைப்பசு என்றும் செல்லப்பட்டம். தமிழில் திருமூர்த்தி மூலம் அறிமுகமாகியவர். தொடர்ந்து 'காந்தி பிறந்த மண்' படத்திலும் விஜயகாந்த்துடன் நடித்தவர். பின்னர் தெலுங்கில் திறமை காட்டிவிட்டு மறுபடி தமிழுக்கு வந்துள்ளார்.

பார்த்திபனுடன் 'காங்கேயம் காளை', 'அபிமன்யு' ஆகிய படங்களில் ஜோடி சேர்ந்துள்ளார்.

தாய்மொழி தெலுங்கு. தமிழ் பேசத் தெரியும். ரவளி சொந்தமாக தயாரிக்கும் படம் 'காதல் யுத்தம்'. ஆனால் படத்தில் கதாநாயகி ரவளி அல்ல. புதுமுகம் நடிக்கிறார்.

"மும்பாய் நடிகைகளை போட்டியாக நினைக்கவில்லை. எங்களிடம் இல்லாத அழகையா அவர்கள் காட்டிவிடப் போகிறார்கள்!" என்று கொஞ்சம் கர்வம், கொஞ்சம் தன்னம்பிக்கையோடு பேசுகிறார் ரவளி.


அஜிதகுமார-ரமபா
படம் ராசி

## முரளி ஜோடி தேவயாணி

'பூமணி' படத்தில் முரளி-தேவயாணி ஜோடியாக நடித்தனர். தற்போது அதே ஜோடி மறுபடி இணையும் படம் 'பூந்தோட்டம்.' இன்னொரு கதாநாயகியாகப் புதுமுகம் ஒருவர் நடிக்க இருக்கிறார்.

இசை; இளையராஜா, கதை; திரைக்கதை, இயக்கம், மு.களஞ்சியம். 'பூமணி' படத்தை இயக்கியவரும் இவர்தான்.

ஒரு முரட்டு வாலிபனுக்கும், பூப்போன்ற பெண்ணுக்கும் இடையே ஏற்படும் காதலைப் பற்றிய கதையாம்.

## மீண்டும் விவகாரம்

ராதிகாவின் சகோதரி நிரோஷா கொழும்பில் சிலகாலம் தங்கியிருந்தார். பின்னர் அவர் சென்னை திரும்பியதும் மீண்டும் விவகாரம் ஏற்பட்டுள்ளது.

ராம்கியின் வீட்டில்தான் நிரோஷா தங்கியிருப்பதாக தகவல். நிரோஷாவுக்கு புத்திசொல்ல அக்கா ராதிகா சில பிரமுகர்களை அனுப்பிவைத்தாராம். அக்காவாம் அக்கா என்று தொடங்கி நிரோஷா பிடித்த பிடியில் காதுகளைப் பொத்திக் கொண்டு திரும்பினார்களாம் பிரமுகர்கள். சமாதான முயற்சி தோல்வியில் முடிந்துவிட்டது. விரைவில் ராம்கி-நிரோஷா திருமணம் நடந்தாலும் நடக்கும் என்கிறார்கள்.

## ரம்பா ஜோசியம்

ரம்பாவுக்கு தெரிந்த வித்தைகளில் ஒன்று ஜோசியம் பார்ப்பது. இந்த விஷயம் தெரிந்த நடிகர்கள் பலர் ரம்பாவிடம் கைநீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நகைச்சுவை மணி நடிகரும் ரம்பாவிடம் கையை நீட்டினாராம். பொறுமையாக அவரது கையை ஆராய்ந்த ரம்பா "உங்களுக்கு இரண்டு சின்ன வீடு இருக்கணுமே" என்று கேட்க, மணியின் முகம் அஷ்டகோணலாகிவிட்டதாம்.


சத்யராஜ்-சுருதி
படம் பெரிய மனுஷன்



படிப்பகம்

## அமெரிக்காவில் செட்டில்

'ஜீன்ஸ்' படத்தின் படப்பிடிப்பு ...மெரிக்காவில் நடந்தது. இதில் ...ந்த ஒரு சுவையான சங்கதி ...தெனில் படப்பிடிப்புக் குழு ...பாடு போனவர்களில் பாதிப் ...ர் திரும்பி வரவில்லையாம்.

படப்பிடிப்புக் குழு என்ற ...ார்வையில் சென்று அமெரிக்கா ...ல் செட்டிலாகி விட்டார்களாம். ...தற்காக தலைக்கு பத்து லட்சம் கொடுத்துத்தான் படப் ...டிப்புக் குழுவுடன் ஒட்டிக் ...ொண்டு போனார்களாம்.

## பிரேமா அறிமுகம்

சிவாஜி கணேசனைவைத்து பல வெற்றிப்படங்களை தயாரித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் பாலாஜியும், முக்தா சீனிவாசனும்.

முக்தா பிலிம்ஸ் தற்போதும் புதுமுங்கள் பக்கம் திரும்பியிருக்கிறது.

கன்னட பட நாயகியான பிரேமாவை தமிழுக்கு அறிமுகம் செய்யப்போகிறார்கள். அவருடன் புதுமுகம் ஸ்ரீராம் நடிக்கிறார். மற்றொரு கதாநாயகன் விக்ரம். இவர் ஏற்கனவே 'உல்லாசம்' படத்தில் நடித்து வருகிறார்.

புதிய படத்துக்கு சூட்டப்பட்டுள்ள பெயர்; 'கண்களின் வார்த்தைகள்.'

இயக்கம் முக்தா சுந்தர். இசை; இளையராஜா. வசனம்; கிரேஸிமோகன்.

## ராசி போன ராசி

அஜித்குமார்-ரம்பா நடித்து சித்திரைப் புத்தாண்டுக்கு வந்த படம் 'ராசி'. அஜித்குமாரின் ராசியை கேள்விக்குள்ளாக்கிபடு தோல்வி கண்டுவிட்டது. 'ரம்பாவை படம் முழுக்க மோப்பம் பிடித்தது மட்டும் இப்படத்தில் அஜித்துக்கு ராசி' என்று பத்திரிகைகள் கிண்டல் செய்திருக்கின்றன. அந்தளவு கவர்ச்சி இருந்தும், கிளு கிளுப்பு இருந்தும் படம் சுருண்டுவிட்டது.

இதனையடுத்து அஜித்தை புதுப் படங்களில் ஒப்பந்தம் செய்ய தயாரிப்பாளர்கள் தயங்குகிறார்கள்.

இது போதாது என்று ஹீராவும் அஜித்தைத் திட்டித் தீர்க்கிறார் "படத்தில்தான் சிலர் ஹீரோக்கள். உண்மையில் இந்த ஹீரோக்கள் ஹீரோயின்களுக்கு வில்லன்கள்" என்று பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி. கொடுத்திருக்கிறார் ஹீரா. ஹீரா யாரை வில்லன் என்று அர்ச்சனை செய்கிறார் என்று தெரியாதா என்ன?

## அர்த்தம் என்ன?

பாக்யராஜ்-நக்மா நடிக்கும் படம் 'வேட்டிய மடிச்சுக்கட்டு' அதன் அர்த்தம் என்னவென்று மண்டையை உடைக்காதீர்கள். கிராமங்களில் வேட்டிய வரிஞ்சு கட்டினால் சண்டைக்குப் போவது என்று அர்த்தம். வீரத்துக்கு அறிகுறியாக மட்டுமே அப்பெயரை வைத்திருக்கிறாராம் பாக்யராஜ்.

## புதிய அம்மன்கள்

சினிமாப் பாடலாசிரியரான காளிதாசன் 108 அம்மன்களை வைத்து பாடல்கள் இயற்றியவர். இப்போது புது முயற்சி ஒன்றில் குதித்திருக்கிறார். 100 நடிகைகளின் பெயரில் பாடல் எழுதப்போகிறாராம்.

ஏற்கனவே குஷ்பு, மீனா, ரம்பா, சிம்ரான், நக்மா பெயர்களில் பாடல்கள் வந்திருக்கின்றன.

## 'ஓம்' என்றால்...?

'இதுதாண்டா பொலிஸ்' நான்தாண்டா திருடன் என்றெல்லாம் தன்படங்களுக்கு பெயர் வைத்தவர் ராஜசேகர்.

இப்போது தனது புதிய படத்துக்கு 'ஓம்' என்று பெயர் சூட்டியுள்ளார். ஆனால் இது பக்திப் படம் அல்லவாம். 'ஓம்' என்ற வார்த்தையில் மூன்று முக்கியமான விஷயங்கள் அடங்கி இருக்கிறதாம். லவ், அமைதி, வன்முறை என்று மூன்றுமே அடங்கியிருக்கிறதாம். அந்த மூன்றும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் எப்படியெல்லாம் விளையாடுகிறது? என்பதுதான் 'ஓம்' படத்தின் கதையாம்.




## மினி சினி

* 'உல்லாசம்' படத்தினை சென்னை நகரத்தில் வெளியிடும் உரிமையைக் கமல் வாங்கியிருப்பது தெரிந்த செய்தி, சென்னை நகரத்துடன், கேரளத்தின் வெளியீட்டு உரிமையையும் கமல் வாங்கியிருக்கிறார் என்பது புதிய செய்தி.

* கார்த்திக் ஜோடியாக 'கூட்டாளி' படத்தில் ரவளி, ஹீரா, ஈஸ்வரிராவ் ஆகியோர் நடிப்பதாக இருந்தனர். இப்போது 'காதலி' படத்தின் அறிமுக நாயகி திவ்யாவை நடிக்க வைத்துள்ளனர்.

* 'அரவிந்தன்' படத்தை இயக்கிய டி.நாகராஜன் அடுத்து இயக்கும் படத்திற்கு 'அன்புடன்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. 'புதையல்' படத்தைத் தயாரித்துள்ள கோவை செழியன் இப்படத்தை தயாரிக்கவுள்ளார்.

* மம்முட்டி கதாநாயகனாக நடிக்கும் 'மறுமலர்ச்சி' படத்தை இயக்கி வருபவர் பாரதி. இவர் பாஸ்கர் என்ற பெயரில் சின்னி ஜெயந்த் கதாநாயகனாக நடித்த 'சின்னபுள்ள' படத்தை இயக்கியவர்.

* 'கோகுலம்', 'குருதிப்புனல்' போன்ற படங்களில் கௌரவ வேடத்தில் நடித்திருக்கும் அர்ஜுன் அடுத்து பாண்டிய ராஜன் கதாநாயகனாக நடிக்கும் 'விகடகவி' என்ற படத்திலும் கௌரவ வேடத்தில் நடிக்கவுள்ளார்.

* 'ஜென்டில்மேன்', 'மகாபிரபு' போன்ற படங்களில் வில்லனாக நடித்துள்ள மலையாள நடிகர் ராஜன் பி.தேவ் விரைவில் 'அச்சாம குட்டியோடே அச்சாயே' என்ற மலையாளப் படத்தை இயக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

* இந்தி நடிகை மாதுரி டிக்ஷிட் முதன் முறையாக தெலுங்குப் படமொன்றில் சிரஞ்சீவிக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார். தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மும்மொழிகளில் தயாராகும் இப்படத்தை சிரஞ்சீவியே தயாரிக்கிறார்.

* 'தைமாசம் பூவாசம்' படத்தில் அறிமுகமாகி 'சின்னக்கவுண்டர்' மூலம் பிரபலமான தேவகி தமிழில் ஒரு சிறிய இடைவெளிக்குப் பின் 'மனசுக்குள் வரலாமா' என்று படத்தில் நடித்து வருகிறார்.

* முரளி நடித்த 'பூமணி' படத்தை இயக்கிய மு.களஞ்சியம் தற்போது முரளி நடிக்கும் 'பூந்தோட்டம்' என்ற படத்தை இயக்கி வருகிறார். இது முடிவடைந்தும் இவர் பிரபு நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* தமிழில் 'சேரன் சோழன் பாண்டியன்' என்ற படத்தில் மட்டும் நடித்து வரும் மோகினி, அண்மையில் 'உல்லாசப் பூங்காற்று' என்ற மலையாளப்படத்தில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

## ...னி படம்

...அடுத்த படம் இன்னமும் ...லை. அதற்குள் அடுத்த படத் ...மைக்க சில இசையமைப்பாளர் ...ாலில் நிற்கிறார்களாம். ...ச்சலம்' பாடல்கள் சூப்பர் ...லை. தேவா சொதப்பிவிட்டார் ...ர் சொல்லித்திரிகிறார்களாம். ...ரஜினியின் பார்வை தம்மீது ...று நினைப்பதாக பேச்சு.

## நன்றிக் கவர்ச்சி

'பாசமுள்ள பாண்டியரே' படத்தில் இதுவரை தமிழில் காட்டாதளவுக்கு கவர்ச்சி காட்டியுள்ளாராம் மீனா.

தன்னை கதாநாயகியாக அறிமுகம் செய்த ராஜ்கிரணுக்கு மீனா காட்டியுள்ள நன்றியாம்.

தெலுங்கில்தான் மீனா இதுவரை தூள் கிளப்பிக் கொண்டிருந்தார். இப்போது தமிழிலும் துணிந்துவிட்டார்.

இந்தியில் நடிப்பது என்றால் மேலும் கவர்ச்சி காட்ட மீனா தயாராக இருக்கிறார். "மூன்றரை வயதிலேயே நடிக்க வந்தாலும் இப்போதுதான் தெளிவு சுழிவுகள் புரிகிறது. அனுபவம் முதிர்ச்சியாகிறது." என்று மீனா சொல்கிறார். மெத்தச் சரி.

## வாயால் நஷ்டம்

கவியரசு கண்ணதாசனின் பெயரைக் கெடுக்கிறார் என்ற பழி அவர் மகள் விசாலி மீது விழுந்திருக்கிறது.

விசாலிக்கு வாயை எங்கே எப்படி உபயோகப்படுத்துவது என்று தெரியாது. சமீபத்தில் ஒரு விழாவில், "நான் முன்னப் பின்ன நடக்கிற ஆளாக இருந்தால் நக்மா போன்ற நடிகைகள் மாதிரி முன்னுக்கு வந்திருப்பேன்" என்றார்.

அவ்வளவுதான், நக்மா ரசிகர்கள் கொதிச்சுப்போய் ஃபோன் எடுத்து ஆபாசமாக கன்னா பின்னாவென்று திட்டித் தீர்த்து விட்டார்களாம். இது தேவையா?

## விஜய் வருத்தம்

'நேருக்கு நேர்' படத்தில் இருந்து அஜித்குமார் தூக்கப்பட்டார். மற்றொரு ஹீரோவான விஜய் அதற்காக சந்தோசப்படவில்லை. அஜித்துடன் நடிப்பில் மோத ஆசையாக இருந்தாராம். ஏற்கனவே அஜித்துடன் 'ராஜாவின் பார்வையிலே' படத்தில் நடித்தவர் விஜய். அஜித் பிரபலமானபின் மீண்டும் மோதும் வாய்ப்புக் கிடைத்ததால் மகிழ்ச்சியாக இருந்தாராம் விஜய். அது கை கூடாததுதான் வருத்தம்.

மற்றொரு பெரிய வருத்தம் படத்தில் இன்னொரு ஹீரோவாக நடிக்கும் சிவகுமாரின் மகன் சூர்யாவைப் பற்றியே பத்திரிகைகள் ஆகா ஓகோ என்று புகழ்வதால் தன் பெயர் பின் தள்ளப்பட்டுவிட்டது தான் மகா வருத்தமாம்.



## கமல் இந்தியில் தீவிரம்

கமல் இந்தியில் முதல் நடித்த படம் 'ஏக்துஜே கேலியே'. பாலசந்தர் படம். மாபெரும் வெற்றியும் பெற்ற படம்.

தற்போது இந்தியில் கமலின் பார்வை பாய்ந்திருக்கிறது. மகளிர் மட்டும் இந்தியில் 'லேடீஸ் ஒன்லி' என்ற பெயரில் வெளிவரப்போகிறது. தமிழில் நாகேஷ் நடித்த பாத்திரத்தில் இந்தியில் கமல் நடித்திருக்கிறார்.

அடுத்தது 'அவ்வை சண்முகி'. 'சிசய் சாஷி' என்ற பெயரில் இந்தியில் பெரும் வெற்றியைக் குறிவைத்து கமல் தயாரிக்கிறார்.

கமல், நாசர் தவிர மற்றவர்கள் எல்லாம் இந்தி நடிக நடிகையர். மீனாவுக்கு பதிலாக தபு. ஜெமினி நடித்த பாத்திரத்தில் அம்ரிஷ்பூரி.

இந்திப் படம் என்றாலும் படப்பிடிப்பு சென்னையில் தான் நடக்கிறது. செலவைச் சுருக்கவும், விரைவாக படப்பிடிப்பை முடிக்கவும் சென்னையை தெரிவு செய்தாராம் கமல்.

## நக்மாவுக்கு பிடித்த குணம்

ஒரு ஆள் எப்படி இருந்தால் நக்மாவுக்குப் பிடிக்கும்? சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இக்கேள்விக்கு நக்மாவின் பதில்;

"இது ரொம்ப சிக்கலான கேள்வி. சினிமா உலகில் நாம் நிறைய ஆண்களைப் பார்க்கிறோம். நிறையப் பேர் கல்யாணம் ஆனவங்க. கல்யாணத்துக்கு அப்புறம் எந்தளவு உண்மையாக இருப்பாங்க என்று பார்க்க முடிகிறது.

நம் முகத்துக்கு நேராக ஆண்கள் சிலர் நல்லாப் பேசுவாங்க. ரொம்ப நல்ல மாதிரி இருப்பாங்க. பின்னாடிபோய் வேறு மாதிரிப் பேசுவாங்க.

நான் என்னுடைய ஆள் எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன் என்றால், அவர் எனக்கு நேர்மையானவராக, உண்மையானவராக இருக்கணும். சந்தோசம் என்றாலும், துக்கம் என்றாலும் நல்ல மனசுடன் நம்மகூடப் பழகிறவரா இருக்கணும்."



ராம்கி-வினிதா
படம்: சாம்ராட்

## முகப்பில்

கார்த்திக்—ரோஷினி
படம்: சிஷ்யா

விக்னேஷ்
படம்: காதல் பள்ளி

www.padippakam.com

# வரவு புதிதும் வரவேற்கும் முறையும்



வீட்டிலுள்ள அனைவரும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கிறார்கள். உறவினரும் அயலவர்களும் வருவதும் போவதுமாக இருக்கிறார்கள். எங்கும் ஒரே கலகலப்பு. வீடே அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் பார்த்தபடி ஒரு மூலையில் அந்தச் சின்னஞ்சிறுசு சுவரோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது. அதனை எவரும் கவனித்ததாகத் தெரியவில்லை.

ராஜுவுக்கு மூன்று வயது முடிந்து சில மாதங்கள்தான் சென்றிருக்கும். இதற்கிடையில் அவனுக்கு ஒரு தங்கை வந்து குதித்துவிட்டாள். அன்றுதான் மருத்துவமனையிலிருந்து அம்மா தங்கச்சிப் பாப்பாவுடன் வந்து சேர்ந்தாள்.

மோட்டாரில் வந்து இறங்கும்போது வாயிலில் ராஜுவும் தான் நின்றிருந்தான். அவனுடைய தாயார், எதையோ துணியில் சுற்றி எடுத்துக்கொண்டு வண்டியிலிருந்து இறங்கினார். சுற்றியிருந்த சிலர் அவரைப் பிடித்துக் கொண்டு உள்ளே சென்றனர். அவனுடைய அப்பா, அம்மாவின் கையிலிருந்த அந்தச் சிறு பொதியைத் தன் இருகைகளிலும் தாங்கிக்கொண்டு உள்ளே போனார். அவ்விடத்தில் நின்ற எல்லாரும் அவனைக் கடந்து சென்றனர். ஆனால் ராஜுவை எவரும் கவனிக்கவேயில்லை.

கடந்த இரண்டு நாட்களில் அம்மாவைக் காணாமையினால் ஏக்கப் பெருமூச்சுவிட்டபடி இருந்தான். அவனுடைய அம்மம்மாதான் அவனுக்கு வேளைக்கு உணவூட்டினார். ஆனால் இன்று அம்மா வீடுவந்து விட்டார். ஆனால் அவர் ராஜுவைப் பார்க்கவேயில்லை. அப்பாவும் அவனைக் கவனிக்கவில்லை.

மூலையிலிருந்து அழுது கொண்டிருக்கும்போது அவனுடைய அம்மம்மா வந்து அவனைத் தூக்கினார். அவனுக்கு முகம் கழுவிவிட்டு, தலைவாரி, பவுடரும் போட்டுவிட்டார். அவன் அம்மா செய்யும் வேலைகளை கடந்த சில நாட்களாக அம்மம்மாதான் செய்கிறார். அது அவனுக்குப் பிடிக்கவேயில்லை. "அம்மா" என்று அழ ஆரம்பித்துவிட்டான்.

"ராஜு! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டுக்கொண்டு வந்த அப்பா அவனை அப்போதுதான் வாரி எடுத்து இரு கன்னங்களிலும் முத்தம் கொடுத்தார். "ராஜு உனக்கு ஒரு அழகான தங்கச்சிப்பாப்பா வந்திருக்கு. அம்மா ஆசுப்பத்திரிக்குப் போய் தங்கச்சிப் பாப்பாவைக் கூட்டி வந்திருக்கா... வந்து பார்!"என்று அந்த அறைக்குள் அவனைக் கொண்டு சென்றார்.

அம்மா கட்டிலில் இருக்க,அவர் மடியில் கிடந்து பால் குடிக்கும் அந்தச் சின்னஞ்சிறுசைப் பார்த்ததும் அவனுக்கு மீண்டும் அழுகை வந்து விட்டது, 'ஓ' வென்று அழத் தொடங்கிவிட்டான்.

அன்று முதல் தொடர்ந்து பல நாட்கள் ராஜு சரியாக உணவு உண்ணவில்லை. எதற்கும் அடம் பிடிக்க ஆரம்பித்தான். காலையில் குளிப்பது, உடைகள் போடுவது, அயல் வீட்டுப் பிள்ளைகளுடன் ஓடி விளையாடுவது போன்றவற்றில் சமர்த்தாக இருந்தவன் இப்பொழுது எதிலும் நாட்டமில்லாமல் வெறுப்புணர்ச்சியோடு காணப்பட்டான். அவனுடைய சித்தி அவனுடைய அம்மாவிடம் அழைத்துச் செல்ல முயன்றாள், அந்த அறைக்குள் போகவே வெறுப்புடன் மறுக்கலானான்.

இது வெறும் கற்பனைக்கதையல்ல. சாதாரணமாக எல்லாக் குடும்பங்களிலும் இடம்பெறும் காட்சிதான். தனக்குப் புதிதாக ஒரு தம்பியோ, தங்கையோ வரப்போவதை மூத்த குழந்தைக்கு பக்குவமாக எடுத்துக்கூறி அதன் ஆமோதிப்பை உரிய முறையில் பெறாதமையினால் ஏற்படும் கசப்புணர்வின் பலாபலன் தான் இது.

இரு குழந்தைகளுக்குமிடையில் கணிசமான இடைவெளி இருக்க வேண்டும் என்பதும் இதற்காகத்தான். மூத்த பிள்ளை ஐந்து அல்லது ஆறு வயதை அடைந்த பின்னர் அவனுக்கு ஒரு தம்பியோ தங்கையோ வருவதானால் அத்தகைய பிள்ளைகளுக்கு சிறிதளவு விளக்கம் கொடுத்தாலே போதும். இருந்த போதிலும் மூத்த பிள்ளைக்கு அடுத்து வரும் குழந்தை மீது பொறாமை இருக்கவே செய்யும்.

சிறு குழந்தைகளுக்கு பெற்றார் மட்டுமல்லாமல் ஏனைய உறவினரும் ஆரம்பத்தில் பெரு மதிப்புக் கொடுப்பார்கள். ஆள் மாறி ஆள் அதனைத் தூக்கிக் கொஞ்சி விளையாடுவார்கள். இதனால் அக் குழந்தை தானே அந்த வீட்டின் பிரதானமான 'ஆள்' என்ற எண்ணத்தை- தன்னைப் பொறுத்த வரையில் ஏற்படுத்திக் கொள்ளுகிறது.

தனக்குரிய அந்தஸ்தை விட்டுக் கொடுக்கச் சம்மதிக்காது. அவ்வாறு தன் அந்தஸ்தை இழக்க நேரிட்டால், அதன் மனம் பெரிதும் பாதிப்படைந்து விடும். பாரதூரமான விளைவுகளும் ஏற்பட்டு-இரு குழந்தைகளும் பெரியவர்களானாலும் கூட மூத்த பிள்ளைக்கு தனது சகோதரத்தின்மீது வெறுப்புணர்வே மிஞ்சும்.

தாய் இரண்டாவது பிள்ளையை வயிற்றில் சுமந்து கொண்டிருக்கும்போதே முதலாவது பிள்ளைக்கு ஒரு சகோதரனோ, சகோதரியோ வரவிருப்பதையிட்டு அறிவித்து, அவ்வாறு புதிதாக வரும் குழந்தையால் மூத்த பிள்ளைக்கு என்னென்ன இலாபம் இருக்கும்- முக்கியமாக "கூடி விளையாட ஒரு சின்னப் பாப்பா வந்தால் நன்றாயிருக்கும் தானே!" என்பன போன்ற அறிவுரைகளைப் பக்குவமாக எடுத்துக்கூற வேண்டும்.

அவ்வாறு செய்வது குழந்தைகளிடையே பாசத்தையும் பெருக்கும்; மகிழ்ச்சியையும் வளர்க்கும்.

## கண்பார்வை

கண்களில் பார்வை குறைய ஆரம்பித்தால் காலையில் வெறும் வயிற்றில் கரட்சாறு பருகிப்பாருங்கள். இரு வாரங்களில் பார்வை சீரடைந்துவிடும்.

முருங்கைக் கீரையை கொதிதண்ணீரில் 5 நிமிடங்கள் வைத்து எடுத்து அதனை தினசரி உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். தேனீர், காப்பி அருந்துவதை விட்டு பால், சர்க்கரை அல்லது பனங்கட்டி சேர்த்துப் பருகலாம். பேரீச்சம்பழம் இரண்டு முதல் ஐந்து பழங்கள் சாப்பிடலாம். பப்பாளிப்பழமும் நல்லது.



போதுமான அளவு பச்சைக் காய்கறிகள் உண்டு வந்தால் பார்வை கூர்மை அடையும்.

## தோசை- ஆசை



தோசை என்றால் அதில் ஆசை வைக்காத எவரும் இருக்க முடியாது. அரிசி, உழுந்து சேர்த்து தனித்தனியாக ஊறவைத்து மிக்ஸியிலிட்டு அரைத்துத்தான் தோசை ஊற்றுவார்கள். இதில் அரிசி அல்லாமல் கோதுமை அல்லது மைதா மாவும் சேர்த்து தோசை சுடுவார்கள்.

மைதா மாவை நன்றாகக் கரைத்து அதில் சிறிதளவு தேங்காய்ப்பாலும் சேர்த்து 8 மணி நேரம் ஊறவைத்து தோசை ஊற்றினால் அதுவும் தனிச்சுவையாக இருக்கும்.

நல்ல மெது மெதுப்பான மெல்லிய தோசை வேண்டுமா? நாலு கப் அரிசியுடன் ஒரு கப் ஜவ்வரிசியைச் சேர்த்து அரைத்தெடுக்கவும். இக்கலவையுடன் கோதுமை மாவைச் சேர்க்காமல் ரவையைச் சேர்க்கலாம். இக்கலவை ஒரு மணி நேரம் மட்டும் ஊறினால் போதும். தோசை ஊற்றுவதற்கு முன் பச்சை மிளகாய், வெங்காயம், சீரகம் சேர்த்து- ஊற்றி-சுடச்சுட வாயில் போட்டுப் பாருங்கள்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது சுகந்தினி

### சீனிச் சம்பல்

**தேவையானவை:**

| | |
|---|---|
| பெரிய வெங்காயம் | - 4 (நறுக்கப்பட்டது) |
| மிளகாய்த் தூள் | - 2 தேக்கரண்டி |
| வினாகிரி | - 2 மேசைக்கரண்டி |
| எண்ணெய் | - 1/2 தம்ளர் |
| உப்பு | - அளவாக |
| சீனி | - 2 தேக்கரண்டி. |

**செய்முறை:**

பெரிய தாச்சியில் எண்ணெய் விட்டு சூடாக்கி நறுக்கப்பட்ட வெங்காயத்துண்டுகளைப் போட்டுப் பொன்நிறமாக வரும் வரை மெதுவாகக் கிளறவும். பின்பு மிளகாய்த்தூள், வினாகிரியைச் சேர்த்துப் பிரட்டிக் கலவையை மூடி 10 நிமிடங்கள் வரை அடுப்பில் விடவும்.

பின்பு மூடியை அகற்றிவிட்டு நீர்த்தன்மை வற்றி எண்ணெய் பிரியும்வரை தொடர்ந்து கிளறவும். அதனுள் உப்பைச் சேர்த்து தாச்சியை அடுப்பிலிருந்து அகற்றி சீனியைக் கொட்டிக் கிளறி கலவையை ஆறவிடுக. இப்போது சீனிச்சம்பல் தயார்.

## கண்ணே கண்ணே



* கண்களைச் சுற்றிக் கருவளையம் விழுவது ஏன்? சரியான தூக்கம் இல்லாததால். இவர்கள் வெள்ளரிக்காய் அல்லது உருளைக் கிழங்கு வில்லைகளை இமைகள் மீது வைத்துக் கொண்டு விழிகளை மூடியபடி ஓய்வெடுக்க வேண்டும். இதற்கென்று சில கிறீம்களும் இருக்கின்றன.
* சிலருக்குப் புருவத்திற்கும், இமைக்கும் உள்ள தூரம் அதிகமாக இருக்கும். அவர்கள் கனத்த ஐ ஷடோ பயன்படுத்த வேண்டும்.
* கண்கள் பம்மென்று பருத்தவர்கள் வெளிர் நிற ஐ லைனர்களைப் பயன்படுத்தக் கூடாது.
* நெருங்கிய, சிறுத்த விழிகளுக்கு வெளிர்நிற ஷடோ உகந்தது.
* நீளமான இமை முடிகள் இருந்தால் மஸ்காராவை முடியின் அடியில் தொடங்கி நுனிக்கு வரும்படி பூசவேண்டும்.

## லேடீஸ் ஸ்பெஷல்

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**மட்டக்களப்பு வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

ரி. விஜிதராணி,
65/1,இருதயபுரம் (கிழக்கு), மட்டக்களப்பு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BS

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 07-06-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## உங்கள் குழந்தைக்கு ஊட்டமான உணவு

குழந்தை பிறந்த அன்றையதினமே-முதல் பாலையே குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டும் என்ற உண்மையும் அண்மைக் காலத்தில் தான் வலியுறுத்தப்படலாயிற்று. அப்பால் குழந்தைகளுக்கு உகந்ததல்ல என்ற கருத்தும் நிலவியது. ஆனால், குழந்தைகள் எந்த நோயையும் தாக்குப்பிடிக்கும் வல்லமை பெறுவதற்கு முதல்பாலே சிறந்த ஔடதம் என்ற எண்ணம் இப்போது வலுவடைந்துவிட்டது.

முதல் ஆறுமாதங்கள் வரையாவது குழந்தைகள் தாய்ப்பாலிலேயே முழுமையாகத் தங்கியிருப்பதுதான் நல்லது. இடையிடையே புரதம் நிறைந்த- குழந்தைகளுக்கான வேறு உணவுகளைக் கொடுக்கலாம்.

தாய்ப்பாலுக்கு பசும்பால் அல்லது புட்டிப்பால் போன்றவை எந்த வகையிலும் ஈடாகமாட்டா. தாய்ப்பாலை பலாத்காரமாக மறக்கவைப்பது குழந்தையின் மனோ நிலையைப் பெரிதும் பாதிக்குமென்பதால் ஓரளவு விட்டுப் பிடித்து' தானாக மறக்க வைப்பதே நல்லது.



குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்றுப்போக்கு ஏற்படுவதற்கு, அதன் உடலுக்கு ஒவ்வாத உணவு வகைகளை உட்கொள்ள வைப்பதும் ஒரு காரணம். புரதம், கல்சியம், விட்டமின்கள், உப்புக்கள் பொதிந்த அளவான கலோரிகளைத் தரும் உணவுதான் குழந்தையின் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

கடந்த அரை நூற்றாண்டுக்குள் பிரசித்தமடைந்த அதிசய அவரை-சோயா பீன்ஸ் ஆகும். குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் வயதானவர்களுக்கும் வேண்டிய ஊட்டச் சத்தினைத் தரவல்லது சோயா. அத்துடன் மிகச் சுலபமாகக் கிடைக்கும் மிக விலை குறைந்த பொருளுமாகும். இதன் பெருமையை முதன்முதலில் உணர்ந்து உலகத்துக்கு உணர்த்திய பெருமை அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளையே சாரும்.

### ஒரு வயதான குழந்தைக்கான சோயா உணவு:

சோயா பீன்ஸ் விதைகளை சுத்தமான நீரில் 12 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பின்னர் அவற்றை ஓர் ஈரமான துணியில் மூட்டையாகக்கட்டிக் காற்றோட்டமான இடத்தில் தொங்கவிடவேண்டும். இரண்டு நாட்களின் பின்னர் முளை வந்திருக்கும். அவற்றை எடுத்து நீரில் நன்றாகக் கழுவி வெயிலில் காயவிடவேண்டும். பின்னர் இவற்றை மிக்சியில் அரைத்து ஈரமில்லாத ஒரு டப்பாவில் போட்டு வைத்துக் கொள்ளலாம்- ஒரு வாரம் வரை இம் மா கெட்டுப்போகாது.

### சோயா கூழ்:

இரண்டு மேசைக்கரண்டி சோயாப்பவுடரை அரை தம்ளர் பாலில் போட்டுக் கலக்கவும். சீனி அல்லது வெல்லம் அளவாகப் போட்டு தேன் கதலிவாழைப் பழம் ஒன்றும் சேர்த்து நன்றாகப் பிசையவும். இக்கலவையுடன் சிறிதளவு தண்ணீரும் சேர்த்து வேகவைத்து இறக்கி ஆறியபின் குழந்தைக்கு ஊட்டவும்.

**குறிப்பு:**

குழந்தைகளுக்கு எல்லாவகை உணவுமே ஒத்துக்கொள்வதில்லை. எந்த உணவாக இருந்தாலும் முதலில் மிகச் சிறிய அளவிலேயே ஊட்டிப் பார்க்க வேண்டும். மனநிறைவோடு அதனை உண்கிறதா? அருவருப்பு ஏற்படுகிறதா? என்பவற்றையெல்லாம் ஆராய்ந்தறிந்த பின்னர் முழுமையாக ஊட்டலாம்.

## மினுக்-மினுக்

முன்பு சாம்பல், அரப்புத்தூள் கொண்டு பாத்திரங்களைத் துலக்கி வந்தோம். ஆனால் நாகரிக உலகில் பாத்திரங்களைத் துலக்கக் கீறல் விழாத பலரகமான புதுப்புது துலக்கும் பொடிகளும் இன்று விற்பனைக்கு வந்துவிட்டன.

பாத்திரம் துலக்கும் பொடிகளை வாங்கும் பொழுது தரம் பார்த்து வாங்க வேண்டும். எல்லாத் துலக்கும் பொடிகளும் சிறிதளவு சோப்புத்தூள் கலந்துதான் தயார் செய்யப்படுகின்றன. எனவே அந்தப் பொடிகளால் பாத்திரங்களைத் துலக்கியதும் பலமுறை நன்றாகக் கழுவிய பிறகே அந்தப் பாத்திரங்களைப் பயன்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் சோப்புத்தூளிலுள்ள இரசாயனக் கலவை உடலுக்குள் சென்று கேடு விளைவித்து விடும்.

பாத்திரங்களைத் தேய்த்த பின்பு கையைப் பலமுறை நன்றாகத் தேய்த்துச் சுத்தம் செய்து கொண்டால்தான் தோல் சம்பந்தமான நோய்கள் அணுகாமல் காக்க முடியும்.

சிலர் பாத்திரங்களைத் துலக்க சோப்புக்களைப் பயன்படுத்துகின்றனர். சோப்பிலுள்ள காரத்தன்மை கைகளில் சொர சொரப்பையும், அரிப்பையும் ஏற்படுத்தும். எனவே பாத்திரம் துலக்க சோப் அல்லது துலக்கும் பொடிகளை சிறிய அளவுகளில் உபயோகப்படுத்துங்கள்.

விளம்பர வாசகங்களைக் கண்டு அடிக்கடி துலக்கும் பொடிகளை மாற்றி வாங்க வேண்டாம்.

பாத்திரம் துலக்கிய பின்பும், துணி துவைத்த பின்பும் கைகளில் சோப்புப் பிசுக்கு இல்லாமல் நன்றாகக் கழுவிக் கொள்ளுங்கள்.

பணம் கொடுத்து வாங்கும் பொருட்கள் உபயோகமானதாக இருக்க வேண்டும். அதனால் குடும்பத்தினரின் ஆரோக்கியமும் காக்கப்பட வேண்டும். அதனால் எதை வாங்கினாலும் தரமானதாகப் பார்த்து வாங்குங்கள்.


**தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி**

**தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்**

**பரிசுக் கூப்பன் இல 13**

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## உதிராத நாள்!

அடி மனதில் அந்த நிகழ்வுகளின் ரணங்கள்,
நினைக்கும் போது வேதனைக் கோலங்களில்
விழிப் பூக்கள் அடிக்கடி உதிரும்!
***
இதயக் கூட்டுக்குள் உயிர்க் குருவி
வெளியேறி வெளியேறி உட்புகும்:
படபடப்பு அதிகரிக்கும்:
பயம் இறுகக் கட்டிக் கொள்ளும்!
***
பார்வைக்குள் பயங்கர உலகம் பதிக்கப்படும்.
தென்னை மர அசைவுகளில் கூட தேகம்
விறைத்துப் போகும்! வசந்தகாலம் தான்:
இருந்தும் வேப்பமரக் கிளைகளில் கூவும் குயில்
கூட ஒழிந்து கொள்ளும்!
***
செவிப்பறை பிளக்கும் சத்தத்தில் காற்றும் நடுங்கும்!
தெரு எல்லாம் கறுப்பு அலை- ஓ...
அது சனங்களின் தலை....!
***
நடக்காமல் இடம் நகர்ந்ததென்றால், அன்றுதான்
நசுங்கிய உடல்களாய் நடு வீதியில்
நாளைய நினைவை நகர்த்தி வைத்து,
இன்றைய இரவுக்கு இடம் தேடிய அந்தப் பொழுதுகள்-
உறவுகளின் மனம் போல தூரத்தில் நிலவும்
எம்மோடு அலைந்தது: அவ்வப்போது
முகில் மூடி அழுதது!
***
உடமைகளை இறுக்கி விட்டு
உணவோடு ஒரு பாத்திரம்!
உறவோடு உயிர் மாத்திரம்!
கடல் தாண்டி தரை வந்தும்
தண்ணியில்லாத குளத்தில் நத்தைகளாய்
மீன்களாய் நாங்கள்!
***
இறுதி நேரச் சுவாசத்தோடு போராடும்
இதயமாய்... அந்த அவலத்தின்
நடுவத்தை விழிகளில் பதித்தபடி-
பாதங்கள் தான் நினைத்தபடி பயணித்த
அந்தக் கணங்களின் கலக்கம்!
***
மனதுக்குள் கொழுந்து விட்டு எரியும்
'திடு திடு' என்ற கனல் கொண்ட பயம்
தேய்ந்து மறைந்து புள்ளியாய்ப் போகும் உயிரை
பிடித்தபடி ஓடும் உடலை கருக்க
அடைக்கலம் ஆறுதல் கிடைக்காமல் அழுததும்
நாளையும் உள்ளதா...? நினைக்காமல்
நாங்கள் இருந்ததும்...
அறுந்து விழுந்து சிந்திய முத்து மாலையாய்:
உறவுகள் அங்கும் இங்குமாய்..
தேறுதல் இன்றி தேகத்தோடு மனதும்
சோகத்தோடு இருந்ததும்....ஓ... அந்த நாள்!
***
தனிமையிலும் மனம் தளர்கையிலும்
இதயக்குறிப்பேட்டில் இரத்தத்தால் வரைந்துவைத்த
'அந்தநாள்' விழிமூடிய பொழுதுகளில் கூட
கனவாய் கலங்க வைக்கும்!
***
ஜெயந்தி ஜெயசங்கர்- கொழும்பு-13.

## நிறம் மாறாத தூரிகை!

இன்றும் என்
கண்களில் ஈரம்
காயவே இல்லை!
***
உனக்காக தினம்
கண்கள் போதும்
உப்புக்கோடு அதே நிலையில்...!
***
ஒரு யாசகனுக்கு
நீ தந்த பரிசு-
கண்ணீர் மட்டுமே தரும்
அட்சய பாத்திரம்!
***
ஒரு குயிலை நீ
முகாரியில் பாடவைத்துவிட்டாய்!
உன் பகுவத்தின்
சொந்தமாய் ஒரு
பாடலின் நாவறுத்துவிட்டது!
***
என் வேதனைகளுக்கு
விருட்சமாகாவிட்டாலும்,
உன் திசையில் பறந்த என்
சிறகுகளையாவது
முறிக்காமல் இருந்திருக்கலாம்!
***
முத்துக்குளிக்க இடம்
தராவிட்டாலும்,
கரையோரே
கை கொடுத்திருக்கலாம்!
***
தூக்கத்தைத் திருடிய
உனக்கு
கனவுகளையாவது
விட்டு வைக்கவில்லை!
***
"ஓர் பிரியமான
குடைவாக்கி விட்டாய்!"
என்று உன்னை யார்
தூற்றினாலும்
என் தூரிகைக்கு
நிறம் மாறியதில்லை, இன்றும்
உன் நிறம் மட்டுமே!
பர்ஸான்-யடவத்த.

## பரிசு மழையில் நனையும் அதிஷ்டசாலிகள்

முரசின் பரிசுமழைப்போட்டிக்கு வந்து குவிந்த கூப்பன் மழையில் மூச்சுத் திணறிப் போனது. அசத்திவிட்டீர்கள் போங்கள். பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் 200 பேரின் பெயர்விபரங்கள் தொடர்ந்து வெளியாகும். முதல் 40 பேரின் பெயர், விபரங்கள் கடந்த வாரம் வெளியாகியிருந்தன. அடுத்த 20 பேரின் பெயர் விபரங்கள் இதோ.

41. கே. சுபாஷ்
திரு வள்ளுவர்புரம்,
தரவனால, டிக்கோயா.
42. ஆர். ஜெயந்தி
தொட்டுலாகலை,
ஹப்புத்தளை.
43. கே. அன்னலட்சுமி
பிரதான வீதி,
தேத்தாத்தீவு-2.
44. செல்வி. பி. சிறீரஞ்சனி
42, மூர் வீதி,
வெள்ளவத்தை.
45. வி. விக்னேஸ்வரன்,
ஸ்ரபட்டன் டிவிஷன்,
இறக்குவானை.
46. எஸ். சுதர்ஸன்
சிங்கம்ஸ் ஸ்ருடியோ.
கல்முனை-2.
47. எஸ். ரமணி
48/2, ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு-13.
48. எம். மகிந்தன்
10 பி, மன்னார் வீதி,
வவுனியா.
49. ஆர். நடராஜா
9, கிருஷ்ணன்கோவில் வீதி,
கல்லடி, மட்டுநகர்.
50. எஸ். வத்சலா
93/2, மோதர வீதி,
கொழும்பு-15.
51. ஆர்.எவ். மஜீத்
பாடசாலை வீதி,
பிறைந்துறைச்சேனை.
52. ஜே. மைதிலி
பல்மோஸ்டன்,
தலவாக்கலை.
53. எஸ். சர்மிளா பேகம்
மத்திய பள்ளி வீதி,
கிண்ணியா-2.
54. எம். மக்வூல்
75, சேர் ராஸிக் பரீத் மாவத்தை,
காத்தான்குடி-4.
55. எம். யசீர்
பாலநகர்,
மூதூர்-2.
56. செல்வி ஜெயப்பிரபா செல்லப்பா
162, விஸ்ட்வைக் வீதி,
கொழும்பு-15.
57. எஸ்.பஸ்மியா
இ-29, வட்டம்பார,
கபுகஸ்தலாவ, நாவலப்பிட்டி.
58. எஸ். சத்தியா
512, கன்னியா வீதி,
அன்புவழிபுரம்.
59. திரு மதி. நகுலேஸ்வரன்
LEISLER STR.35
97422.SCHWEIN FURT - GERMANY.
60. திரு மதி. கே. புவனேந்திரன்
25, WALTOW GARDENS
WEMBILEY, HA 9 8NH, - LONDON.

(மற்றையவர்களின் விபரங்கள் அடுத்த வாரம்)

## இரவே இல்லை

திட்டமிட்டு
திசைநோக்கித்
தீர்க்கப்படும்
மோட்டார்
வேட்டுக்கள் போன்று-ஏன்
உன் புன்னகைகளை
என்மீது
ஏவுகின்றாய்?
**
அடிக்கடி
காற்றும் போகும்
டயராகிவிட்டது-
என் வைராக்கியம்...!
**
புன்னகை என்னை
புரட்டிப் புரட்டி
எடுக்கின்றது:
உனக்கென்ன செலவு...?
உதிர்த்துவிட்டுப் போய்விடுவாய்!
**
நானோ-என்
நெஞ்சு நோக நோகச்
சுமந்து திரிகின்றேன்:
புனைபட்டன்
பரவாயில்லை-உன்
கண்பட்டதால்தான்
இரவேயில்லை!
சியோதயன்-இராகமை.

## மனமதில் நிறம்பும் நினைவுகள்...!

என் சுந்தர வாழ்வில்
சுகமாய் வந்தவளே!
உன் திருவடிகளில்
என் இதயம் தொலைந்தபோது
நானும் உன் ரசிகன்!
என் கண்ணீர் மாலைகளால்
உனக்கு காதலாபிஷேகம்
செய்வித்தேன்!
0–0–0
காலச் சுமைகளை விட்டுவிட்டு
நான் உன்னோடு
ஒடி வரவே சம்மதித்தேன்!
விதி எனக்கு
மரண மாலை அணிவித்த போதும்,
உனக்கு நான்
பூமாலை அணிவித்தே
அழகு பார்த்தேன்!
0–0–0
கண்ணீர்க் குடங்கள் சுமந்த
சந்தர்ப்பங்களெல்லாம்
உன்னை விட்டு விட்டு
என்னைத் தனியாய்ப்
பெயர்த்தெடுத்த பொழுதுகளில்
எனக்குள்ளேயே நான்
சிதை மூட்டி
எரிந்து சாம்பலாகிப் போனேன்!
0–0–0
என் விதிபற்றி நீ சிந்திக்கமுதல்
நான் உன்னை விட்டுப்
பிரிந்து போனதுதான் வேடிக்கை!
0–0–0
இனி,
உனக்கும் எனக்கும் ஒரு
உறவிருக்காது!
உன் சொந்தம் பற்றிய
கூறுகளில்
நினைவலைகளை விட்டுவிட்டு
எச்சப்பட்ட வாழ்வோடு
நான் இறுதை வழிப்
பயணம் போகிறேன்!
0–0–0
காவியுடை தரிக்காமல்
சன்னியாசியாகி விட்ட
என்
திரிப்பந்தங்களுக்கெல்லாம்
என்கண்ணீரை மட்டும்
காணிக்கையாக்குகிறேன்!
0–0–0
நான் உன்னை
ஏமாற்றியதாய்
எண்ணிக் கொண்டிருப்பதை
விட்டுவிடு!
உருகுவைத்து போன
என் எஞ்சிய

## தேன் கிண்ணம்

வாழ்க்கைப் பிசிறுகளை
எங்கிருந்தாலும்-
யாரோடானாலும்
அன்புடன்
உனக்காகவே
அர்ப்பணித்துக் கொள்வேன்!
0–0–0
மானுடபுத்ரன்

## சூரியக் குட்டி



வேருக்க
விறுவிறுக்க
மேகங்கள்
அங்குமிங்கும்
ஓடித்திரிந்தன!
**
சூரியன்
குட்டிபோடுமா?
**
குட்டி
போட்டாதைக்
கண்டவர்களும்
அனுபவித்தவர்களும்
சொன்னார்கள்!
**
எனவே, சூரியன்
குட்டி போடுவது
உண்மை!
**
வழமையான
அகதி(க்)
கொட்டில்கள்
அடுக்கடுக்காய்
மாட்டு(த்)
தொழுவங்கள்போல்
அமைந்திருந்தன!
**
தூரத்திலிருந்து
மெல்லமாக
ஒரு சத்தம்!
பின்புச் செவிப்பறை
வெடிக்க
ஒரு சத்தமும் அதிர்வும்!
**
சூரியன்
குட்டி
போட்டுவிட்டது!
**
எல்(லே)லா(ரு)ம்
இறந்தே
பிறந்தன(ர்),...!
மாரிமுத்து யோகராஜன்-
அக்கரைப்பற்று-08.

## யார் இவர்கள்


1


2


3

படம் 1- இவர் இந்திவரை சென்று வெற்றிக்கொடி நாட்டிய தமிழ் நடிகை. படம் 2- பிரபல நடிகரின் உபயத்தில் முன்னேறியவர். படம் 3- இப்போதும் நடிக்கிறார். மான் ரகங்களில் ஒன்றின் பெயர் கொண்டவர். கண்டு பிடித்தா மிற்றா? முடிவை சரிபார்க்க பக்கம் 18ஐ நாடவும்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(01.06.1997 தொடக்கம் 07.06.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | மனக் கலக்கம், கடன் சுமை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- | முயற்சி பலிதம், பண வரவு. | மு.ப. | 11 | மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- | காரியானுகூலம், கௌரவமிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- | பயனுள்ள செயல், அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| சனி- | காரியத்தடை, மனக் கிலேசம். | பி.ப. | 4 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | மனக் கலக்கம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| திங்கள்- | தொழில் மந்தம், கடன் படல். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- | இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, மனக்கிலேசம். | பகல் | 11 | மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- | வீண் குறை கேட்டல், கோபமிகுதி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- | காரியானுகூலம், பணவரவு. | பி.ப | 3 | மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- | பெரியோர் உதவி, பலவித பேறு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, பலவித நன்மை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | காரியானுகூலம், பெரியோர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- | வீண் முயற்சி, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, அந்நியர் பகை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- | பண வரவு, செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பணச் செலவு, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 4 | மணி |
| புதன்- | புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- | கடன் படல், தொழில் மந்தம். | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- | அதிகார விருத்தி, பயனுள்ள செயல். | பி.ப. | 2 | மணி |
| சனி- | காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன், புதன். |
| மிதுனம் | - வெள்ளி. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |

02.06.97 முதல்
சிம்மம்-இராகு
கும்பம்-கேது

★ சந்திரன்- மீனம், மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- | வீண் தொல்லை, அலைச்சல் மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- | காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- | தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, கடன் சுமை. | பி.ப. | 4 | மணி |
| சனி- | செலவு மிகுதி, பிரயாணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், காரியக் கேடு. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- | உயர்ந்த வாழ்க்கை, பணக் கஷ்டம். | பி.ப. | 4 | மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| புதன் - | உறவினர் உதவி, செல்வாக்கு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- | பொருள் வரவு, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | மனக் கலக்கம், குடும்ப பகை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- | இனசன விரோதம், மனப் பயம். | காலை | 7 | மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- | காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 4 | மணி |
| சனி- | புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | பிரயாண மிகுதி, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- | வீண் தொல்லை, கௌரவக் கேடு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. | 3 | மணி |
| சனி- | உறவினர் பகை, செல்வாக்கு இழப்பு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, செலவுமிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- | துயர் நீங்கும், காரிய சித்தி. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, செலவுக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, மனக் குழப்பம். | பகல் | 12 | மணி |
| சனி- | உயர்ந்த நிலை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி மேன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 4 | மணி |
| திங்கள்- | தொழில் உயர்ச்சி, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, பண விரயம். | பகல் | 12 | மணி |
| புதன்- | துயர் நீங்கும், மனக் கலக்கம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- | காரிய சித்தி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| சனி- | வீண் முயற்சி, பயனற்ற செயல். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| நாள் | பலன் | | நேரம் | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் பகை, மனக் குழப்பம். | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- | இனசன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| புதன்- | மனக் கலக்கம், வீண் முயற்சி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- | தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, கௌரவம். | மு.ப. | 10 | மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2


படிப்பகம்

www.padippakam.com





## குழந்தை

தொட்டிலுக்குள் உறங்கியெழும்
தூய முல்லை அரும்பு!
மொட்டுடைத்துத் திறந்த விழி
மோகனப் பண் சுரும்பு!

எட்டெடுத்து நடந்து வரும்
இரண்டு காலும் கரும்பு!
தொட்டெடுக்கப் பறந்து விடும்
துயரமென்னும் துரும்பு!

முப்பழத்தைப் பிழிந்த சுவை
மொழி, மழலைக் குறும்பு!
கொப்பளிக்கும் பனி நகையில்
குளிரும் உலை இரும்பு!


இட்டணைக்கத் தழும்பிமனம்
இதயம், உடல், நரம்பு!
கட்டவிழ்க்கக் குழந்தை தரும்
களிப்புக் கில்லை வரம்பு!

-இளங்குமரன்-

நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம்;
நீசத் தொண்டும் மடமையும் கொண்ட
-தாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிட
சாலவே அரிதாவ தோர் செய்தியாம்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஆமையின் ஆசை



பறவைகள் எல்லாம் வானத்தில் பறந்து போவதை கீழே இருந்து ஆமை ஒன்று அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தது. அவைகளைப் போலத் தானும் பறக்க வேண்டும் என்ற ஆசை அதற்கு ஏற்பட்டது.

அன்று ஆமை தன்னருகில் வரும் பறவைகளைப் பார்த்து,

"அழகான பறவைகளே! நானும் உங்களைப்போல ஆகாயத்தில் வட்டமிட்டு உலா வரவேண்டும். எனக்கோர் உதவி புரியுங்கள். என்னைத் தூக்கிச் சென்று உலகத்தைக் காண்பியுங்கள்!

அப்படி நீங்கள் செய்தால் நான், உங்களுக்கு ஒரு வெகுமதி தருவேன். என்னிடம் கிடைப்பதற்கரிய நவரத்தினங்கள் உள்ளன. என் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பவர்களுக்கு அதைப் பரிசாகத் தருவேன்," என்று பொய்யாக ஆசை வார்த்தை கூறியது.

ஆமை சொன்னதைக் கேட்ட பறவைகளுக்கு அதனிடம் உள்ள நவரத்தினங்களை அடைய வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. இருப்பினும் ஆமையின் பாரத்தை எண்ணிப் பயந்தன. அதனால் ஒரு பறவையும் அதன் ஆவலைப் பூர்த்தி செய்யவில்லை.

கடைசியாக ஒரு பருந்து நவரத்தினங்களுக்கு ஆசைப்பட்டு ஆமையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முன் வந்தது.

மறுநாள் பருந்து ஆமையைத் தூக்கிக் கொண்டு உயர உயரப் பறந்து சென்றது. ஆமைக்கு ஒரே மகிழ்ச்சி. ஆனால் பருந்துக்கோ ஒரே கால் வலி. அது ஆமையைப் பார்த்து,

"ஆமையே! உன்னை இவ்வளவு தூரத் திற்குத் தூக்கிவந்து விட்டேன். இனிக் கீழே இறங்க வேண்டியதுதான். நீ எனக்குத் தருவதாகச் சொன்ன நவரத்தினங்களை எங்கே வைத்திருக்கிறாய் சொல்," என்று கேட்டது பருந்து.

அதற்கு ஆமை அசட்டுப் புன்னகை ஒன்றை உதிர்த்துவிட்டு, மௌனமாக இருந்தது. பருந்துக்கு விஷயம் புரிந்து விட்டது.

ஆமை தன்னை ஏமாற்றி விட்டதை அறிந்து கோபம் கொண்டது பருந்து. ஆமையை ஒரு கருங்கல்லுப் பாறைக்கு மேலாக 'தொபுக்கடீர்' என்று போட்டுவிட்டு பறந்தது. ஆமையின் ஓடு உடைந்து சிதறிச் செத்தது. பருந்து கீழே வந்து அதன் மாமிசத்தைத் தின்று தீர்த்தது.

வேண்டாத ஆசையாலும், தேவையில்லாத பொய்யாலும் ஆமைக்குக் கைமேல் பலன் கிடைத்தது.

இதிலிருந்து வேண்டாத ஆசையும் தேவையில்லாத பொய்யும் ஆபத்தை விளைவிக்கும் என்று புரிகிறதல்லவா?

## வாரம் ஒரு நாடு
### வனுவட்டு



**தலைநகர்**- விலா
**பரப்பளவு**- 14,760 சதுரகிலோ மீட்டர்
**மக்கள் தொகை**- 1.74 இலட்சம்
**மொழி**- ஆங்கிலம், ஃபிரெஞ்சு, பிஸ்லாமா.
**எழுத்தறிவு**- 90%
**சமயம்**- கிறிஸ்தவம், ஆவி வழிபாடு
**நாணயம்**- வாது
**தனிநபர் வருமானம்**- 1120 டொலர்.

**அமைவிடம்:**
பசிபிக்கிலுள்ள இரு தொடர் நிலைத் தீவுகளைக் கொண்ட நாடு. இது 13 பெரிய தீவுகளையும், 80 சிறிய தீவுகளையும் கொண்டுள்ளது.

**வரலாறு:**
தொடக்க காலத்தில் ஐரோப்பியக் கடற் கொள்ளைக்காரர்களின் இருப்பிடமாயிருந்த இத்தீவுகள், 1906ல் ஃபிரான்ஸ், பிரிட்டன் ஆகியவற்றின் கீழ் வந்தன. முதலில் இந்த நாட்டிற்கு நியூஹெப்ரிடீஸ் என்று இருந்த பெயர் சுதந்திரமடைந்த பின் வனுவட்டு என்று மாற்றப்பட்டது. இது பிரிட்டனிடமிருந்து 1980ம் ஆண்டு ஜூலை மாதம் 1ம் திகதி சுதந்திரமடைந்தது.

**பொருளாதாரம்:**
முக்கிய பணப்பயிர்களான கொப்பரை, கொக்கோ, கோப்பி, ஆகியன உற்பத்தியாகின்றன. ஈயம் போன்ற உலோகத் தயாரிப்பு வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு வெட்டியெடுக்கப்படும் மங்கனீஸ் அதிகளவில் ஜப்பானுக்கு ஏற்றுமதியாகின்றது.

## சந்திரனில் 12 பேர்...



முதன் முதலில் சந்திரனில் காலடி எடுத்து வைத்தவர் அமெரிக்காவின் நீல ஆம்ஸ்ரோங் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

இதுவரை சந்திரனில் எத்தனை பேர் நடந்திருக்கிறார்கள் என்று தெரியுமா? இது வரை சந்திரனில் 12 பேர் நடந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் அமெரிக்கர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மொத்தம் சந்திரனில் 160 மணி நேரத்தைச் செலவு செய்த இவர்கள் 2196 பாறைக் கற்களைப் பூமிக்கு எடுத்து வந்துள்ளனர்.

இந்தக் கற்கள் 35 ஆயிரம் துண்டுகளாக உடைக்கப்பட்டு 19 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.06.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 195
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 193

பரிசுக்குரியவர்:
செல்வி ஜெகநாதன்-பமிலா தனுஷிக்கா,
இராம கிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம், கல்முனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| கே. ஷனாஸ் மொஹமட்<br>தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | ச. கருணாநிதி,<br>கோணக்கலை தோட்டம், லோவர் டிவிஷன், பசறை. |
| பெ. டிலிசா,<br>புனித சவேரியார் மகளிர் பாடசாலை, மன்னார். | நௌஷாத் அப்துல் கபூர்,<br>தி/அல் ஹிஜ்ரா ம.வி. முள்ளிப்பொத்தானை. |
| எச். ஆர். எ.ஃப். ஹஸ்லா பானு,<br>மன்னார் வீதி, புத்தளம். | தவராஜா கோபிகா,<br>ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் ம.வி., கம்பளை. |
| திருநாவுக்கரசு அருட்செல்வி,<br>விவேகானந்தாக் கல்லூரி, உவர்மலை, திருமலை. | ஏ.எம். வஹ்பீக,<br>பு/எருக்கலம்பிட்டி மு.ம.வித். பாலாவி. |
| ஏ.ஏ. ளாறுன் பறூஸா,<br>ஜமாலியா முஸ்லிம் ம.வி. படகொள்ளாதெனிய, கண்டி. | சி. கிருஷ்ணபிரபா,<br>இ.கி. வித்தியாலயம், மண்டூர்-1. |

## விடுகதைகளும் விடைகளும்


1. முறையின்றித் தொட்டால் வரையின்றித் தாக்குவான்.
அவன் யார்?
2. செக்கச் சிவந்தவன்- தண்ணீருக்கு மட்டும் பயந்தவன்.
அவன் யார்?
3. வளர்வான் தேய்வான், நோயுமில்லை நொடியுமில்லை.
அவன் யார்?
4. கீழே வீசினால் மேலே வருவான்.
அவன் யார்?
5. அடிக்காமலே துடிப்பவன்.
அவன் யார்?
6. தங்கை தீட்டிய ஓவியம் தரையில் தவளுது.
அது என்ன?
7. தண்டு இல்லாத வட்ட் இலை.
அது என்ன?
8. தீப்பொறி பறக்கும், ஆனால் தீப்பிடிக்காது.
அது என்ன?
9. அழைக்காமல் வருபவன்-அலைக்கழிக்காமல் செல்ல மாட்டான்.
அவன் யார்?
10. ஓங்கி வளர்ந்தவனை ஒடித்துக் கடித்தால் இனிப்பான்.
அவன் யார்?

### விடைகள்

1. மின்சாரம் 2. நெருப்பு
3. நிலவு 4. பந்து
5. தொலைபேசி 6. கோலம்
7. அப்பளம் 8. மின்மினிப்பூச்சி
9. நோய் 10. கரும்பு.

தொகுப்பு: ஆர். தமிழ்ச்செல்வன்.

## பிக்பென் (BIG BEN)



இங்கிலாந்து நாட்டின் தலைநகரான இலண்டனில் உள்ள பிக்பென் கடிகாரம், 1858ம் ஆண்டு அமைக்கப்பட்டது. இங்கிலாந்து பாராளுமன்றக் கட்டடத்தில் சேர் பெஞ்ஜமின் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கடிகாரம் ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை மணி அடித்து ஓசை எழுப்புகின்றது. இந்தக் கடிகாரத்தை அமைத்தவர் சேர் பெஞ்ஜமின்.

இதனால் உலகிலேயே மிகப் பெரிய கடிகாரமான இதனுடன், அதை அமைத்தவரின் பெயரான பென் என்பதையும் சேர்த்து பிக் பென் (BIG BEN)என்று ஆக்கிவிட்டார்கள். நாளடைவில் இந்தப் பெயரே நிலைத்து விட்டது.

பிக் பென்னின் உச்சியை அடைய 374 சுழற்படிக்கட்டுகளில் ஏறவேண்டும். ரோமானிய எண்களுடன் உள்ள இந்தக் கடிகாரத்தின் பெண்டுலம் 13அடி நீளமானது. இந்தக் கடிகாரத்தின் எடை 13 1/2 தொன் ஆகும்.

இந்த இராட்சசக் கடிகாரம் அமைக்கப்பட்டபோது, இதற்கு வாரம் ஒருமுறை இரண்டு பேர் ஏறிச் சென்று சாவி (வைன்) கொடுத்து இயங்க வைப்பார்கள். இப்போது இதற்கு மின்சாரத்தின் மூலம் சாவி (வைன்) கொடுக்கப் படுகிறது.

## பெரிய ஏரிகள்

உலகின் மிகப் பெரிய 10 ஏரிகளும் அவற்றின் பரப்பளவுகளும் வருமாறு:

| ஏரிகள் | பரப்பளவு (சதுரகிலோ மீட்டர்) |
|---|---|
| 1. காஸ்பிஸ்கோயமோர் (ஈரான்-ரஷ்யா) | 3.93,898 |
| 2. சுப்பீரியர் ஏரி (கனடா- அமெரிக்கா) | 82,414 |
| 3. விக்டோரியா (தான்சானியா) | 69,485 |
| 4. அரல்ஸ்கோயமோர் (கஜகஸ்தான்- உஸ்பெஸ்கிஸ்தான்) | 68,682 |
| 5. ஹுரோன் (கனடா) | 59,596 |
| 6. மிச்சிக்கன் (அமெரிக்கா) | 58,016 |
| 7. தான்கான்யிகா (கிழக்கு மத்திய ஆபிரிக்கா) | 32,893 |
| 8. கிரேட்பியர் (கனடா) | 31,792 |
| 9. ஓஷேரோ பைக்கால் (ரஷ்யா) | 31,492 |
| 10. மாளவி (மத்திய ஆபிரிக்கா) | 29,720 |

## ஓஸோன் வாயு



ஓஸோன் என்றால் என்ன தெரியுமா? நாம் சுவாசிப்பதற்குத் தேவையான ஒட்சிசன் வாயுவின் ஒரு பிரிவுதான் ஓஸோன்.

வாயு மண்டலத்தில் மிகவும் குறைந்த அளவில் இது இருந்தாலும் பூமிக்கு மேலே ஓஸோன் வாயுப்படலம் படர்ந்துள்ளது.

சூரியனில் இருந்து பூமிக்கு வரும் சூரிய ஒளியில் புற ஊதாக் கதிர் என்னும் ஒரு வகைக் கதிர்வீச்சு மனிதனுக்குத் தீங்கை விளைவிக்கக் கூடியது. இந்தக் கதிர் வீச்சால் மனிதனுக்கு பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக தோல் நோய்கள், கண் பாதிப்புக்கள் போன்றவை. அத்துடன் பூமியில் காணப்படும் தாவரங்களுக்கும் இதனால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இந்தப் புற ஊதாக் கதிர்வீச்சை ஓஸோன் வாயுப்படலம் 99 சதவீதம் தடுத்து வடிகட்டிப் பூமிக்கு அனுப்புகின்றது.

இப்போது உள்ள ஓஸோன் வாயு மண்டலம் ஓட்டையாகி வருகிறது. இந்த ஓஸோன் வாயு மண்டல ஓட்டை மிகப் பெரியதாகி விட்டால் மனித இனம் உயிர் வாழ்வதே கேள்விக்குறியாகிவிடும்.

அண்டார்ட்டிக்கா கண்டத்தின் வாயு மண்டலத்தில் ஓஸோன் பெருமளவுக்குக் குறைந்து வருவது கண்டு விஞ்ஞானிகள் குழு அச்சம் தெரிவித்துள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

# புதிய தொடர்

# உடைந்த இரவு

இரவு 1





க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

தினேஷ் டெண்டர் சம்பந்தமான பைல் ஒன்றைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த அந்த மத்தியான வேளையில் மேஜைமேல் இருந்த டெலிஃபோன் முணுமுணுத்துக் கூப்பிட்டது.

அந்த முப்பது வயது தினேஷ் ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தான்.

மறுமுனையில் ஒரு பெண் குரல் கேட்டது.

"மிஸ்டர் தினேஷ் ப்ளீஸ்...?"

"ஹோல்டிங்...."

"ஓ... மிஸ்டர் தினேஷ்.... நீங்கதானா.....நான் பவ்யா?"

"எந்தப் பவ்யா...?"

"பார்த்தீங்களா.... மறந்துட்டீங்க...?"

"ஸாரி... தப்பா நினைக்காதீங்க.... கொஞ்சம் ஆபீஸ் டென்ஷன்... அதான் எதுவுமே சட்டுன்னு ஞாபகத்துக்கு வரலை...."

"சிரமப்படாதீங்க மிஸ்டர் தினேஷ்.... இந்தச் சின்ன வயசிலேயே ஒரு பெரிய கம்பெனியைக் கட்டிக் காக்கிற உங்களுக்கு என்னை மாதிரி ஒரு சிலமணி நேரமே பழகிய பெண்ணை ஞாபகம் வெச்சுக்கிறது கஷ்டம் தான்..."

"ஸாரி... நீங்க...."

"ஸ்வீட் ஷேர் அமைப்புக்கான பிரஸிடெண்ட். நீங்களும் உங்க மனைவியும் போனவாரம் நாங்க கண்டக்ட் பண்ணின ஒரு ஃபங்ஷனுக்கு வந்தீங்களே...?"

தினேஷ் சட்டென்று ஞாபகம் வந்து மலர்ந்தான். "இப்ப ஞாபகம் வருது மிஸஸ் பவ்யா சிவராமன்?"

"அதே....அதே...."

"என்ன இந்த மத்தியான நேரத்துல ஃபோன்...?"

"உங்களுக்கு ஒரு சந்தோஷமான செய்தி...."

"என்ன...?"

"எங்க 'ஸ்வீட் ஷேர்' அமைப்பு வருஷா வருஷம் ஒரு புதுமையான போட்டியை நடத்திட்டுவருது."

"புதுமையான போட்டியா....?"

"ஆமா....."

"என்ன போட்டி...?"

"அந்தப் போட்டிக்கு பேரு. ஃபிப் டி.... ஃபிப்டி..."

"புரியலையே....?"

"புரியும்படியாவே சொல்றேன் ஸார். ஒவ்வொரு ஆணோட வெற்றிக்குப் பின்னால் அவனுடைய மனைவி இருக்கிறாள் என்கிற உண்மையை நீங்க ஒத்துக்கறீங்களா...?"

"ஷ்யூர்...ஷ்யூர்... நோ... டவுட்."

"நாங்க வருஷா வருஷம் சிட்டி பூராவும் சர்வே பண்ணி வெற்றிகரமான கணவன்–மனைவிகளைக் கண்டு பிடித்து ஒரு அவார்டைத் தந்துட்டு வர்றோம். இந்த வருஷம் அந்த அவார்டை தட்டிக்கிட்டு போறது நீங்களும் உங்க மனைவியும்தான்.... எங்க 'ஸ்வீட் ஷேர்' அமைப்பில் இருக்கிற அத்தனை பெண்களோட ஓட்டுக்களும் உங்க ஜோடிக்குத் தான்."

"ஓ.... தேங்க்யூ... வெரிமச்.... இந்த விஷயம் தெரிஞ்சா என்னோட வொய்ப் மைத்ரேயி ரொம்பவும் சந்தோஷப் படுவா...!"

"ஸார்... இந்த விஷயத்தை முதல் முதலா உங்க மனைவிகிட்ட சொல்ல ஆசைப்பட்டு வீட்டுக்கு ஃபோன் பண்ணினோம். உங்க ஃபோன்ல என்கேஜ்ட் டோன் மாதிரி ஒரே சத்தம்...."

"ஸாரி மிஸஸ் பவ்யா... வீட்டு ஃபோன் ரெண்டு நாளா அவுட் ஆஃப் ஆர்டர்... இன்னிக்கு சாயந்தரம் சரியாயிடும்னு நினைக்கிறேன்..."

"ஸார்.... அப்படீன்னா இந்த விஷயத்தை உங்க மனைவிகிட்டே நீங்களே கன்வே பண்ணிடறீங்களா...?"

"கண்டிப்பா... இப்போ மத்தியான லஞ்ச் சாப்பிட வீட்டுக்கு புறப்பட்டுட்டிருக்கேன்...."

"அப்புறம் சார்?"

"சொல்லுங்க....."

"இந்த மாசக் கடைசிக்குள்ளே எங்க அமைப்பின் சார்பில் ஒரு பாராட்டு விழாவை நடத்தப் போறோம்.... உங்களுக்கு வசதியான ஒரு தேதியை கொடுத்தா... நாங்க ஏற்பாடுகளை கவனிச்சிடறோம்...."

"என்னோட வொய்ப் மைத்ரேயியை கன்சல்ட் பண்ணிட்டு உங்களுக்கு தகவல் சொல்றேன்...."

"தேங்க்யூ ஸார்....!"

தினேஷ் ரிஸீவரை வைத்தான்.

மனசுக்குள் சந்தோஷம் முட்டியது. மைத்ரேயிக்கு விஷயம் தெரிந்தால் மகிழ்ச்சியின் உச்சிக்கே போய் உட்கார்ந்து கொள்வாள். அவளுக்கு இது மாதிரியான பெருமைகள் பிடிக்கும்.

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட பின்னாடிதானே உங்க கம்பெனி டெவலப் ஆச்சு...?" இது அவள் அடிக்கடி சொல்கிற ஒரு வாக்கியம்.

அது ஓரளவு உண்மையும் கூட. மைத்ரேயின் வருகைக்குப் பின்தான் கம்பெனி ஒரு கணிசமான லாபத்தைப் பார்த்தது. கல்யாணமான இந்த மூன்று வருட காலத்தில் தினேஷின் ஃபைனான்ஸ் கம்பெனி எல்லோருடைய உதடுகளிலும் உச்சரிக்கப்பட்டது.

ஏற்கனவே பெருமை அடித்துக் கொள்கிற மைத்ரேயி இந்த 'ஸ்வீட் ஷேர்' அமைப்பின் அவார்டைப் பற்றி கேள்விப்பட்டால் பங்களா பூராவும் குதித்து குதித்து நடனமாடி விடுவாள்.

தினேஷுக்கு அந்த சந்தோஷத்தைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. பார்த்துக் கொண்டிருந்த ஃபைல்களை தள்ளி வைத்துவிட்டு கழுத்து டையை இறுக்கியபடி எழுந்தான்.

கூப்பிட்டான்.

"சோமு...."

"ஸார்...." அட்டெண்டர் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான்.

"அக்கௌண்டண்ட் சீட்ல இருக்காரா... இல்லே சாப்பிடப் போயிட்டாரா....?"

"சீட்லதான் இருக்கார் ஸார்..."

"சரி... இந்த இரண்டு ஃபைலையும் அவர்கிட்ட கொண்டுபோய் குடு. ஏதாவது ஃபோன் வந்தா மெஸேஜ் என்னன்னு கேட்டு நோட் பண்ணி வெக்கச் சொல்லு."

"சரி ஸார்...."

தினேஷ் வெளியே வந்தான். ஆபீஸ் ஸ்டாஃப் பாதிபேர் காண்டீனுக்கு போயிருக்க, நாற்காலிகள் வெறிச்சோடித் தெரிந்தன.

வேக நடைபோட்டு போர்டிகோவுக்கு வந்து காத்திருந்த பிங்க் நிற கண்டஸா காரில் ஏறி அதற்கு உயிர் கொடுத்துக் கிளப்பினான்.

மத்தியான சென்னை அமில வெய்யிலில் இருந்தது. ட்ராபிக் சிக்னல்களுக்கு கட்டுப்பட்டு காரை விரட்டி ராஜா அண்ணாமலைப்புரத்தில் இருந்த பங்களா வந்து சேர்ந்தபோது மணி 1.50.

போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டு கிரானைட் படிகள் ஏறி காலிங் பெல் பட்டனைத் தொட்டுத் தேய்த்தான்.

அழைப்பு மணி உள்ளே குயிலாய்க் கூவியது.

சரியாய் 30 நிமிட அவகாசத்துக்குப் பின் கதவுதிறக்க மைத்ரேயி அழகாய் ஆச்சரியப்பட்டாள்.

"அட... டைரக்டர்ஸ் மீட்டிங் இருக்கு. மத்தியானம் லஞ்சுக்கு வரமாட்டேன்னு காலையில சொல்லிட்டு போனீங்க.... இப்ப வந்து நிக்கறீங்க...?"

தினேஷ் டையைத் தளர்த்திக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

"இன்னிக்கு மீட்டிங் கான்சல்... ஃபோன் பண்ணி சொல்லலாம்னு பார்த்தா வீட்டு டெலிஃபோன் அவுட் ஆஃப் ஆர்டர்...."

"நீங்கதான் லஞ்சுக்கு வரப் போறதில்லைன்னு நினைச்சு லஞ்ச் மெனுவை குறைச்சுட்டேன்...."

"பரவாயில்லை.... இருக்கிறதைப் போடு...."

"வாங்க..."

டைனிங் டேபிளை நோக்கி நடை போட்ட மைத்ரேயின் செழிப்பான தோளைப் பற்றித் தூக்கினான்.

"அதுக்கு முந்தி ஒரு விஷயம்."

"என்ன...!"

"உனக்கு ஒரு அவார்ட் கிடைச்சிருக்கு."

"அவார்ட்டா....?"

புருவங்களை உயர்த்தியவளிடம் விபரத்தைச் சொல்ல அவளுடைய முகம் ஒரு பெரிய மலர்ச்சிக்குப் போயிற்று. தன் இடது கை கட்டை விரலை வளைத்தாள்.

"பார்த்தீங்களா...என்னோட பெருமையை...!"

"பின்னே என்னோட பொண்டாட்டியாச்சே...?"

"பாராட்டு விழா உண்டாமா?"

"ம்.... உண்டு.... நமக்கு வசதியான தேதியைச் சொன்னா அந்தத் தேதியில் பாராட்டு விழாவை வெச்சுக்கறாங்களாம்."

தினேஷ் சொல்லிக் கொண்டே படுக்கையறைக்குள் நுழைந்து பேண்ட்டையும் சர்ட்டையும் உருவிவிட்டு லுங்கிக்கு மாறினான்.

"நீ சாப்பிட்டியா மைத்ரேயி...?"

"ம்... ஆச்சு..."

"சரி ஃபேஸ் வாஷ் பண்ணிட்டு வந்துடறேன். டைனிங் டேபிள்ல எடுத்து வை.... சாப்பிட்டுகிட்டே பேசுவோம்..."

"சீக்கிரமா வாங்க..."

தினேஷ் படுக்கையறையை ஒட்டியிருந்த பாத்ரூமுக்குள் நுழைய, மைத்ரேயி டைனிங் டேபிளை நோக்கிப் போனாள். பாதிதூரம் போனவள் சட்டென்று நின்று பக்கவாட்டில் இருந்த ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்தாள்.

அங்கே சுவரோரமாய்த் தெரிந்த பழைய பீரோவுக்குப் பக்கத்தில் போய் நின்று மெல்ல குரல் கொடுத்தாள்.

"பாஸ்கர்...."

குரலைக் கேட்டதும் பீரோவுக்குப் பின்னாலிருந்து ஒரு அழகான இளைஞனின் முகம் வியர்வையோடு கலவரமாய் வெளிப்பட்டது.

"என்ன மைத்ரேயி.... உன்னோட புருஷன் மத்தியான சாப்பாட்டுக்கு வரமாட்டான்னு நீ சொன்னே... இப்போ வந்திருக்கானே...?"

"டைரக்டர்ஸ் மீட்டிங் கான்ஸலாயிடுச்சாம்..."

"உண்மையா... பொய்யா...?"

"உண்மைதான்...."

"எனக்கென்னமோ பயமாயிருக்கு... உனக்கும் எனக்கும் இருக்கிற தொடர்பைப் பத்தி ஸ்மெல் பண்ணியிருப்பானோ....?"

"அந்த அளவுக்கு அதுக்கு அறிவு பத்தாது. மத்தியான சாப்பாட்டுக்குத்தான் வந்திருக்கு..."

"சாப்பிட்டு போயிடுவானா... இல்லே இன்னிக்கு ஆபீஸுக்கு போகாமே இங்கேயே டேரா போட்டுடுவானா...?"

"நான் விடுவேனா.... சாப்பிட்டதும் துரத்திடுவேன்... நீங்கமட்டும் ஒரு மணி நேரத்துக்கு மூச்சு காட்டாமே இந்த ஸ்டோர் ரூமுக்குள்ளேயே இருங்க.... என்னோட குரல் கேட்டாத்தான் நீங்க வெளியே வரணும்...."


"ஒரே புழுக்கமா இருக்கு மைத்ரேயி..."

"பொறுத்துக்குங்க பாஸ்கர்...." அவனுடைய கன்னங்களை வருடிக்கொடுத்துவிட்டு ஸ்டோர் ரூமைவிட்டு வெளியே வந்து டைனிங் டேபிளைத் தொட்டாள்.

இருதயத்துக்குள் ஒருவித படபடப்பு அரும்பியிருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சாப்பாட்டுத் தட்டை எடுத்து வைத்தாள்.

தினேஷ் விசில் சத்தத்தோடு குளியலறையிலிருந்து வெளிப்பட்டு டவலால் ஈரமுகத்தை ஒற்றியபடி டைனிங் டேபிளுக்கு வந்தான். **(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். உதயன்.
வயது: 23
முகவரி: புதுக்குடியிருப்பு, தம்பலகாமம், திரு மலை.
பொழுதுபோக்கு: வானொலி.



பெயர்: எம். ரஸ்மி.
வயது: 25
முகவரி: 60, சீனன் கோட்டை, பேருவளை.
பொழுதுபோக்கு: வானொலி பத்திரிகை.



பெயர்: வி. ஏகாம்பரம்.
வயது: 28
முகவரி: P.O.BOX-1395, SALALAH-211, SULTANATE OF OMAN.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: கே. சசிகாந்த்.
வயது: 20
முகவரி: குறுமண்வெளி-02, களுவாஞ்சிக்குடி.
பொழுதுபோக்கு: சினிமா.



பெயர்: என். நஜீமா.
வயது: 19
முகவரி: அநுராதபுரவீதி, புப்போகம, கட்டுக்கெலியாவ.
பொழுது போக்கு: ரீ.வி., வானொலி.



பெயர்: எம். சைனுதீன்.
வயது: 26
முகவரி: P.O.BOX-41207, JALEEBAL-SHOYOUKH, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: பாயிலஸ் முகமட்
வயது: 26
முகவரி: P,O,BOX-11273, DAMMAM-31453, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை.

பெயர்: எம். ரஸ்மத்துல்லா.
வயது: 20
முகவரி: 175, பிரதான வீதி, கெக்கிராவை.
பொழுதுபோக்கு: புத்தகம்.

பெயர்: கே. சிறீதரன்.
வயது: 18
முகவரி: 63, சீன் கொலனி, பூண்டுலோயா.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஐ. விநாயகமூர்த்தி.
வயது: 24
முகவரி: சிங்காரவத்தைத் தோட்டம், பொகவந்தலாவை.
பொழுது போக்கு: பத்தரிகை, கரம்.

பெயர்: ஆர். தயாகரன்.
வயது: 29
முகவரி: HAUPT STR-37, 4658 DANIKEN, SWITZERLAND.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். கலாப்.
வயது: 19
முகவரி: 222, சதாம் வீதி, உடதெனிய, கம்பளை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

# அத்தியாயம் 13

## புதுமைத் தொடர்

# கனவு மெய்ப்பட வேண்டும்

### இதுவரை

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப்பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான்.

பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்து சேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான்.

கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள். உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்து சேர்கிறாள். பிறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா.

கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள்.

இனி....

"தோ, பாருங்கள்! அவள் நல்லவள். கணேஷ், நர்ஸாக இருந்தால் என்ன மனுஷிதானே- என்னாட்டம், சில பேரைப் பார்த்ததுமே பிடித்துப்போய்விடுமே, எனக்கு அவளைப் பிடித்துவிட்டது. அவளுடன் இருந்தால் நான் சந்தோஷமாக உணர்வேன். தயவு செய்து...." என்று கெஞ்சினாள் சுமதி.

கணேசன் பதில் பேசவில்லை. வெறுமனே தலையசைத்தான்.

ஒரு அற்ப விஷயத்துக்காக, பெண் ஒருத்தி இப்படிக் கெஞ்ச வேண்டுமா? வேண்டாம். வாழ்ந்து முடித்த பிறகே இந்த 'வேண்டாம்களை'யெல்லாம் அவளால் நினைத்துப் பார்க்க முடிந்தது என்பதே அவளது துரதிஷ்டமாய் இருந்தது.

ஞாயிறு அன்று வெளிச்சம் வரும் முன் அவர்கள் புறப்பட நிச்சயித்தார்கள். இருள் பிரியும் முன்பே வசந்தி அவள் சினேகிதன் ஒருவனுடன் வந்து ஆட்டோவில் இறங்கினாள். கணேசனுக்கும், சுமதிக்கும் அவனை பீட்டர் பெர்னான்டஸ் என்று அறிமுகம் செய்து வைத்தாள். சாயம் போன நீலநிற ஜீன்ஸ் பேண்ட்டும், பெரிய கட்டம் போட்ட சட்டையும், இளம் தாடியுமாக இருந்தான் பீட்டர். அவன் கண்களின் அசாதாரண தீட்சண்யம் யாரையும் மீண்டும் பார்க்கத் தூண்டும். இருவருக்கும், மிக அழகாக கரம் குவித்து வணக்கம் செலுத்தினான் அவன்.

"சுமதி, இவரும் நம்முடன் அழகர் மலைக்கு வருகிறார். உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லையே? பீட்டர் ஒரு ஓவியர். மலைக்காட்சியை அவர் மிகவும் விரும்புகிறார். உங்களிடம் அனுமதி பெறவில்லையே என்று யோசித்தேன். ஆனாலும் நீங்கள் மறுக்கப் போவதில்லை என்னும் துணிவோடு அழைத்து வந்துவிட்டேன். நான் தவறு செய்து விடவில்லையே....?"

தவறு செய்து விட்டோமோ என்கிற தொனியில் இறைஞ்சினாள் வசந்தி. சுமதி தான் முந்திக்கொண்டு சொன்னாள்: "அதனால் என்ன, வசந்தி? ஏன் ஏதோ தப்பு செய்தது மாதிரிப் பேசுகிறாய்? உல்லாசப் பயணத்துக்குத்தானே போகிறோம். உன் நண்பர் என் நண்பரும் தானே?" என்றவள், கணேசைப் பார்த்து, அவன் அங்கீகாரம் கோரும் நோக்கில், "என்ன, நான் சொல்வது சரிதானே?" என்று முடித்தாள்.

பயணத்துக்கென ஏற்பாடு செய்யப் பட்டிருந்த டாக்சியில், டிரைவருக்குப் பக்கத்தில் பீட்டர் அமர, பின் சீட்டில் கணேசனும், அவனை அடுத்து சுமதியும், அவளை அடுத்து வசந்தியும் அமர்ந்தார்கள்.

பயணத்தின் போது சுமதி சொன்னாள், "வசந்தி நீ புடவையில் மிக அழகாக இருக்கிறாய். நர்ஸ் உடையில் உன்னைப் பார்த்துவிட்டு, இந்த உடையில் பார்க்கக் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறது. எங்கள் தெருவில் ஒரு தபால்காரத் தாத்தா வருவார். காக்கி உடையில் அவரைப் பார்த்துப் பார்த்து, தபால்கார தாத்தா என்றால், அவர் உடையும், அதற்குள் இருக்கும் அவரும் தான் நினைவுக்கு வரும். ஒரு நாள் கடைத் தெருவில், இன்றுமாதிரி ஒரு விடுமுறைத் தினத்தில் அவரைப் பார்த்தேன். ஆள் அடையாளமே தெரியவில்லை. 'என்ன குழந்தை? என்னைத் தெரியலையா?' என்று அவரே சொன்ன பிறகுதான், அய்யோ என்றிருந்தது. மனிதர்களை நாம் அவர்களின் ஆடை, மற்றும் ஒப்பனைகளோடு தான் உள் வாங்கிக்கொள்கிறோம். இல்லையா மிஸ்டர் பீட்டர்? போலீஸ்காரனை காக்கிச் சட்டையோடு நினைத்துப் பார்ப்பதைப் போல....."

"உண்மை, சுமதி. நினைவுக்கு உருவம் தேவைப்படுகிறது. கடவுளுக்கு அதனால்தான் உருவத்தைப் படைக்கிறோம். ஒரு சிவலிங்கம், அல்லது ஒரு சிலுவை, அல்லது சிலருக்குத் திசைகள், என்று ஏதோ ஒரு உருவம் தேவையாகத்தான் இருக்கிறது. உருவத்திலிருந்து, உருவம் அற்றதுக்கு நாம் போகவேண்டும் என்பதுதான், உருவத்தைப் படைத்தவர்களின் நோக்கமாக இருந்தது. நாம் உருவத்தையே பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறோம். திருமூலர் சொன்னாரே.... 'மரத்தில் மறைந்தது மாமத யானை. மரத்தை மறைத்தது மாமத யானை' என்று அந்தக் கதைதான். நாம் மரத்தை மட்டும் சுமந்து நிற்கிறோம். யானையை மறந்து விட்டோம்...." என்றான் பீட்டர்.

சுமதிக்குப் பீட்டரின் மேல், சட்டென மரியாதை ஏற்பட்டது. அவனைச் சிநேகிதனாகக் கொண்ட வசந்தியைத் திரும்பிப் பார்த்து அவள் முன் கையில், வலிக்காமல் கிள்ளினாள்.

"சரி, பீட்டர்! வசந்தியை நீங்கள் எப்படி நினைப்பீர்கள்? உருவத்திலா, உருவத்தைக் கடந்தா?" என்றாள் சிரித்துக் கொண்டே.... வசந்தியும் உடன் சேர்ந்து நகைத்தாள்.

"எனக்கு வசந்தியை அவள் நர்ஸ் உடையோடுதான் நினைக்கிறேன் சுமதி. அந்த உடை ஒரு பணியின், உயர்ந்த பணி



யின் சின்னம் அல்லவா? பெண்கள் வெறும் வண்ண வண்ணமான ஆடைகளில், ஓவியங்களில் மட்டும் இடம் பெறுவது மாதிரி இருப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. அவளது பங்களிப்பு என்று ஏதேனும் நிகழ்ந்து கொண்டேயிருக்க வேண்டும். ஏன் உங்களைப் பற்றியே சொல்கிறேனே. அந்த ஏழைப் பெண்- நிறைய மதிப்பெண்கள் வாங்கியிருந்த போதும், அவளுக்குக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்பதையறிந்து எவ்வளவு ஃபோன் செய்திருப்பீர்கள். எத்தனை தரம் அந்தப் பிரின்ஸிபல் அம்மாவைப் போய்ப் பார்த்தீர்கள். அந்தப் பெண்ணுக்கு எப்படியெல்லாம் ஆறுதல் சொன்னீர்கள். உதவினீர்கள். கடைசியில், இடமும் வாங்கிக் கொடுத்தீர்கள். அதுதான்- அதன் பெயர்தான் வாழ்க்கை, சுமதி. நான் உங்களை நினைப்பது, உங்களின் இந்த சேவை மனப்பான்மை என்கிற ஆடையுடன்தான்."

சுமதிக்குக் கூச்சமாக இருந்தது. தான் புகழப்படும் போது, புகழ்ச்சிக்குள்ளாகுபவர்- வெட்கம் அடைவர், அப்புகழ்ச்சிக்கு அவர்கள் தகுதியுள்ளவர்கள் எனும் பட்சத்தில்.

சுமதி உல்லாசப் பயணம் போகும் மகிழ்வில், விடுமுறையைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் குதூகலத்தில் இருந்தாள். அதனாலேயே அவள் அதிகம் பேசவும் செய்தாள். தவிரவும், அந்தப் பயணத்தை ஏற்று நடத்துகிறவள் என்கிற முறையிலும், விருந்தளிப்பவர்கள் விருந்து ஏற்போரை மகிழ்விப்பது போலவும் அவள் இருந்தாள். சுமதியின் கேள்விக்கு பீட்டர் பதில் சொன்னான்.

"பீட்டர்....நீங்கள் எப்படி ஓவியத் துறையைத் தேர்ந்தெடுத்தீர்கள்?" பீட்டர் யோசித்தான். பிறகு சொன்னான்,

"என்ன, என்னைப் பேட்டியா காண்கிறீர்கள்?"

"சொல்லுங்கள் ப்ளீஸ்..."

"எனக்கு, என்னை ஓவியனாக, ஓவியம் மூலமாகத்தான் வெளிப்படுத்த முடியுது. எனக்கு அதுதான் சுலபமாக இருக்கும். படம் வரையறதுதான் எனக்கு முடிகிறது. வேறு தொழில் செய்ய முடியவில்லை."

"சுமதி, இவர் தமிழ் இலக்கியத்திலும், தத்துவத்திலும், எம்.ஏ. முடித்து, ஆராய்ச்சிப் பட்டமும் வாங்கியிருக்கிறார்."

"அப்படியா?" என்றாள் சுமதி. ஆச்சர்யமுடன். கணேசன், முதல் முதலாக வாயைத் திறந்தான்.

"என்ன, ஆராய்ச்சிப்பட்டம் வாங்கியிருக்கிறீர்களா? அப்படியென்றால், நீங்கள் கல்லூரியில் கற்பிக்க வந்திருக்கலாமே...? இப்போதெல்லாம் கல்லூரியில் சம்பளம் நிறையக் கிடைக்கிறதே... அதை விட்டுப் படம் போடக் கிளம்பிவிட்டீர்களே....?"

பீட்டர் திரும்பி கணேசனைத் திருத்தினான்.

"படம் இல்லை, நவீன ஓவியம்!" கணேசன் சிரித்தபடி சொன்னான்.

"அதாவது, தலை ஒரு பக்கம், வாய் கோணல், கையும் காலும் எதிரும் புதிருமாய், போடுகிறார்களே? காந்தியைப் போடச் சொன்னால், காந்தியோட பாட்டியைப் போடுகிறார்களே அந்த வகைப் படம்தானே....?"

பீட்டரும், கணேசனுடன் சேர்ந்து சிரித்தான். பிறகு அமைதியாகக் கூறினான்.

"மிஸ்டர், கணேசன்! உங்களுக்குச் சீன மொழி தெரியுமா? தெரியாதா...? சரி. அதனாலேயே சீனர்களை நீங்கள் முட்டாள்கள் என்பீர்களா? அது மாதிரித் தான் ஓவியமும். காந்தி மாதிரி வரைய, அச்சு அசலாய் வரைய கேமரா போதும். ஓவியன் எதுக்கு? ஓவியம் என்பது, உருவங்களுக்குள் புதைந்திருக்கும் உருவத்தை வரைவது. காந்தியை என்னை வரையச் சொன்னால், நான் எப்படி வரைவேன் தெரியுமா? ஒரு பாத்திரம் நிறைய உணவுப் பொருள்: அதற்கு முன் அமர்ந்திருக்கும் எலும்பு உருவான ஒரு மனிதன்- குடைக் கம்பிகளைப் போல் இளைத்த மனிதன்- உண்ணாவிரதம் இருப்பதுபோல் வரைவேன். அந்த ஆத்ம தைரியம் தான் காந்தி. தடி ஊன்றிய பொக்கைவாய்க் கிழவரல்ல காந்தி."

"வெல் செட்" என்றவாறு கை தட்டினாள் சுமதி.

கணேசன், நிறத்தில் கறுப்பானவன், அவன் மேலும் கறுத்தான்.

வண்டி மலையடிவாரத்தை நெருங்கும் வரை கணேசன் பேசவில்லை. கல்படிக்கட்டில் அவர்கள் மேலேறத் தொடங்கினார்கள். கணேசன் மிகவும் பின் தங்கி, மிக மெதுவாகப் படியேறினான். பீட்டர் வெகு தூரத்தில் இருந்தான். அவனை நெருங்கினாள் வசந்தி. சுமதி திரும்பி, "ஏன் தயங்குகிறீர்கள்? மேலே வாருங்கள்!" என்றாள்.

"இரு....உன்னிடம் பேச வேண்டும்"

**பிரபஞ்சன்**

என்றான் கணேசன்.

சுமதி ஓரமாய், ஒரு புன்னை மரத்தின் கீழ் ஒதுங்கி நின்றாள்.

அருகில் வந்து சேர்ந்த கணேசன், அடிக்குரலில், பல்லைக் கடித்தவாறு சொன்னான்,

"இப்படி என்னை அவமானப்படுத்தத் தான் இந்த 'டூரை' ஏற்படுத்தினாயா?" சுமதிக்குத் திக்கென்றது.

"அவமானமா? உங்களையா? நானா? என்ன சொல்றீங்க?" என்றாள் சுமதி, நாக் குழறலுடன்.

"பத்தினி வேஷம் போடாதே...! அந்த ஓவியக்காரனுடன் நீ லூட்டி அடிக்கத்தான் இந்த டூர் என்றால், என்னை எதற்காக அழைத்து வந்தாய்? என்னை சாட்சி வைக்கவா? அவனுக்குத்தான் ஏற்கனவே வசந்தி இருக்கிறாளே! அப்புறம் நீ ஏன் அவன்மேல் விழுகிறாய்....?"

சுமதி காதைப் பொத்திக் கொண்டாள். அவள் உடல் அவமானத்தால் நடுங்கியது.

"தோ பாருங்கள் கணேசன், நீங்கள் இப்படி என்னை இழிவுபடுத்தக்கூடாது. ஒரு சினேகிதருடன் சிரித்துப் பேசுவதை, இப்பவே தடை செய்யும் உங்களைத் திருமணம் செய்து கொண்டு, நான் எப்படிச் சந்தோஷமாக வாழ முடியும்? உங்களைத் திருமணம் செய்து கொள்கிற முடிவை நான் மறுபரிசீலனை செய்ய வேண்டிவரும்!"

"என்னடி சொன்னே?"

கணேசன், பக்கத்தில் இருந்த ஏதோ ஒரு செடியில் இருந்து ஒரு கிளையை ஒடித்து, அவளை அடிக்கத் தொடங்கினான். சாட்டை மாதிரி, சரமாரியாகத் தன்மேல் வந்து விழுந்த அடி பொறுக்க மாட்டாத சுமதி "ஐயோ, ஐயோ" என்று அலற ஆரம்பித்தாள்.

"என்ன, சொன்னே....கல்யாணம் பண்ணிக்கமாட்டாயா...? இன்னொரு வாட்டி சொல்லு?"

அந்தக் கிளையின் இலைகள் உதிர்ந்து, அதுவே கிழிந்து நாராகத் தொங்கும் வரை அவன் அடிப்பதை நிறுத்தவில்லை.

☆ ☆ ☆

கணேசனைத் திருமணம் செய்து கொள்வது என்று தான் எடுத்திருந்த முடிவை அப்பாவுக்குச் சொல்லிவிட வேண்டும் என்று சுமதி நினைக்கத் தொடங்கியிருந்த நேரம் அது. அப்பா நிச்சயம் அதைத் தவறாக நினைக்க மாட்டார் என்பதை அவள் அறிவாள். அப்பாவால் எதையுமே தவறாக நினைக்க முடியாது என்பதுதான் உண்மை. அதுவும் தன் மகளைப் பற்றித் தவறாக நினைக்க மாட்டார் என்பதோடு, அவள் எப்போதும் எதையும் சரியாகத்தான் செய்வாள் என்றும் நினைப்பவர் அவர். அவரிடம் எப்பொழுதோ அது பற்றி அவள் சொல்லியிருக்கவேண்டும். ஏன் அதைச் சொல்லவில்லை என்பது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. அதன் காரணமாக ஒரு குற்றவுணர்ச்சியே கூட அவளுக்குள் ஏற்பட்டிருந்தது. அப்பாவை, அவள் நன்கு அறிந்து கொள்ள எத்தனை சந்தர்ப்பங்களை அவர் அளித்திருக்கிறார்!

(தொடர்ந்து வரும்)

---

# "என்ன தீபா இப்படியா ஒருத்தரை அவமதிக்கிறது?"

# பார்வை

பல்கலைக்கழக வளாகத்தில் நின்ற மரங்களின் கீழ் மாணவர்கள் கலகலப்பாகக் காணப்பட்டனர்.

இரண்டாவது பாட விரிவுரை ஆரம்பமாவதற்கிடையிலான இடைவெளியில் பொழுதை அரட்டை அடிப்பதில் கழித்துக் கொண்டிருந்தனர்.

தீபா அப்பொழுதுதான் வளாகத்தினுள் வந்துகொண்டிருந்தாள்.

"ஏன்டி தீபா, முதல் லெக்சருக்கு வரேல்லை?" என தீபாவின் தோழிகளில் ஒருத்தி கேட்டாள்.

தீபா பதில் சொல்வதற்கிடையில் "அவளுக்கு இனியேன் படிப்பு? அவள் தானே இலண்டனுக்குப் போகப்போகிறாள்!" இன்னொரு தோழி சொன்னாள்.

"சும்மா இருங்கடி. இலண்டனுக்குப் போறது இன்னும் முடிவாகேல்லை, அதுக்குள்ளே நீங்கள் வேறை!"

பொய்க் கோபம் காட்டினாள் தீபா.

"மிஸ்ஸிஸ் சுந்தருக்குக் கோபத்தைப் பாரன்!" என தீபாவின் நெருங்கிய தோழி புஸ்பா கிண்டல் செய்தாள்.

"இன்னும் கல்யாணம் முற்றாகேல்லை. அதுக்கிடையிலை என்னை மிஸ்ஸிஸ் ஆக்கிப்போட்டியளேடி. இந்தப் பொம்பிளைப் பிள்ளையட்டை இரகசியம் சொல்லக்கூடாது என்று இதுக்காகத்தான் சொல்லுறது!" என தோழிகளின் பேச்சுக்கு முற்றுப்புள்ளிவைக்க தீபா முயற்சித்தாள்.

இரண்டு மாதங்களுக்கு முன் விடுமுறையில் தீபா ஊர் போனபோது இலண்டனிலிருக்கும் அவளது ஊரைச் சேர்ந்த சுந்தருக்குப் பெண்கேட்டு வந்தார்கள்.

ஜாதகப் பொருத்தம் சிறப்பாக அமைந்தமையினால் தீபாவையே சுந்தருக்கு மணம் முடிக்க சுந்தர் வீட்டார் ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தனர்.

இந்தவிடயம் வளாகம் முழுவதும் காட்டுத்தீபோல பரவியிருந்தது.

தோழிகளின் உரையாடல் தீபா பற்றிய பேச்சிலிருந்து வேறு திசைக்குத் திரும்பியிருந்தது.

கலகலப்பாக நகர்ந்து கொண்டிருந்த உரையாடலின் நடுவில், புஸ்பாவுக்கு எதிரே இருந்த தீபாவின் முகம் அசாதாரண நிலைக்கு மாறுவதை உணர்ந்த புஸ்பா திரும்பினாள்.

சக மாணவன் நேசன் வந்து கொண்டிருந்தான்.

"இந்தாங்க புஸ்பா, நீங்க கேட்ட புத்தகம்," என புத்தகத்தைக் கொடுத்தான் நேசன். நன்றி சொல்லிக் கொண்டு வாங்கிய புஸ்பா, "இருங்களேன் நேசன்!" என்றாள்

"லைபிரறியிலை நேற்று எடுத்த புத்தகத்தை இன்னும் கொடுக்கேல்லை. அதைக் கொடுக்க வேணும்!" என்றவாறே எல்லோரையும் பார்த்து புன்னகைத்தவாறே



யாழ் மு.கலை

அவ்விடத்தை விட்டு நீங்கினான்.

இவர்களின் உரையாடலின் நடுவில் புத்தகமொன்றில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த தீபா, நேசன் போனதும் நிமிர்ந்தாள்.

"என்ன தீபா! இப்படியா ஒருத்தரை அவமதிக்கிறது?" என புஸ்பா கேட்டாள்.

"நான் இப்ப என்ன செய்திட்டன்?" என பதிலுக்குக் கேட்ட தீபாவிடம், "நீயும் நேசனும் நல்ல நண்பர்களாகப் பழகினீர்கள். ஆனால், அடுத்தவர் உங்கள் நட்பை தவறாகக் காதல் எனக் கருதியதால் நீங்கள் உங்கள் நட்பை தவிர்த்து நடக்கிறீர்களே? படித்தவர்களே அடுத்தவர்களின் தேவையற்ற கதைகளுக்குப் பயந்து நடந்தால், அவர்கள் கதையில் உண்மையிருப்பதாகிவிடுமல்லவா?" என விளக்கம் கொடுத்தாள் புஸ்பா.

சக மாணவர்கள் மத்தியில் நேசனின் நடத்தை வித்தியாசமானதாகவும் பண்பு மிகுந்ததாகவும் காணப்பட்டதால் தீபாவுக்கு அவன் மீது ஒரு மதிப்பு ஏற்பட்டிருந்தது.

அம்மதிப்பு அவன் மீது நட்புக் கொள்ள வைத்துவிட்டது. இந்நட்பு வளாகத்தினுள் காதலாகக் கணிக்கப்பட்டது. ஆனால், இருவர் பழக்கத்தில் வித்தியாசம் இருக்கவில்லை. அடுத்தவர் பார்வையில்தான் தவறு இருந்தது.

ஆணும் பெண்ணும் நண்பர்களாகவே பழகமுடியாதா? ஆணும் பெண்ணும் நிறையக் கதைத்துவிட்டால், பழகிவிட்டால் அது காதலாகிவிடுமா?

"நேசனும் தீபாவும் காதல்" என வளாகம் எங்கும் பரவியிருந்த கதை, சுந்தருக்கு அவளைப் பெண்கேட்டு வந்த கதை தெரிந்தபோது காணாமல் போய் விட்டது.

"நேசனைத்தீபா காதலிக்கிறாள்" என்று சொன்னவர்களே,-

"தீபா எப்ப இலண்டன் போறியள்?"

"தீபா சுந்தர் எப்படி இருப்பார்?"

"தீபா சுந்தரின் போட்டோ இருந்தால் காட்டுங்களேன்!" என இன்று தீபாவைத் துளைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"தீபா உனக்கு வீட்டிலிருந்து கடிதம் வந்திருக்கு," என சக மாணவி கடிதமொன்றைத் தீபாவிடம் கொடுத்தாள்.

கடிதத்தை வாசித்துக் கொண்டிருந்த தீபாவின் முகம் இருண்டு கொண்டு வருவதை உணர்ந்த புஸ்பா, "என்ன விசயம் தீபா?" எனக் கேட்டதற்கு தீபாவிடமிருந்து பதில்வரவில்லை. தீபா தந்த கடிதத்தை வாசித்த புஸ்பா அதிர்ந்து போனாள்.

"தீபா நீ கம்பஸிலை யாரோ நேசன் என்ற பெடியனைக் காதலிச்சனியாம். அதனாலை சுந்தர்வீட்டார் இந்தச் சம்மந்தம் வேண்டாம் என்று சொல்லிட்டினம்" என்று தீபாவின் அம்மா எழுதியிருந்தாள். புஸ்பா அதிர்ந்து நின்றாள்.



படிப்பகம்

www.padippakam.com

உண்மைக் கதை

# THE PROSECUTION விசாரணை

## "அப்பாவைத் தப்ப வைக்க வேண்டியது மகனின் கடமை அல்லவா?" என்று இளக்காரமாகச் சிரித்தான் மேஜர்.

புறாக்கள் வானில் கூட்டங் கூட்டமாகப் பறந்து கொண்டிருக்கின்றன....

அந்த வீட்டின் கூரை மீதும் அமர்ந்திருக்கின்றன. 1944 டிசம்பர் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு சில நாட்களுக்கு முன்.... ஒரு ஹங்கேரிய கிராமம்.

குதூகலமாக ஒரு குதிரை வண்டியில் வந்து இறங்குகிறது அந்தக் குடும்பம். கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்காகச் சாமான்கள் வாங்கி வந்திருக்கிறார்கள். கிறிஸ்மஸ் மரம், பரிசுப் பொருட்கள் எல்லாம் வந்து இறங்குகின்றன.

இரண்டாம் உலக மகா யுத்தம் இன்னும் முடிந்தபாடில்லை. அப்பா, அம்மா, மூன்று வளர்ந்த பெண்கள், ஒரு சின்னஞ் சிறு பெண், மூத்த மகளின் ஆறு வயதுக் குழந்தைப் பையன். இவர்கள்தான் குடும்பத்தினர்.

உணவு மேஜையைச் சுற்றி அமர்ந்து கொண்டு, போருக்குச் சென்றிருக்கும் மகன் பீட்டரைப் பற்றி அனைவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ...

ஒரு ஆனந்த அதிர்ச்சி! இருபத்து நான்கு மணி நேர விடுமுறையில் பீட்டர் வீட்டுக்கு வருகிறான். குடும்பமே களிப்படைகிறது!

அம்மா சொல்கிறாள்: "எப்போதும் உன்னையே நினைத்துக்கொண்டிருக்கிறேன் பீட்டர்.... என் பெண் குழந்தைகளை எல்லாம் எளிதாகப் பெற்று எடுத்துவிட்டேன். மருத்துவச்சி என்னிடமிருந்து அவர்களைச் சீக்கிரம் இழுத்துப் போட்டு விட்டாள். உன்னைப் பெறுவது அத்தனை எளிதாக இல்லை. ஒரு நாள்முழுக்க நான் போராட வேண்டியிருந்தது. செத்துப் பிழைத்தேன். உன் தலை அளவுக்கதிகமாகப் பெரிதாக இருந்தது ஒரு காரணம்!" என்று சொல்லி அம்மா பீட்டரைப் பாசத்துடன் பார்க்கிறாள்.

"இப்போது என் பெரிய தலைக்குச் சரியாக என் உடம்பு வளர்ச்சியடைந்து பூரணத்துவம் பெற்று விட்டது அம்மா!" என்று சொல்லிச் சிரிக்கிறான் பீட்டர்.

அப்பாவை அவரது அறையில் சென்று பார்க்கிறான்.

"ஏனப்பா என்னைப் பார்க்க வரவேற்பறைக்கு வரவில்லை?" என்று கேட்கிறான்.

"உன்னை முதலில் பார்க்கும் சந்தோஷம் அம்மாவுக்கு இருக்கட்டுமே, என்றுதான்...." என்றார் அப்பா.

"முதல் உலக யுத்தத்தில் எனக்கு நுரையீரலில் அடிபட்டது இல்லையா? எப்போதும் இருமல் வாட்டி எடுக்கிறது...." என்றார்.

•••

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்குத் தங்கி விடும்படி சொல்கிறாள் அம்மா.

"இருபத்து நான்கு மணி நேர லீவுதானே அம்மா! நான் இராணுவ முகாமுக்குத் திரும்பச்செல்லவேண்டும்." என்று மறுக்கிறான் பீட்டர். அப்புறம் அம்மாவின் அன்புத் தொல்லைக்குக்கட்டுப்பட்டுத் தங்கி விடுகிறான்.

அவனைத் தேடிக் கொண்டு, ஹங்கேரியப் படை வீரர்கள் இருவர் வருகிறார்கள். பீட்டர் நிலவறையில் ஒளிந்து கொள்கிறான்....

"பீட்டரை சீக்கிரம் இராணுவத்துக்கு அனுப்பி வையுங்கள். மிலிட்டரிக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு ஓடும் சிப்பாய்களை எங்கு கண்டாலும், நாயைச் சுடுவது போல் சுட்டு விடுவோம்" என்று எச்சரித்து விட்டு அந்தச் சிப்பாய்கள் சென்று விடுகிறார்கள்.

***

ஹங்கேரியப் படைகள் பின்வாங்கிச் செல்கின்றன. ரஷ்யப் படையினர் கிராமத்துக்குள் ஊடுருவுகிறார்கள்....

பீட்டரின் வீட்டுக்குள் ரஷ்ய சிப்பாய்கள் நுழைகிறார்கள்.... ரொட்டி, சோளம், உணவு தானியங்களைக் கவர்ந்து செல் கிறார்கள். கட்டியிருக்கும் குதிரைகளையும் அவிழ்த்துக் கொள்கிறார்கள். பீட்டர் தடுத்துப் பார்க்கிறான்..... துப்பாக்கியை நீட்டி மிரட்டுகிறார்கள்....

அம்மா சின்னப் பெண்களை ஒளித்து வைக்கிறாள்.....

கோழிகளைப் பிடிக்கிறார்கள். கோழி, அன்னங்களை கோடரி கொண்டு தலையை வெட்டி எறிந்து, மீதிப் பகுதியை எடுத்துச் செல்கிறார்கள். பன்றிக் குட்டிகளை எடுத்துக் கொள்கிறார்கள்....

வெட்டப்பட்ட பறவைகளின் தலைகள் தரையில் சிதறிக் கிடக்கின்றன....

ஒரு சிப்பாய், தன் தோழனைக் காவலுக்கு நிறுத்திவிட்டு, மூத்த மகளைப் படுக்கையறைக்குள் தள்ளிக் கொண்டு சென்று தன் இச்சையைத் தீர்த்துக் கொள்கிறான்.

கொஞ்ச நேரத்தில் குடும்பச் சொத்துக்கள், கௌரவம் எல்லாம் சூறையாடப்பட்டு விட்டன....

•••

அன்று இரவு 'அந்தச் சிப்பாய்' மீண்டும் வருகிறான். தோழனைக் காவலுக்கு நிறுத்தி விட்டு, மூத்த மகளின் படுக்கையறைக்கு மீண்டும் செல்கிறான்....

அவளது ஆறு வயதுக் குழந்தையின் எதிரிலேயே அவள் மீது சென்று படுக்கிறான்....

"மிருகமே! வேசி மகனே!" என்று அவள் கதறுகிறாள்....!

"என்னைக் காப்பாற்றுங்கள்," என்று கூவுகிறாள்....

பீட்டர் விரைந்து வருகிறான். காவலுக்கு இருந்தவனைக் கைத்துப்பாக்கியால் சுட்டு விடுகிறான். கெடுத்தவன் தப்பி ஓடுகிறான். சுடும்போது வெறியனின் கையில் குண்டு பாய்ந்து விடுகிறது. ஆனாலும், தப்பித்து ஓடுகிறான்.

செத்துப்போன ரஷ்ய சிப்பாயை சர்க்கரை வள்ளிக்கிழங்குக் குழியில் தள்ளி விடுகிறார்கள்.

அப்பா சொல்கிறார். "கொலைப் பழியை நான் ஏற்றுக் கொள்கிறேன். என் மகளைக் கெடுக்க வந்தான். அவனோடு நான் போராடினேன். தவறுதலாக அவனது துப்பாக்கியே வெடித்து அவன் மரணமடைந்தான் என்று சொல்லிவிடலாம்!"

▫▫▫

அடுத்த நாள் ரஷ்ய மேஜர் ஒருவன் தனது சிப்பாய்களுடன் விசாரணைக்கு வருகிறான்.

"என் சிப்பாயை யார் சுட்டுச் சாகடித்தது? அவன் சடலம் எங்கே?" என்று கேட்கிறான். கெடுத்தவன், கையில் குண்டு பாய்ந்ததால் கட்டுடன் அருகே நிற்கிறான்.

"யாரும் சுடப்படவில்லை." என்றாள் பீட்டரின் அம்மா.

ரஷ்ய மேஜர் அவளை ஓங்கி அறைகிறான்.

"நானே குற்றவாளி"- என்கிறார் அப்பா.

மூத்த மகளை அழைத்து, கெடுத்தவனைக்காட்டி- "இவன் உன்னைக் கெடுத்தானா?" என்று கேட்க மூத்த மகள் வெறியனின் முகத்தில் காறி உமிழ்கிறாள்.

"இந்த வேசி, துப்பவும் செய்கிறாள்," என்றான் அவன், நல்ல பிள்ளை போல்.

மூத்த மகள், அவளது குழந்தை, அம்மா, அப்பா எல்லோரையும் சுவர் அருகே நிறுத்திச் சுட்டுத் தள்ள ஆணை பிறப்பிக்கிறான் மேஜர்.

"மகனே! பீட்டர்! வெளியே வா! எங்களைச் சுட்டுத் தள்ளப் போகிறார்கள்!" என்று அம்மா அபயக்குரல் எழுப்புகிறாள்.

மறைவிடத்திலிருந்து பீட்டர் வெளிப்படுகிறான். சின்னப் பெண்களைக்கூட இழுத்து வந்து சுவர் அருகே நிறுத்துகிறார்கள்...

"நான் தான் சுட்டேன், எங்கள் வீட்டுப் பெண்ணைக் கெடுக்க வந்தவனை..." என்று பீட்டர் ஒப்புக்கொள்கிறான்....

"இல்லை. பீட்டர் சுடவில்லை. என் கணவர்தான் சுட்டார்," என்று அம்மா வீறிடுகிறாள்.

"நான் சுடவில்லை! நீ சுடவில்லை என்று என்ன இது குழப்பம்?" என்று மேஜர் உறுமுகிறான்.

"சடலம் எங்கே? சடலத்தைக் காட்டுங்கள்!" என்று அவன் சொல்ல, சர்க்கரை



வள்ளிக் கிழங்குக் குழிக்குக் கொண்டு செல்கிறார்கள். பிணம் குழியில் இருந்து எடுக்கப்படுகிறது.

மிகவும் சின்னப் பெண்ணையும், மூத்த மகளின் ஆறு வயதுக் குழந்தைப் பையனையும் பக்கத்துப் பண்ணைக்குச் செல்லும்படி அனுப்பி விடுகிறான் மேஜர்...

மற்றவர்கள் ஜீப்பில் ஏற்றப்படுகிறார்கள்....

"அந்தச் சிறுமி அழகாக இருக்கிறாள். அவளைப் பக்கத்துப் பண்ணைக்குப் போகும்படி விட்டது தவறு. திரும்ப அழைத்து வா!" என்று மேஜர் வெறியனை அனுப்புகிறான்.

அவன் சிறுமியை இட்டுவரப் போகும்போது, அவனைச் சுடுகிறான். அவன் செத்து விழுகிறான்.

•••

இராணுவ முகாமில் பீட்டரின் அப்பா அடித்துச் சித்திரவதை செய்யப்படுகிறார்.

முகமெல்லாம் ரத்தக் காயங்கள்...!

பீட்டர் வரவழைக்கப்படுகிறான்.

"அப்பாவைத் தப்ப வைக்க வேண்டியது மகனின் கடமை அல்லவா?" என்று கேட்டு இளக்காரமாகச் சிரிக்கிறான் மேஜர்.

"நான்தான் குற்றத்தை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேனே! அப்பா ஒன்றும் செய்யவில்லை. சுட்டது நான்தான்!" என்கிறான் பீட்டர்.

***

மூத்த மகளைத் தவிர்த்து, மற்ற இரண்டு டீன்-ஏஜ் பெண்களையும் இராணுவத் தலைமைச் செயலகத்துக்கு காரில் கொண்டு செல்கிறார்கள்.

அந்தப் பெண்கள் பயந்து நடுங்கியபடியே பயணம் செய்கிறார்கள். தலைமையகம் வருகிறது.

"பயப்படாதீர்கள்! தலைமை அதிகாரிகள் உங்களை விருந்துக்கு அழைக்கிறார்கள்."- என்று ஒரு சிப்பாய் அந்தப் பெண்களை விருந்து மண்டபத்துக்குள் தள்ளி விடுகிறான்.

இராணுவ உயர் அதிகாரிகள் அந்த இரண்டு பெண்களையும் ஆடையுரித்து கதறக் கதற ஆட்கொள்கிறார்கள்....

***

இரவு முழுவதும் அந்த டீன் ஏஜ் பெண்களைக் கசக்கிப் பிழிந்த இராணுவ அதிகாரிகள் அவர்களை கிராம எல்லையில் விட்டுவிடும்படி அனுப்பி வைக்கிறார்கள்.

ஒரு இராணுவக் கார் அவர்களை கிராம எல்லையில் விடுகிறது. காரில் இருந்து தள்ளாடியபடி இரண்டு பெண்களும் இறங்கி வருகிறார்கள்.

அருகே ஒரு இராணுவ லாரி நிற்கிறது. லாரி முழுக்க இளம் ரஷ்ய சிப்பாய்கள்.

அவர்களில் பலர் இந்த அபலைப் பெண்களைக் காமப் பார்வை பார்க்க, இரண்டு பெண்களும் அலறி அடித்துக் கொண்டு ஓடுகிறார்கள்.

சிப்பாய்கள் துரத்திச் செல்கிறார்கள்.

இரண்டு பெண்களும் கீழே கிடத்தப்பட்டிருகிறார்கள். இரண்டிரண்டு சிப்பாய்கள் கைகளைப் பிடித்துக் கொள்ள ஒவ்வொருவராக மேலே படுத்து வேட்டையாடுகிறார்கள்.....!

அந்தப் பெண்கள் வேதனை தாங்காமல் கதறி அழுவது அந்த வெறியர்களின் மனதை இளக்கவில்லை!

•••

இரண்டு ரஷ்ய சிப்பாய்களையும் தானே கொன்றதாக ஏற்றுக் கொள்ள பீட்டர் முன் வருகிறான்.

மூத்த மகளைக் கெடுத்தவனைத் தான் சுட்டுக்கொன்றதாக ஒப்புக்கொள்ள ரஷ்ய மேஜர் தயாராக இல்லை. அந்தப் பழியையும் பீட்டர் குடும்பத்தின் மீதே சுமத்த விரும்புகிறான்.

கொலைப் பழியை யாராவது ஏற்றுக் கொண்டால், பீட்டரின் சகோதரிகளுக்காவது விடுதலை கிடைக்கும் என்கிறான் ரஷ்ய மேஜர்.

•••

பீட்டர் குடும்பத்தினர் கைதிகள் முகாமுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

பீட்டர் தப்பியோடும் போது சுடப்படுகிறான். மருத்துவமனையினர், அவனை ஆபரேஷன் தியேட்டருக்குத் தூக்கிச் செல்கிறார்கள்.

குண்டு உடலில் இருந்து எடுக்கப்பட்டதும், ஆபரேஷன் தியேட்டர் மேசையிலிருந்து அவனைக் கவர்ந்து செல்கிறார்கள். நடக்க முடியாத அவன் ஒரு குளியலறைத் தொட்டியில் கிடத்தப்பட்டுத் தூக்கிச் செல்லப்படுகிறான்.

"அபலை ஹங்கேரியப் பெண்கள் கெடுக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. இந்த வழக்கை மறுபரிசீலனை செய்து எனக்கு ரிப்போர்ட் அனுப்பு"- என்கிறான் ஒரு ரஷ்யத் தலைமை இராணுவ அதிகாரி.

மேஜர் யோசனை செய்கிறான்.

"பெண்ணைக் கெடுத்த சம்பவத்தில் இறந்த இரண்டு ரஷ்ய சிப்பாய்களுமே சிறந்த வீரர்கள். அவர்கள் மேல் பாலியல் வல்லுறவுக் குற்றம் சுமத்த நான் விரும்பவில்லை." என்கிறான் மேஜர்.

இராணுவத்தில் பணிப் பெண்களாக வேலை செய்யும் இரண்டு ரஷ்யப் பெண்களை அழைக்கிறான். பீட்டர் குடும்பத்தினரின் பண்ணைக்கு-நீரும், ரொட்டியும் கேட்க அந்தப்பெண்கள் சென்றபோது, அவர்கள் வல்லுறவு கொண்டதாகப் பொய் சொல்லச் சொல்கிறான். ஒருத்தி அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ஒருத்தி மட்டும் அரை மனதுடன் ஒப்புகிறாள்.

பீட்டர், பீட்டரின் அப்பா, இருவர் பேரிலும் கற்பழிப்புக் குற்றம் சுமத்தப்படுகிறது. பீட்டரின் அம்மா, சகோதரிகள் இதற்கு உடந்தை என்று வழக்கு ஜோடிக்கப்படுகிறது.

பீட்டர், அப்பா, அம்மா மூவரும் மரண தண்டனை பெற்று, சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

பீட்டரின் சகோதரிகள் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று கைதிகள் முகாமுக்கு அனுப்பப்படுகிறார்கள்....

**ஹங்கேரியப்பட விழாவில் திரையிடப்பட்ட படத்தின் கதை இது. இந்தச் சம்பவம் ஒரு ஹங்கேரியக் கிராமத்தில் உண்மையில் நடந்தது. எந்த நிகழ்ச்சியும் கற்பனை இல்லை.**

# கனவு மெய்ப்பட்ட வேளையிலே...



அந்தக் காலை வேளையில் வீட்டின் பின்புறம் உள்ள தோட்டத்தில் பரஞ்சோதி மாமா வேலை செய்வதை தன்னறை ஜன்னலூடாகப் பார்த்துக்கொண்டிருந்தான் சிவா. அவனுடைய மனதில் பழைய நினைவுகள் வந்து போயின.

இரண்டு வருடங்களுக்கு முன் அவர்களின் வீட்டுத் தோட்டமும் பச்சைப் பசேலென்று தான் இருந்தது. அதில் அவனும் அவனுடைய அப்பாவும் காலையும், மாலையும் வேலை செய்தது, அதில் பயிரிட்டுக் கிடைக்கும் மிளகாய் முதல் வாழை வரை ஒன்று விடாமல் ஒவ்வொன்றையும் பார்த்து இரசித்தது, மகிழ்ந்தது எல்லாம் அவன் மனக் கண்ணில் வந்து போயின. ஆனால் அவனிடமிருந்து ஒரு ஏக்கப் பெருமூச்சு மட்டுமே வந்தது.

சிவா நினைத்துக் கொண்டான்... ஒரு காலத்தில் எப்படி இருந்த ஊர்? யாரைப் பார்த்தாலும் எல்லோர் முகங்களிலும் ஒரு சந்தோசம், சிரித்த முகங்கள்- ஒருவருக்கொருவர் நலன் விசாரிப்புக்கள்- எங்கு வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் சைக்கிள் ஒன்றில் போய்வந்து விடலாம். ஆனால் இப்போது எல்லோர் முகங்களிலும் ஒரு பயம், எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பீதி. ஒருவரை ஒருவர் கண்டாலும் கதைப்பது குறைவு. ஏனெனில் அவர் ஏதும் தன் சோகக் கதையைச் சொல்லி, தான் இருக்கும் சோகத்தையும் அதிகரித்து விடுவாரோ என்று. சைக்கிளில் முன்புபோல் ஊர் சுற்றவும் முடியாது. எந்தப் பாதையில் சென்றாலும் அங்கு ஒரு சோதனைச் சாவடியைக் கடக்கவேண்டும். அவ்வேளை சீருடையணியினர், புரியாத மொழியில் கேட்கும் கேள்விகளுக்கும், கேலிக்கும் ஆளாகவேண்டிய நிர்ப்பந்தம்.

யுத்த மேகம் இடி மின்னலுடன் சூழ, அரசாங்கப் பதவியில் இருக்கும் அப்பா மாற்றம் பெற்று, அக்கா மார் இருவரையும் அம்மாவையும் கூட்டிக்கொண்டு கொழும்புக்குச் சென்றுவிட்டார். சிவா- அம்மாவின் தம்பியான பரஞ்சோதியிடம் ஒப்படைக்கப்பட்டான். ஊரில் உள்ள கல்லூரியில் கடைசியாண்டு உயர்தர வகுப்பில் படிப்பதால், படிப்பு முடிந்ததும் கொழும்புக்குப் போகலாம் என்று முடிவானது. இரண்டு மாதங்களுக்கொருமுறை அப்பா வந்து பார்த்துப்போவார்.

நாட்டு நிலைமையறிய, சந்தியில் இருக்கும் சின்னப்பர் கடைக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வரும் 'தினமுரசு' மட்டும்தான் வழி. வேறு பத்திரிகைகள் வருவதில்லை. சிவா வாரம் தவறாமல் வாங்கிவிடுவான். காலை வெயில் சுகமாக இருந்தபடியால் கட்டிலில் உட்கார்ந்து இருந்த சிவா தன்னையுமறியாமல் தூங்கிப்போனான்....

***

**"தம்பி வெளிநாட்டில் இருக்கிற சனத்தையெல்லாம் திருப்பி அனுப்பிப்போடுவினமோ?"**

சிவா, சின்னப்பர் கடைக்கு கிளம்பினான். ஒழுங்கையிலிறங்கி நடக்கத் துவங்கினான்.

எதிரே கந்தசாமி வாத்தியார், "என்ன தம்பி சிவா! இப்ப சந்தோஷந்தானே. அதான் எல்லாம் சமாதானமா முடிஞ்சு போட்டுது. நீ எங்க கடைக்கி போறியே?" என்றார்.

சிவா விளங்காமல் "என்ன சேர்" எனக் கேட்டான். அதற்கு அவர் "கடைக்குத்தானே போறா? போய் பேப்பரப் பாரும் விளங்கும்." என்று போய்விட்டார். சிவா தனக்குத்தானே, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், தீர்வுப்பொதி, சமாதானப் பொதி, சந்திரனிலிருந்து அரிசிப் பொதி என்றெல்லாம் பேசினார்களே அப்படி ஏதும் இருக்குமோ என எண்ணியவண்ணம் நடையை வேகப்படுத்தினான்.

தன்னைக் கடந்து செல்கின்றவர்களின் முகங்களிலெல்லாம் சந்தோஷம். சந்திக்கு வந்து வலப்பக்கம் திரும்பினால் சின்னப்பர் கடை. கடையெதிரே சனங்கள் இருவர், மூவராகக் கூடி நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஓசியில் பேப்பர் வாசிப்பவர்கள் கூட காசு கொடுத்து "முரசு" வாங்கினர்.

**த.தியாகராஜன் – ஜப்பான்**

சிவா கடையெதிரில் சென்று முன்னால் தொங்கவிடப்பட்டிருந்த தினமுரசுமீது பார்வையைச் செலுத்தினான். முதல் பக்கத்தில் பெரிய எழுத்தில் 'ஜனாதிபதியின் சமாதானப் பேச்சும், தேர்தல் அறிவிப்பும்' என்றும். கீழே சின்ன எழுத்தில் 'ஆயுதத்தை கைவிட்டு ஜனநாயகப் பாதைக்கு வந்தவர்களுக்கு மேற்குலகு பாராட்டு' என்றும் இருந்தது.

சிவாவைக் கண்ட சின்னப்பர் "என்ன சிவா உண்ட பேப்பர் இஞ்ச கிடக்கு நீ அதப்பார்த்துக் கொண்டு நிக்கிற?" என்று பேப்பரை எடுத்துக் கொடுத்தார். "இல்ல சின்னப்ப அண்ணன் புதினமா கிடக்கு!" என்றான். அவர் "எல்லாம் வீட்ட எடுத்துப் போய் பார் விளங்கும்" என்று வியாபாரத்தில் இறங்கி விட்டார். சிவா வீட்டை நோக்கி வரும் பொழுது அவனைக் கடந்து செல்கின்ற சைக்கிளின் பின்னால் இருந்த ஏகாம்பரத்தார், சைக்கிள் ஓட்டும் மருமகன் பாலனிடத்தில் "தம்பி வெளிநாட்டில இருக்கிற நம்ம சனத்தையெல்லாம் திருப்பி அனுப்பிப்போடுவினமே?" என்று கேட்டபடி செல்கிறார். அவர் கவலை அவருக்கு. ஒரு மகன் கனடா, ஒரு மகன் சுவிஸ். சிவா நினைத்து சிரித்துக் கொண்டே வீட்டை அடைகிறான்.

அப்பாடா... இனிமேல் அகதியாய் ஓடத் தேவை இல்லை என்று நினைத்துக் கொண்டு பேப்பரைப் பிரிக்கிறான். சின்னப்பர் கடைப் பக்கத்தில் பட்டாசுச் சத்தம் கேட்கிறது. 'தேர்தல் திகதி அறிவித்து விட்டார்களோ?' என்று இருந்தவன் முதுகில் கை வைத்து உலுக்குகிறார்கள். திடுக்கிட்டு விழித்தவன் எதிரில் பரபரப்பாக பரஞ்சோதி மாமா!

"என்ன மாமா தேர்தலே?" என்று பாதி நித்திரையிலிருந்து சிவா கேட்டான்.

"தேர்தலோ! என்ன விசர்க் கதையெல்லாம் கதைக்கிற? சந்தியில பொடியளுக்கும். ஆமிக்கும் சண்ட நடக்குது. சனமெல்லாம் ஸ்க்கூலடிக்கு ஓடுது சடுதியா கிளம்படா," என்று பரபரத்தார் பரஞ்சோதி மாமா.

தான் கண்டது கனவுதான் என்று நினைக்கக்கூட நேரமில்லை. கையில் கிடைத்த துணிமணிகளை எடுத்துக்கொண்டு மாமா பின்னால் திரும்பவும் அகதியாய் ஓடினான் சிவா. அவர்களின் பின்னால் "அடேய் சினைப்பர் அடிக்கிறாங்கடா ஓடு!" என்று சின்னப்பரும் ஓடி வந்துகொண்டிருந்தார். ■



படிப்பகம்

எல்லாமே அழகாகத் தெரிந்தன
எல்லாமே புதிதாகத் தெரிந்தன.

எல்லோரும் நல்லவர்கள் ஆகினர்
எல்லாமே நல்லவை ஆகின.

வானமும் புதிது, பூமியும் புதிது
கானம் பாடும் புள்ளினம் புதிது.

சோதி நிலாவும் ஆனந்தம்
சூரிய உலாவும் ஆனந்தம்

எல்லாம் மனம்தான் காரணம்
வெல்லம் போல் காதல் காரணம்.

சங்கரன் மனதை
சுந்தரக் காதல் சலவை செய்தது!
சங்கரன் மனதை
சந்தன நதியில் குளிக்க வைத்தது!
சங்கரன் மனதை
சுந்தரக் காதல் குத்தகை எடுத்தது!

பக்திப் பாடல்கள்கூட
காதல் சக்திப் பாடல்களாக தெரிந்தன.

"குனித்தப் புருவமும் கொவ்வைச் செவ்வாய்
குமிழ் சிரிப்பும்
பனித்தச்-சடையும் பவளம் போல் மேனியிற்
பால் வெண் ணீறும்..."

ஆட்டவனுக்கான பாடல்-அவனை
ஆண்டவனுக்கும் பொருத்திப் பார்த்தான்

"வரப்புயர நீர் உயரும்
நீருயர நெல் உயரும்"

காதலும் அப்படித்தான்
என்று கண்டுபிடித்தான்!

காதல் உயர மனம் உயரும்
மனம் உயர மகிழ்வு உயரும்.
மகிழ்வு உயர மனம் இனிக்கும்
மனம் இனிக்க சுற்றமும் பிடிக்கும்

யார்மீதும் வெறுப்பு வரமறுத்தது
யார் மீதும் கோபம் எழ மறுத்தது!

முக்கியமாய் மூன்று விடயங்களை
ஊருக்கு மறைப்பது முடியாது.

காதல்
தும்மல்
கர்ப்பம்

கர்ப்பம் இருப்பதை
வயிறு வீங்கி காட்டிக் கொடுக்கும்.
காதல் இருப்பதை
கண்களும் மனமும் காட்டிக் கொடுக்கும்!

மோதலைக்கூட மறைத்துவிடலாம்
காதலை மட்டும் மறைக்க முடியாது.

மோதல் அன்றோடு முடிந்துவிடுவது
காதல் என்றென்றும் தொடர்வது!

பலநாள் திருடன் ஒருநாள் சிறையில்
பல நாள் திருடியும் ஒருநாள் சிறையில்.

எண்ணம் என்ற கிண்ணத்தில்
காதல் போதை நிரம்பிவழிகிறது.
உள்ளம் போதையை சுவைக்கிறது
கள்ளம் கண்களை நிறைக்கிறது!

யாருக்கும் தெரியக்கூடாது என்று
மறைக்கும் முயற்சியே
போதையில் இருப்பவனையும்
அளவுக்கதிகமாக ஆடச் செய்கிறது!

காதலரும் அப்படித்தான்
காதலை மறைக்கும் முயற்சியில்
காதலை அவர்களே காட்டிக் கொடுத்துவிடுகின்றனர்!

தனிமையில் மலரும் புன்னகை-புதிய
இனிமையாய் குதிக்கும் வாய்மொழி
கண்களில் விரியும் கனவுகள்-திடீர்
மௌனமாய் தோன்றும் சிந்தனை!

சங்கரனும் அப்படித்தானிருந்தான்
சங்கதியை மறைக்கும் முயற்சியில் இருந்தான்!

"என்னடா சங்கரா
நீ முன்பு போல் இல்லையே!"
நண்பர்கள் துளைத்தனர்.

"மறைத்தான். மறுத்தான்-எனினும்
உளத்தேன் சுவையை
யாரிடமாவது பகிர்ந்து கொள்ள நினைத்தான்!"

"கண்டேன்-கனிமுகம்
விழிகளால் உண்டேன்!
கண்டாள்-கலைமுகம்
கவிழ்ந்தாள்-விழிகளால்
உண்டாள் அல்ல அல்லவே!"

சங்கரன் சொல்ல-நண்பன்
புன்னகை சூடினான்.

"கண்டாள் என்கிறாய்
உண்டாள் அல்ல என்று
எப்படி உரைக்கிறாய்?"

"வாள் விழி சூடிய முகத்தில்
வில்லென நகை கிளம்பிடவில்லை
தாள் விரல் நோக்கி தலைகுனிய
தோள் நகை மட்டுமே நான் கண்டேன்."

தோள் நகை என்பதோடு
நிறுத்திக் கொண்டான்.
துள்ளிய அழகுகள் மீதினில்
தாவிய விழிகள்
மோகக் கடலினில் வீழ்ந்தன
என்பதை மறைத்துவிட்டான்.

முன் எழில் முறைத்து
மோகத்தில் வீழ்த்த
பின் எழில் அசைந்து
மோகத்தில் உருட்ட
தன் நிலை மறந்த
தன் கதை அவன்
எப்படிச் சொல்லுவான்!

"நண்பா! சங்கரா!
ஒரு நொடி போதும்
காதல் பெண்கள் கள்களால் உண்ண!
நீ பார்த்த போது நிலம்பார்த்த பாவை
நீ பார்க்க முன்பே உன் முகம் பார்த்திருப்பாள்!
கண்வழி சென்று கருத்தினில் புகுந்து
பெண் அவள் நெஞ்சில் நீயிருக்கக்கூடும்!"

சங்கரனுக்கு நம்பிக்கையில்லை.
சங்கரனுக்கு நம்பிக்கையிருந்தது.
சங்கரனுக்கு நம்பிக்கையில்லை.
காதல் ஒரு தலையாய் உள்ளவரை
உள்ளே தொடரும் அவஸ்த்தை அது!



## இலக்கிய நயம்

# பார்க்காத வேளையிலே

சங்கரன் முடிவு செய்தான்
சுந்தர அழகியின் சம்மதம் பெறுவது
மந்திர வார்த்தைகள் வந்தால் வரட்டும்!

கேட்டான்-கேட்டாள் செவியால்!
வார்த்தை மட்டும் வரவேயில்லை.

"ஓட்டைச் செவியால் என் குரல்
உள்ளே செல்லாமல் உதிர்ந்து
விழுந்து விட்டதோ?"
சந்தேகப்பட்டவன் மறுபடி கேட்டான்
"என் வாழ்க்கைப் பாதையில்
கூடவர சம்மதமா?"

மெல்லிடை துவள, மெல்லிதழ் விரிய
சொல்லினில் தேனை ஊற்றி
கொல்லவரும் விழியை மெல்லச் சுருக்கி
மெல்ல வார்த்தைகள் கோர்த்துச்
சொன்னாள் கொத்தும் நகையாள்;
"என் பின்னால் வாருங்கள்!"

சென்றான்-சென்றாள்
நந்தவனத்தில் ஒரு மூலையில் ஓவியக்கூடம்
ஓவியக் கூடத்தில் வரையப்பட்ட திருமுகம்
வேறு யாருமல்ல அது அவன்தான்!

ஓவியப் பாவை தீட்டிய ஓவியம்
ஒரு குறையில்லா கச்சித வடிவம்

"என்னை நீதான்
ஏறெடுத்தும் பார்த்ததில்லையே
எப்படி வரைந்தாய்
இத்தனை சிறப்பாய்?"
சங்கரன் கேட்க
சுந்தரி வெட்கினாள்.

"பார்த்தேன்- பருகினேன்-இதயத்தை
பறித்து எனக்குள் சூடினேன்.
நெஞ்சுக்குள் உம்மை நிறுத்தி
நினைவெல்லாம் மகிழ்ந்தேன்
நீர் நோக்காத போதெல்லாம்
நின் முகம் நோக்கி இன்புற்றேன்"
என்றவள் சொல்ல நினைத்ததை
கண்டறியாத வெட்கம் தடுத்தது.

எனவே உடனே
அப்பொருள் தரும் திருக்குறள் நீட்டினாள்.

"யான் நோக்குங் காலை நிலன் நோக்கும்
நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்."

குறள்-1094. அதிகாரம்-110.

தருவது
ரசிகன்

## ஸ்போர்ட்ஸ்

# அசத்துகிறார் சந்தர்போல்

இப்போது மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் அணியின் நட்சத்திர பேட்ஸ்மன் யார் என்று கேட்டால் யாரைச் சொல்வீர்கள்?

முன்னர் என்றால் பிரையன் லாரா என்பார்கள். ஆனால் இப்போது அவரை ஓரம் கட்டியிருக்கிறார் சிவ்நாராயண் சந்தர் போல். 21 வயதான இளம் வீரர் சந்தர்போல் மேற்கிந்தியத் தீவு அணியின் முதுகெலும்பாகி விட்டார்.



இந்த வருடம் மேற்கிந்தியத்தீவு அணி அவுஸ்திரேலியா நாட்டில் சுற்றுப் பயணம் செய்து விளையாடியது. அத்துடன் இந்திய அணியும் மேற்கிந்தியத் தீவுக்கு சுற்றுப் பயணம் செய்தது. அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய இரு நாடுகளுடனும் மேற்கிந்தியத்தீவு அணி கடந்த 4 மாதங்களில் 10 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளது.

இந்த 10 டெஸ்ட் போட்டிகளிலும் லாராவை விட சந்தர்போல் அதிக ஓட்டங்களைக் குவித்தார். அவுஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் 350 ஓட்டங்களையும், இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 443 ஓட்டங்களையும் சந்தர்போல் குவித்தார். அது மட்டுமன்றி ஒருநாள் போட்டிகளிலும் வெளுத்து வாங்கினார் சந்தர்போல்.

டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்குப் பொறுமை வேண்டும். மெதுவாக விளையாடி, அதே நேரம் இலக்கில்லாமல் வரும் பந்துகளை நளினமாக அடிக்க வேண்டும்.

ஒருநாள் போட்டிகள் அப்படியல்ல. டெஸ்ட் போட்டிகளுக்கு நேர் எதிரானது. ஒவ்வொரு பந்திலும் ஒரு ஓட்டம் எடுக்க முயன்றால்தான் அணிக்கு வெற்றி வாய்ப்பை ஏற்படுத்தித் தர முடியும்.

இப்படியான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்குரிய திறமை டெண்டுல்கர், லாரா, மார்க் வோவ், கேரி கேர்ஸ்டன், சலீம் மாலிக், அரவிந்த டி சில்வா, கெய்ரன்ஸ், மக்மில்லன் போன்ற ஒருசில வீரர்களுக்கே உள்ளது. இப்போது இந்தப் பட்டியலில் தானும் ஒருவராகி விட்டார் சந்தர்போல்.

சமீபத்தில் மேற்கிந்தியத்தீவு அணி இந்தியாவுக்கெதிராக 4 ஒருநாள் போட்டிகள் விளையாடியபோது அதில் 220 ஓட்டங்களுக்குமேல் குவித்தார் சந்தர்போல். அதனால் தொடரின் சிறந்த ஆட்டக்காரருக்கான விருதும், சுமார் 20 இலட்ச ரூபா மதிப்புள்ள ஒரு காரும் சந்தர்போலுக்குக் கிடைத்தது.

சந்தர்போல் மூன்று வருடங்களுக்கு முன்பு மேற்கிந்தியத்தீவு அணிக்காக விளையாட ஆரம்பித்தபோதே முதல் டெஸ்ட் தொடரில் 400 ஓட்டங்களுக்கு மேல் குவித்தவர்.

இதுதவிர சிறந்த பந்துவீச்சாளராகவும் இவர் திகழ்கிறார். மேற்கிந்தியத் தீவு வேகப்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சு எடுபடாதபோது சந்தர்போலின் சுழற்பந்து வீச்சு எடுபடுகிறது.

மேற்கிந்தியத்தீவு அணியின் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக உருவாகி வரும் சந்தர்போல், மேற்கிந்தியத் தீவின் முன்னாள் வீரர் விவியன் றிச்சர்ட்ஸ் போன்று சாதனை படைப்பார் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்துக் கூறுகிறார்கள்.

சிவ்நாராயண் சந்தர்போல் இந்திய வம்சாவளியில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இவர்கள்தான் அவர்கள்


ஸ்ரீதேவி


ஜெயலலிதா


கஸ்தூரி

* அன்புள்ள சிந்தியா! வன்னியுத்த முடிவு எப்படி இருக்கும்?

கி. சுரேந்திரன், மட்டக்களப்பு.

முடிவு எதுவாக இருப்பினும் மடிவது மனித உயிர்கள்தான்!

•••

* சமீத் அன்வர் படைத்துள்ள புதிய சாதனை எப்படி?

எம். கதிர், பசறை.

அடேங்கப்பா 194! ஆனாலும் ரன்னர் வைத்துக் கொண்டதால் சாதனையில் சில சதவீதங்கள் அஃப்ரிடிக்கும் போய்ச்சேர வேண்டியதாகிறது. ரன்னர் இல்லாமல் இருந்திருந்தால் இன்னும் பிரமாதமாக இருந்திருக்கும்.

•••

* சிந்தியா! இந்தியா-பாகிஸ்தான் போட்டியில் சமீத் அன்வருக்கு மட்டும் ரன்னர் வைத்துக் கொள்ள அனுமதித்த நடுவர்கள் ராகுல் திராவிட் ரன்னர் வைத்துக்கொள்ள ஒரு கட்டத்தின் மேல் அனுமதிக்க வில்லையே! கவனித்தீரா?

பி.எம். உஸ்மான், கொழும்பு-09.

ரன்னராக வந்த டெண்டுல்கர் கப்டனாக செயற்படத் தொடங்கியதால் வந்தவினை. அர்ச்சுனனுக்கு கண்ணன் தேரோட்டி மட்டுமல்ல அட்வைஸ்பண்ணி வழிகாட்டியதே அவருதானுங்களே! துரியோதனன் கோஷ்டி ஆட்சேபனை கிளப்பாததால் கண்ணன் ஒரே நேரத்தில் இரண்டு வேலை பண்ண முடிந்தது. டெண்டுல்கர் விடயத்தில் பாகிஸ்தான் அணி ஆட்சேபனை கிளப்பியதால் அவர் கிளம்பவேண்டியதாகியது!



•••

* தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை எப்போது சாத்தியப்படும்?

ஆர். லீனஸ், நீர்கொழும்பு.

ஆறு ஏழு மாதங்களின் பின்னர் மீண்டும் ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடினவாமே! ஏதோ போங்க! ஆறுமாதத்துக்கு ஒருதடவையாவது ஒற்றுமைபற்றி நினைக்கிறார்களே, என்பது எத்தனை ஆறுதலாக இருக்கிறது தெரியுமா?!

•••

* சமீபபடங்களில் சிரிக்கக்கூடிய படங்கள் எவை சிந்தியா?

கே. உமாதேவி, கொழும்பு-10.

எல்லாமே சிரிக்கக்கூடிய கதைகள்தான். நகைச்சுவை என்று பார்த்தால் 'வள்ளல்' பரவாயில்லை!

•••

* கமல் படத்தில் ரஜினி நடிப்பதாக சொல்லியிருந்தீர்களே! உண்மைதானே?

ஜே.எம். ஹாசன், திருக்கோணமலை.

மன்னிக்கவும்! கமல் மறுத்திருக்கிறார்! நாசர், நெடுமுடி ஆகியோர்தான் தன்னுடன் 'மருதநாயகம்' படத்தில் நடிப்பார்களாம்!

•••

* பணம் உள்ள இடத்தில் பிடிப்பு வைப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கு. தர்மராசா, வவுனியா.

பணத்தின் அருமையை அனுபவத்தில் படித்தவர்கள் என்று.

உங்களுக்காக ஒரு துணுக்ஸ்:

ஒரு பணக்காரனின் கல்லறையில் இப்படி எழுதியிருந்தார்கள்:

"வாழ்க்கை முழுவதும் கணிதத்துடன் போராடிய மனிதன் இவன். குழந்தையாக இருந்தபோது கூட்டல் கற்றுக்கொண்டான். இளைஞனாக இருந்தபோது பெருக்கலில் தேர்ந்தான். முதுமை வந்த காலத்தில் கழிக்க மட்டும் கற்றுக்கொள்ளவே இல்லை. இப்போது இறந்த பிறகு அவனது உறவினர்கள் ஒருவருக்கொருவர் வகுத்துக் கொள்கிறார்கள். அதாவது சொத்தைப் பிரிக்க நிற்கிறார்கள்."

•••

* தன்னடக்கம் என்றால் என்ன?

சி. நிர்மல், பதுளை.

வி.எஸ். காண்டேகர் பிரபலமான எழுத்தாளர். அவரது இளையமகன் ஒருநாள் பள்ளியில் இருந்து விரைவாக வீடு திரும்பினான். கேட்டதற்கு யாரோ புகழ்பெற்ற மனிதர் மரணமானதற்காக பாடசாலை விடுமுறை என்று சொல்லிவிட்டு, "அப்பா! நீயும் புகழ்பெற்ற ஆள்தானே; நீ இறந்தால் கூட எங்களுக்கு விடுமுறை விடுவார்கள் அல்லவா?"

காண்டேகர் கோபப்படாமல் பதில் சொன்னார்:

"எல்லோருக்கும் விடுமுறை கிடைக்கும் என்று சொல்லமுடியாது, ஆனால் நிச்சயம் உனக்கு விடுமுறை கிடைக்கும்!"

•••

* சிந்தியா! அரசாங்கத்துடன் கைகுலுக்கிப் பாராட்டிக் கொண்டே யுத்தத்தை எதிர்த்து தமிழ்ப் பத்திரிகைகளில் அறிக்கையும் விடுகிறார்களே?

எம். சிவபாதசுந்தரம், மட்டக்களப்பு.

கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை. அதனால் போடுகிறார்கள் நம்வாயில் மண்ணை!

•••

* டியர் சிந்தியா! சமீபத்தில் நீங்கள் படித்து வியந்தது?

எல். துரைராஜ், கண்டி.

**கேள்வி:** மோசமான அரசாங்கம் என்பது ஒரு டூ பீஸ் உடையைப் போன்றது எப்படி?

**பதில்:** டூ பீஸ் உடை எப்படித்தான் உடலில் ஒட்டிக்கொண்டிருக்கிறதோ? என்று மக்கள் எப்போதும் ஆச்சரியப்படுகிறார்கள். அத்துடன் அது எப்போது கீழே விழும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டும் இருக்கிறார்கள்.

•••

* ஆசை இல்லாத மனிதன் கிடையாதா?

ஏ. சங்கர், திருமலை.

கிடையாது! தவிர பேராசைதான் கூடாது! ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு பணக்கார வியாபாரிக்கு மூன்று பெண்கள். அவர்களுக்கு சீதனம் ஒதுக்கிய விதத்தை பணக்காரர் விபரித்தார்.

"ரூபா இரண்டு இலட்சம் சவீதாவுக்கு. அவள் வயது 22. ரூபா நாலு இலட்சம் வினிதாவுக்கு, அவள் வயது 27. எட்டு இலட்சம் நமீதாவுக்கு, அவள் வயது 36."

உடனே பேராசை பிடித்த ஒரு பிரம்மச்சாரி இப்படிக் கேட்டான்:

"ஐயா! உங்களுக்கு 50 வயதுப் பெண் இருக்கிறாளா?"

•••

* சிந்தியா! 'அருணாச்சலம்' எப்படிப் போகிறது?

சி. விஜயகுமார், கம்பளை.

தமிழ்நாட்டில் வசூலில் ஓ.கே. ஆனாலும் ரஜினி இரசிகர்கள் மத்தியில் 'ஓஹோ' என்ற சிலிர்ப்பை ஏற்படுத்தவில்லை!

•••

* எதிலுமே பொறுப்புணர்வு ஏற்படாமல் இருப்பவர்களை என்ன செய்வது?

தி. மகேந்திரன், கற்குடா.

திருத்த முயலலாம். முடியாதுபோயின் வெறுப்புணர்வோடு முயற்சியைக் கைவிட வேண்டியதுதான்.

ஒரு கனவான் இருந்தார். அவருக்கு பணம்மீதுதான் குறி. யார் எதைப் பற்றிக் கேட்டாலும் 'எனக்கு நேரமில்லை' என்பதே அவரது பதிலாக இருக்கும்.

அந்தக் கனவான் வீட்டைவிட்டுப் புறப்பட்டதும் ஓர் இளைஞன் அவரது வீட்டுக்குள் செல்வதையும், அவரது மனைவியுடன் உல்லாசமாக இருப்பதையும் தெரிவிக்க விரும்பிய சிலர் அவரிடம் போனார்கள்.

"நாங்கள் உங்களோடு பேசவேண்டும்!"

"எனக்கு நேரமில்லை!" என்றார் அவர். அவர்கள் விடவில்லை. தாங்கள் கண்டதைச் சொன்னார்கள்.

உடனே அதற்கும் அந்தக் கனவான்:

"தெரியும், அதற்கும் காரணம் எனக்கு நேரமில்லை!" என்றார் சளைக்காமல்!

•••

## சிந்தியா பதில்கள்



* கமலுக்கு தொடர்ந்து விருதுகள் குவிகின்றனவே?

எம். நிலாம்தீன், புத்தளம்.

ஆனால் கமலுக்கு பிடித்த விருது என்ன தெரியுமா? கமலே சொல்லுகிறார்: "சிவாஜி கணேசனின் பாராட்டுத்தான் எனக்கு விருது. போனஸ் எல்லாம்!" அவ்வை சண்முகி பட விழாவில் கமலை வாயாரப் பாராட்டியிருக்கிறாரே 'வசிஸ்டர்' சிவாஜி.

•••

## ஒரு திருத்தம்

### அரவிந்த டி சில்வா 44

முரசு 20ம் பக்கத்தில் அரவிந்த டி சில்வா பற்றிய செய்தியில் இரு தவறுகள் உள்ளன. இந்தியாவில் சுதந்திரக் கிண்ணப் போட்டிக்கு முன்புவரை சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அரவிந்த அடித்த அரைச் சதங்கள் 44. சதங்கள் 9. கம்பியூட்டர் பதிவில் ஏற்பட்ட சிறு தவறால் 20ம் பக்க செய்தியில் தவறு நேர்ந்துவிட்டது. நீங்கள் மடல் எழுதி 'கிழிக்க' முன்னரே திருத்தி விட்டோம்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 85

## உளவறிய வந்த அரக்க ஒற்றர்கள்

இராமபிரான் இலங்கைக் கரையை வந்தடைந்துவிட்டார் என்று செய்தி இராவணன் காதுகளுக்கு எட்டிவிட்டது. தென் கரையில் இராமபிரானும் வானரப் படைகளும் வந்து சேர்ந்த போதே, தனது ஒற்றர்கள் மூலம், இலங்கை வேந்தன், அவர்களின் நடமாட்டங்களை அறிந்து கொண்டான். மூவுலகங்களையும் ஆட்டிப்படைக்கும் வல்லமை பெற்ற அந்த அரசனால், அக்கரையில் நடைபெறும் சம்பவங்களை அறிய முடியாமல் போய்விடுமா? மாய வித்தைகள், மந்திர தந்திரங்கள் தெரிந்த-நினைத்தவுடன் நினைத்த உருவத்தை எடுக்கும் ஆற்றல் மிக்க- பல்லாயிரக்கணக்கான ஒற்றர்களும் உளவாளிகளும் இலங்கையர் கோனின் ஆட்சிக்குத்துணை நிற்பவர்கள். அவர்களில் பலர் பல்வேறு நாடுகளுக்கும் சென்று உளவறிந்து வருபவர்கள். இவர்களில் சிலரே ஏற்கனவே. கிட்கிந்தைக்கு



குணம் கொண்டவரல்லர். பொறுமையுடனேயே எதையும் ஆராய்ந்து பார்ப்பார். இத் தன்மை அவரிடமிருந்தமையினால்தான், மாரீசன் பொன்மான் வேடமிட்டு ஜானகியை ஏமாற்றிய போதும், சந்தேகிக்க முன்வரவில்லை. அதனை மாயமான் என்று இலக்குமணன் தீர்மானித்தபோதும் இராமரால் அத்தகைய முடிவுக்கு வரமுடியவில்லை. கைகேயி, தன் மகன் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்காகத் தன்னைக் காட்டுக்கு ஏகும்படி சூழ்ச்சி செய்ததையும் அவர் பொருட்படுத்தாதவராக இருந்தார். கள்ளமில்லாத வெள்ளை மனம் கொண்ட அவருக்குத்தான் ஒன்றன்பின் ஒன்றாக சோதனை அலைகள் எழுந்து தாக்கின.

### இராஜகுமாரன்

இராமபிரானும் இளைய பெருமாளும் வந்துவிட்டனர் என்ற தகவலையும் இராவணனிடம் கூறிவிட்டனர்.

### விபீடணரிடம் அகப்பட்ட ஒற்றர்கள்

விபீடணர், வானரப்படைகள் வாடிவிட்டிருந்த இடங்களைப் பார்வையிட்டு, வீரர்களிடம் உரையாடினார், அவரவர் தேவைகளைக் கேட்டறிந்து உரிய நிவர்த்திகளுக்கு வகை செய்தார். இவ்வாறு அவர் வலம் வந்து கொண்டிருக்கும்போது, இரு வானர வீரர்களின் வித்தியாசமான நடமாட்டம் அவருடைய கருத்தை ஈர்த்தது. அவர்கள் இருவரும் தன்னைப் பார்க்காமல் தங்கள் முகங்களை வேறு புறம் திருப்பியவர்களாகக் காணப்பட்டனர். கண்டும் காணாதது போலிருந்த அவர்களை நெருங்கிய விபீடணரின் சந்தேகம் வலுப்பெற்றது. அவர்கள் இருவரும் அவ்விடத்தை விட்டு மெல்ல நழுவிவிட முயற்சித்தனர்.

விபீடணருடன் இலங்கையிலிருந்து வந்த இரு துணைவர்களும் இருந்தமையால் குறிப்பாலுணர்ந்து ஓடிச்சென்று அவ் விருவானரர்களையும் கெட்டியாய்ப் பிடித்து வந்து விபீடணர் முன் நிறுத்தினார்கள். சுற்றியிருந்த ஏனைய வானர வீரர்கள் பலரும், 'இவர்கள் இருவரும் எம்மவர்களல்லர்' என்ற முடிவுக்கு வந்தனர். சிலர் ஓடிச் சென்று, சில கொடிகளை எடுத்து வந்து, அவர்கள் திமிறி ஓடிவிடாதபடி கட்டினார்கள்.

அவ்விருவரையும் அழைத்துக் கொண்டு இராமபிரானின் முன் நிறுத்தினார்கள். விபீடணர் இராமபிரானை அணுகி, அவ்விருவரும் போலியாக வானரவேடம் போட்டு உளவறிய வந்த இராவணனின் ஒற்றர்கள் என்று கூறினார்.

இராமபிரானைப் பொறுத்தவரை, அவர்களுக்கும் ஏனைய வானரவீரர்களுக்குமிடையில் வித்தியாசம் எதுவும் தெரியவில்லை. ஆனால் இராமபிரானும் ஆஞ்சநேயரும்- அவர்களுடைய கண்களைப்பார்த்தே அவர்கள் வேடதாரிகள் என்று தீர்மானித்துவிட்டனர். இராமபிரான் தன் கருணை பூத்த கண்களால் பார்த்து அவர்கள் நிரபராதிகளாகத்தான் இருக்க வேண்டும் என்று மேலோட்டமாகக் கருதினார்.

இராமபிரான்-எத்தகைய வேடதாரிகளையும் கண்டு பிடிக்கும் வல்லமை இல்லாதவரல்ல. ஆனால் எவரையும் குற்றவாளியாகக் கண்டு உடனே முடிவெடுக்கும் குணம் கொண்டவரல்லர்.

விபீடணன், அவ்விருவரையும் இராவணனால் ஏவப்பட்ட ஒற்றர்கள் என்று குற்றஞ்சாட்டியபோதும், அவர்களை உரிய முறையில் விசாரித்தறியாமல், அவர்களை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுமாறு கேட்டுக் கொண்டார்.

வீரர்கள், அவ்விருவரையும் கட்டியிருந்த கயிறுகளை அகற்றி விட்டுவிட்டனர். ஆனால் அந்தத் தெய்வீக சக்தி பெற்ற திருவுருவத்தின் முன் உண்மை வெளிப்படாமல் போக முடியுமா?

**பாம் பிழைப் பள்ளி வள்ளல்**
**பகைஞா என்று உணரான் பல்லோர்**
**நோம் பிழை செய்த கொல்லோ**
**குரங்கு என இரங்கி நோக்கி**
**தாம் பிழை செய்தாரேனும்**
**தஞ்சம் என்று அடைந்தோர் தம்மை**
**நாம் பிழை செய்யலாமோ**
**நலியலீா் விடுதிர் என்றான்**

*(யுத்த காண்டம்-713)*

**பொருள்:**

*ஆதிசேடன் எனும் பாம்புப் படுக்கையில் உறங்கும் வள்ளலான (திருமாலின் அவதாரமான) இராமபிரான், எதிரிகள் என்று சுட்டிக் காட்டிய வானர வேடமிட்டு வந்த அவ்வரக்கர்களை பகைவர் என்று கருதாமல், "இக்குரங்குகளா வெறுப்பூட்டும் காரியங்களைச் செய்தன?" என்று இரக்கத்துடன் வினவி, "இவர்கள் தவறுகள் செய்திருப்பினும், நம்மிடம் தஞ்சமென வந்தவர்கள் போல் தென்படுகின்றனர். ஆகவே இவர்களுக்கு நாம் துன்பம் தரலாகாது. அவர்களைத் துன்புறுத்தாமல் விட்டு விடுங்கள்!" என்று கூறினார்.*

இராமபிரான் இவ்வாறு இராவணனின் ஒற்றர்களை விட்டுவிடுமாறு கூறியதைக் கேட்டு விபீடணர் அதிர்ச்சியடைந்தார். அவ்விருவரையும் அவருக்கு நன்றாகவே தெரியும். இராமபிரானை நோக்கிய விபீடணர், "இவர்கள் எம்முடைய வானரப்படையைச் சேர்ந்தவர்களல்ல. என் அண்ணன் இராவணனால் ஏவப்பட்ட உளவாளிகள். இவன் பெயர் சுகன், அவனுடைய பெயர் சாரன்," என்று விளக்கிக் கூறினார். இக்குற்றச் சாட்டுக்குப் பதில் ஒரு புன்முறுவல்தான் இராமபிரான் முகத்தில் அரும்பியது.

இராமபிரான் தங்களுக்குச் சார்பாகவே இருக்கிறார் என்பதனைக் கண்ட ஒற்றர்கள் இருவரும் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தத் திட்டமிட்டனர். "வலிமைபொருந்திய வில்லேந்திய வீரனே! இவன் எங்கள் வானர குலத்தை வேரோடு அழித்து தனது அண்ணனாகிய இராவணனுக்கு வெற்றியீட்டித்தரும் குறுக்கு வழியைப் பின்பற்றி, போலியாக தஞ்சம் புகுந்துள்ளான். இவன் கூற்றை நம்பி ஏமாந்து விடாதீர்கள்!" என்று ஒற்றர்களில் ஒருவன் கூறிக்கொண்டு இராமபிரான் அருகில் சென்று நின்றான். இதனைக் கண்ணுற்ற ஆஞ்சநேயர் அளவு மீறிய கோபத்துடன் அந்தப் போலி வேடதாரியான வானரத்தை ஓடிச் சென்று பிடித்துக்கொண்டார். அடுத்தவனை சுக்கிரீவன் எட்டிப்பிடித்தான்.

உடனடியாக விபீடணர், "இவ்விருவரும் வானரர்களே அல்ல; இவர்களுடைய போலி வேடத்தை இதோ களைகிறேன் பாருங்கள்!" என்று கூறிக்கொண்டு தன் கண்ணை மூடியபடி ஒரு மந்திரத்தை ஜெபித்தார். மந்திர உச்சாடனம் தொடங்கியதுமே வானரர்களைப் போல் நின்ற அவ்வொற்றர்களின் உடல்கள் நடுங்கத் தொடங்கின. அடுத்த கணம் கோர அரக்கர் தோற்றத்துடன் அவ்விருவரும் காட்சியளித்தனர். அப்போதும் புன் முறுவல் மாறாதவரான இராமபிரான், "அஞ்ச வேண்டாம். நீங்கள் ஒற்றர்கள் என்று அறிந்தும் உங்களுக்குத் தண்டனை தரும் எண்ணம் எமக்கில்லை, இருப்பினும் நீங்கள் இங்கு வந்த காரணத்தை ஒன்றும் மறைக்காமல் கூறிவிடுங்கள்," என்றார்.

### உண்மை வெளிப்பட்டது

உத்தம புருடரான இராமபிரான் முன்னிலையில் இனிமேல் பொய் கூறுவது பொருந்தாது என்று கருதிய அரக்க ஒற்றர்கள் இருவரும் கைகளை சிரசின் மீது உயர்த்தியவராக, "பகையை வேரோடொழிக்கும் வீரம் நிறைந்தவரே! உண்மையில் இராவணனால் ஏவப்பட்ட ஒற்றர்கள் தாம் நாம். கற்பின் உறைவிடமான சீதாப்பிராட்டியாரை சிறை வைத்திருக்கும் இராவணன் உண்மையில் அழிவுக்கு வழி தேடிவிட்டான் என்ற உண்மையினை நாம் அறிவோம். இருப்பினும் தங்களையும் தங்கள் படையின் தன்மையினையும் அறிந்து வரும்படி அவன் ஏவினான். அதற்காகவே இங்கு வந்துள்ளோம்," என்றனர்.

"வீரர்களே! நீங்கள் உங்களுடைய மன்னனிட்ட கட்டளையை நிறைவேற்ற வந்தவர்கள். நீங்கள் இங்கு கண்ட சகலவற்றையும்- உங்களை இப்பணிக்கு ஏவிவிட்டவர்களிடம் போய்ச் சொல்ல வேண்டும். அதுதான் உங்களது முக்கிய கடமை. நீங்கள் இங்கு அறிய முடியாமற்போன தகவல்களையும் நான் கூறுகிறேன். இராவணனுடைய திரண்ட செல்வத்தை உடைய அரசியல் உரிமைகளனைத்தையும் நாம் விபீடணருக்கு அளித்து விட்டோம். இனிமேல் இலங்கை நாட்டை ஆளும் அருகதை உடையவர் அந்த இராவணனின் தம்பியான விபீடணரே!

இலங்கைக்கு நாங்கள் படை நடத்திவரப் பெரும் தடையாக நின்ற கடலின் மீது கல்லால் அணையினை எழுப்பி, எமது படையுடன் இங்கு வந்துவிட்டோம். விரைவில் போர் முரசம் ஒலிக்கும்! போரில் அற நெறி பிறழ்ந்த இராவணனின் பத்துத் தலைகளும் உருளும். எம்மை எதிர்த்துப் போரிடும் அனைவரும் மாண்டு மடிவார்கள்.

எமது படையிலுள்ள வீரர்களின் அணிகளைப் பார்வையிட்டிருப்பீர்கள் அவர்கள் செய்யும் பயிற்சிகளையும் பார்த்திருப்பீர்கள். ஆகவே, இனிமேல் எங்களால் உங்களுக்கு எத்தீங்கும் நேரப்போவதில்லை, இனி நீங்கள் தாராளமாகச் செல்லலாம்!"

இவ்வாறு கூறினார் இராமபிரான். விபீடணரை அழைத்து, "இவ்விருவருக்கும் எம்மவர் எவரும் எத்தீங்கும் செய்யலாகாது. அவர்கள் போகட்டும்," என்று இராமபிரான் கூறினார்.

'பெரியதொரு கண்டத்திலிருந்து தப்பி விட்டோம்,' என்று பெருமூச்சுவிட்ட அரக்க ஒற்றர்களான சுகனும் சாரனும் ஓடோடிச் சென்று மறைந்தனர். **(தொடர்ந்து வரும்)**

**இராமாயணப் போட்டி: 83**
**சரியானவிடை:- விஸ்வகர்மா**

1. செல்வி. தி.ஜெயந்தி. இல.13, பஸ் நிலையம், அட்டன்.
2. செ. கனகரெத்தினம். 975, அன்புவழிபுரம், திருகோணமலை.
3. யோ.யோ. யோகராசா. வல்லை வீதி, தொட்டிப்பு, சங்கானை கிழக்கு.
4. த. தாட்சனி. 11 உபதிஸ்ஸ வீதி, பம்பலப்பிட்டி, கொழு-04.
5. செல்வன் கோ.கோகுலராஜ்., தரவச்சேனை வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை.

**போட்டி இல. 85** கேள்வி:- அரக்க ஒற்றர்களின் பெயர்களைத் தருக?

ஜூன். 07 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி – இல.85, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# வர்ணக் கனவுகள்

காதிலை பூ கந்தசாமி



வவுனியாவில் இருந்து வாகன ஊர்தி மூலம் தமிழர் முட்டு அணித் தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

'தரைப்பாதையெங்கும் தார் ஊற்ற வைத்த செம்மல்களே வருக! வருக!'

'அடைந்தால் தார்பாதை அல்லது மணல் பாதை என்று சூளுரைத்து வென்ற சிங்கங்களே வருக!'

'உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு. கடல் தமிழருக்கு என்று வழிகாட்டிய வரலாற்று நாயகர்களே வருக!'

மேற்கண்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகள் பாதையெங்கும் காணப்பட்டன.

கிளிநொச்சிச் சந்தியில் நடைபெற்ற மா சிறும் கூட்டத்தில் சிங்கம் சபாசிதம்பரம் உரையாற்றினார். அங்கு அவர் ஆவேசமாகத் தெரிவித்தது அல்லது முழங்கியது அல்லது கர்ஜித்ததாவது;

"அன்பர்களே! நண்பர்களே! தாய்மார்களே! நினைத்துப் பார்க்கிறேன் அன்று நான் நினைத்தே பார்த்ததில்லை இப்படியொரு காலம் மீண்டும் வருமென்று.

நாலு துப்பாக்கிகளையும், நாலு அல்லது நாலரைக் குண்டுகளை வைத்துக்கொண்டு தம்பிமார் தமிழ்ழம் கண்டுவிடுவார்களோ என்று பயந்து கொண்டிருந்தோம். அப்படி ஒரு நிலை வந்திருந்தால் இப்படியொரு கூட்டத்தில் நாம் பேசியிருக்க முடியுமா. உங்களுக்கும் எம்மையெல்லாம் காணும் பெருவாய்ப்பு கிடைத்திருக்குமா என்பதைத்தான் தயவு செய்து எண்ணிப் பாருங்கள்.

அன்பர்களே! இந்த தரைப்பாதைத் திறப்புக்கு தாமும் ஒரு காரணம் என்று தமிழ்க் கட்சி நண்பர்கள் சிலர் சொல்வதாகக் கேள்விப்பட்டேன்.

நான் ஒரு பெரிய உண்மையை உங்களுக்கு மட்டும் சொல்லிக்கொள்கிறேன். "தரைப்பாதை திறக்கவே இந்த யுத்தம் என்று சொல்லவேண்டும்" என்று நள்ளிரவிலே எனக்கொரு தொலைபேசி அழைப்பு வந்தது. பேசியவர் நண்பர் சீலன். அவருக்கு அப்போதுதான் கட்டளை கிடைத்ததாம். யார் இட்ட கட்டளை என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. அது சாணக்கியமும் அல்ல. நாகரீகமும் அல்ல.

அப்போது எனக்கிருந்த உடல் நிலை காரணமாகவும், மனநிலை காரணமாகவும் அருமை நண்பர் கானக சுந்தரியிடம் வரவேற்கும் பொறுப்பை பக்குவமாய் தள்ளிவிட்டேனே தவிர, பயந்தேன் என்றோ வம்பை ஏன் நான் வாங்கவேண்டும் என்று சூடு கண்ட அனுபவத்தில் நினைத்தேன் என்றோ மாற்றுக் கட்சிகள் கூறுவது உண்மையல்ல. ஆனால் இப்போது நினைக்கிறேன் நானே நேரடியாக பாராட்டியிருக்கலாம்.

எப்படியிருந்தாலும் முதலில் வரவேற்று, வானொலிமூலம் வானலை வழியாக கருத்துச் சொன்ன முதல் கட்சி நாம்தான் என்பதை இப்போதாவது உரத்துச் சொல்ல ஒரு பயமும் கிடையாது.

கையெழுத்துப் போட்டுப் போட்டு கரம் தேய்ந்து போன நண்பர் சீலனின் கரத்தை எண்ணிப்பாருங்கள். அறிக்கை விட்டு விட்டே மை தீர்ந்து போன நம் பேனாக்களை நினைத்துப் பாருங்கள்

முட்டுக் கொடுக்கத் தேவையானால் முதுகெலும்பையும் கழற்றிக்கொடுத்து உதவிய வரலாறு எங்களுக்கு இருக்கிறது என்பதை மறுப்பவர்களும் இருக்கிறார்களே என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

அவசரகாலச் சட்டத்தை அன்று ஏன் ஆதரிக்கவில்லை என்று தமிழ்க்கட்சி தம்பி ஒருவர் கேட்கிறார். தம்பிமாருக்கு சாணக்கியமும் தெரியவில்லை. சமயோசிதமும் தெரியவில்லை.

அவசரகால சட்டத்தை நாம் ஆதரிக்காதது சாணக்கியம். தகுந்த நேரமெல்லாம் அரசை நாம் ஆதரித்தது சமயோசிதம். உள்ளூராட்சித் தேர்தலில் கூறிய நேரத்தில் ஆதரவு கொடுத்து அரசின் கரத்தை பலப்படுத்தியதால்தான் அந்தக் கரத்தை நீட்டி இன்று தரைப்பாதை திறக்க அரசால் முடிந்தது, ஜனநாயக விரோதிகளை ஒடுக்க முடிந்தது என்பதை அந்தத் தம்பிமாருக்கு கூறிக்கொள்ள எக்கச்சக்கமாய் ஆசைப்படுகிறேன்.

புலிகளை அன்று ஏன் கண்டிக்கவில்லை என்றும் தமிழ்க் கட்சியொன்றின் தம்பி கேள்வி எழுப்பியிருக்கிறாராம்.

நாங்கள் அன்று புலிகளை கண்டிக்காமல் இருந்தமையால்தான் இன்று உரமாக புலிகளைக் கண்டிக்க முடிகிறது, இப்படிக் கண்டிக்க நாம் இருக்க முடிந்தது என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்று புலிகளுடன் நேரடியாக முரண்பட்ட சாணக்கியமில்லாத தமிழ்க் கட்சிகள் தம் உறுப்பினர்கள் பலரை புலிகளிடம் இழந்தன. அச் செயலுக்காக புலிகளை மிக வன்மையாக கண்டிக்கிறேன். ஆனால் நாம் அன்று நேரடியாக கண்டிக்காமல் இருந்தமையால்தான் அமுதர், யோகேஸ் என்ற இருவரோடு இழப்புக்களை நிறுத்திக் கொண்டு இன்றுவரை நிலைக்க முடிந்தது. தமிழ்க் கட்சிகள் போல பலரை பறிகொடுக்கவில்லை. இதுதான் சாணக்கியம் என்பதை அந்தத் தம்பிகள் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆடுற மாட்டை ஆடிக் கறக்கவேண்டும். பாடுற மாட்டை பாடிக் கறக்க வேண்டும். சுடுகிற புலிகளை தாஜா பண்ணித் தடுக்க வேண்டும். அதுதான் கடந்த காலத்தில் நாம் கையாண்ட சாணக்கிய வழிமுறை என்பதை அன்பர்கள் தெரிந்து கொள்வதால் இப்போது ஒரு கேடும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.

நாம் ஒன்றும் கொள்கைகளைப் பெரிதாக விட்டுக் கொடுக்கவில்லை. அன்று கேட்டோம் தமிழருக்கு ஒரு நாடு வேண்டும் என்று.

இன்று கேட்கிறோம் தமிழருக்கு ஒரு காடு வேண்டும் என்று. ஏனெனில் யுத்தம் காரணமாக காடுகள் அழிந்து போனதால் சாணக்கியமாக அப்படிக் கேட்க வேண்டியுள்ளது. காடுகள் உருவான பின்னர் அது ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்கூட பொறுத்திருந்து அடுத்த கட்டத் திட்டம் பற்றி எமது செயற்குழு கூடி ஆராயும். ஆனாலும் அடுத்த பொங்கலுக்குள் நமக்கென்று ஒரு காடு கண்டே தீருவோம், (கரகோசம்) என்று உரை முழங்கினார்.

கூட்டத்தின் முடிவில் எழுச்சிக் கீதம் இசைக்கப்பட்டது. (முன்னர் ஒரு காலத்தில் கூட்டணி மேடைகளில் பாடப்பட்ட வாழ்க ஈழத்தமிழகம் பாணியில், பாடல் அமைந்தது)

**"வாழ்க ஈழக் காடுகள்**
**வளர்க வளர்க வளர்கவே!**
**தார் போட்டும் கல் போட்டும்**
**வீதியெல்லாம் கலக்கவே**
**பொங்கும் தானைத் தலைவர்கள்**
**பென்ஸ் காரில் பறக்கவே!"**

பாடல் முடிந்ததும் காடு வளர்க்க வீட்டுக்கு ஒரு வீரன் விரைந்து வருமாறும், அவ்வாறு வருவோருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டு, எழுச்சிப் பிரசுரம் என்ற பெயரில் வேலை வாய்ப்பு விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டன.

## தமிழ்க்கட்சிகள் தீர்மானம் உரிமைப் போரில் திருப்பம்!

தமிழர் முட்டு அணியினரின் அரசியல் தாக்குதல்களுக்கு எதிராக ஏனைய தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டுள்ளன.



தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

* வடக்கு-கிழக்கெங்கும் புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளில் மும்முரமாக ஈடுபடுவது. திட்டங்களை பக்கம் பக்கமாகத் தீட்டி பத்திரிகைளுக்கு கொடுப்பது.
* தீவிரச் சிந்தனைகளைத் தூண்டும் பிரசாரங்களுக்கு எதிராக சமாதான ஜனநாயக பக்திப் பாடல்களை வீதிக்கு வீதி ஒலிபரப்புவது. அதற்குண்டான செலவுக்கு மக்களிடம் நிதி வசூலிப்பது.
* கடந்த காலத்தில் அரசாங்கத்துடன் எவ்வாறெல்லாம் ஒத்துழைத்து செயற்பட்டோம் என்பதை முட்டணிக்கு பதிலடியாக மக்களிடம் புட்டு புட்டுப் வைப்பது.
* வேலை வாய்ப்பு விண்ணப்பங்களை வீடுவீடாக விநியோகிப்பது.
* குளங்கள்,கோவில்கள், இடிந்த மனைகளை செப்பனிடும் சிரமதானப் பணிகளுக்கு மக்களை தட்டி எழுப்புவது.
* இசைக் கச்சேரிகள், நட்சத்திர விழாக்கள் முலமாக மக்களை மகிழ்வித்து நிதி வசூலிப்பது; அதன் மூலம் ஐந்து கட்சிகளுக்கும் ஓசியில் விளம்பரம் செய்வது.

மேற்கண்ட முக்கிய தீர்மானங்களை நிறைவேற்ற ஓயாமல் உழைத்து ஓடாகத் தேயப்போவதாக தமிழ் கட்சி வட்டாரங்கள் உறுதி தெரிவித்துள்ளன. இந்த முடிவுகள் உரிமைப் போராட்ட வளர்ச்சியின் முன்னேற்றப் படிக்கட்டுகளை தெளிவாக சுட்டிக்காட்டுவதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஒரு காலத்தில் பல கட்டிடங்கள் இடிபட நாமே காரணமாக இருந்தோம் என்று தமிழர் முட்டணி எம்மீது குற்றம் சாட்டுகிறது, அப்படிக் கட்டிடங்கள் உடையக் காரணமாக இருந்தமையால்தான் இந்த புதிய கட்டிடங்களை தமிழர்களுக்கு பெற்றுக் கொடுக்க முடிகிறது, சாதனையாக சொல்ல முடிகிறது என்பதை கூறிக்கொள்கிறோம். எனவே நாமும் கட்டிடங்கள் இடியக் காரணமாக இருந்தோம் என்பதற்காக நன்றி சொல்ல வேண்டுமேதவிர நன்றிகெட்டதனமாக குற்றஞ்சாட்டக்கூடாது" இவ்வாறு தமிழ்க் கட்சி பேச்சாளர் ஒருவர் கூறினார்.

(இத்தோடு தமிழ்க் கட்சிகளின் கனவு கட்டாகிறது.)


படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

580230
பல வாடிக்கையாளர்களின் பெரு
விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில்
எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06




## கண்டதுண்டா



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


↓ விதம் விதமான மான்களை நீங்கள் பார்த்திருக்கலாம் ஆனால் இப்படியான பருவத்தில் உள்ள மானை பார்த்திருக்க மாட்டீர்கள். தாயின் வயிற்றிலிருந்து தாவிக்குதித்த உடனே மான் குட்டி இப்படிக் காட்சி தருகிறது. பிறந்து ஓரிரு மணிநேரத்துக்குள் துள்ளி விளையாட ஆரம்பித்து விடும். இதுவரை உலகெங்கணும் 38 வகையான மானினங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மானின் ஆண் வர்க்கத்துக்கு கொம்புகள் முளைக்கின்றன. எப்போதும் இவை கூட்டமாகவே வாழும். ஒரு கூட்டத்திலுள்ள ஆண் மான்களில் எந்த மானுக்கு பெரிய கொம்பு இருக்கிறதோ இயல்பாகவே அதுவே அக் கூட்டத்தின் தலைமை ஸ்தானத்தை பெறுகிறது.

இன விருத்திக்கான சேர்க்கை வருடத்தில் எக்காலத்தில் இடம் பெற்றாலும் குட்டிகள் எப்போதும் இளவேனிற் காலத்திலேயே பிறக்கின்றன. சினைப்பட்ட நிலையில் கரு உரிய காலத்துக்காக 5 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரை காத்திருக்குமாம். இது இனத்துக்கு இனம் மாறுபாடடையவும் கூடும். ஆண் குட்டிகளுக்கு ஒரு வயதானதும் கொம்பு முளைவிட ஆரம்பிக்கும். அப்போது கொம்பு வெளிவருவதற்கேற்றவாறு உரிய இடத்தை மரக்கொப்புகளில் போய்த் தேய்த்துக்கொள்ளுமாம். இந்த மானைப் பாருங்கள் அழகு. ■

## துள்ளித் துள்ளி



← பன்றிகளைப் பார்த்ததுண்டு. உடம்பெல்லாம் புசுபுசுவென்று முடியுடன் இங்கே காணப்படுகிறதே இதுவும் பன்றிதான். அபூர்வப்பன்றி. காட்டுப் பன்றி.

மிக அரிதாகவே காணப்படும் காட்டுப் பன்றிகள் வருடத்தின் எக்காலத்திலும் குட்டிகளை ஈனுகின்றன. பன்றிகளின் காதல் லீலைகளும் சுவாரசியமானவை. தனிமையில் வாழும் ஆண் பன்றி தனக்கான இணையைத் தேடி அதன் பக்கவாட்டு வயிற்றில் போய் தனது தலையால் முட்டும் அதுதான் சிக்னல். பெண் பன்றி குறிப்பறிந்து விட்டுக் கொடுக்கும். பெண் பன்றிகள் 18வது மாதத்தில் பருவமடைந்து இணைதேட ஆயத்தமாகிவிடும். ஆனால் அவை எப்போதும் 4 வயதைக்கடந்த ஆண் பன்றிகளையே விரும்பி ஏற்கும்.

பிறந்த குட்டிகளுக்கு முதுகில் வரிகள் தென்படும். பல மாதங்கள் வரை இவ்வரிகள் இருந்து குட்டிகள் வளர வளர வரிகள் மறைந்து விடுகின்றன. இப்பன்றிகள் வசிக்கும் காடுகளுக்கு ஏற்பவே வரிகளின் நிறம் மாறுபடுகின்றது. எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவே இயற்கையாக இக்கோடுகள் காணப்படுகின்றன. காட்டு யுத்தத்தில் ஈடுபடும் மனிதர்கள் வரி வரி உடை போடவேண்டும். உருமறைப்புக்கு அதுதான் வசதி. ஆனால் பன்றிக் குட்டிகளுக்கு இயற்கையாகவே யூனிபோம் இருக்கிறது பாருங்கள். ■

## உரத்த வீச்சு



→ இலங்கை கிரிக்கெட் அணியின் இரும்பு மனிதன் யார்? என்ற கேள்விக்கு சட்டென்று ஒரே பதில் அரவிந்த டி சில்வா. 31 வயதான இந்த உதவிக்கப்டனின் சிரத்தையான ஆட்டம்தான் தோல்வியின் விளிம்பில் அணி நின்ற பல சந்தர்ப்பங்களில் கைகொடுத்து தூக்கிவிட்டது.

பொறுப்பான ஆட்டம் என்றால் எப்படி இருக்கும் என்பதற்கு பல தடவைகள் உதாரணம் காட்டியிருக்கிறார். பந்து தடுப்பு வியூகங்களை உடைத்துக் கொண்டு நாலாபுறமும் பந்துகளை பறக்கச் செய்யும் அபாரமான ஆட்டம். பந்து தடுப்பாளர்கள் திணறிப்போவர். மெதுவாக ஆரம்பித்து, வெட்டித் திருப்பி, புகுந்து தூள்கிளப்பி அரவிந்தவின் துடுப்பு வித்தை காட்டுவது பிரமிப்புத்தான்.

தற்போதைய கிரிக்கெட் வீரர்களில் அரவிந்ததான் பாரமான துடுப்பை தொடர்ந்து உபயோகித்துவருகிறார். பந்தில் பட்டால் பட்டாசு வெடித்தது போன்ற ஓசையுடன் பவுண்டரி நோக்கி பந்து பறக்கும்.

இந்தியாவில் நியூசிலாந்து அணியுடன் மோதியபோது இலங்கை அணியின் ஓட்டங்கள் திருப்திகரமாக இருக்கவில்லை. சிறந்த துடுப்பாட்ட வரிசை கொண்ட நியூசிலாந்து அணி களத்தில் இறங்கியபோது வெற்றி உறுதி என்றே நம்பப்பட்டது. அந்த நம்பிக்கையைப் பொய்க்கச் செய்து நியூசிலாந்து வீரர்களின் கரங்களை கட்டிப்போட்டதில் அரவிந்தவின் பந்து வீச்சும் ஒரு முக்கிய காரணம். 25 ஓட்டங்களை கொடுத்து 2விக்கெட்டுக்களை கைப்பற்றினார். அன்று துடுப்பாட்டத்தில் சோபிக்காத குறையை பந்து வீச்சால் நிறைவு செய்தார்.

இந்தியாவில் சுதந்திரக் கிண்ணப் போட்டித் தொடருக்கு முற்பட்ட சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மொத்தம் 8 சதங்களை விளாசியிருக்கிறார். அரைச்சதம் 31. ஒரு நாள் போட்டிகளில் ஆறாயிரம் ஓட்டங்களை தாண்டிவிட்டார்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் ஆறாயிரம் ஓட்டங்களை குவித்தவர்களில் மூன்று பேர்தான் இன்னும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். சலீம் மாலிக், அசாருதீன், அரவிந்த டி சில்வா. அந்த மூவர் அவர்கள்தான்.

கென்யாவுக்கு எதிரான போட்டியில் அரவிந்த அடித்தது 145. இலங்கை அணி வீரர்களில் ஒருநாள் போட்டியில் அதிக உச்ச ஓட்டம் கண்டவர் அரவிந்ததான். சமீபத்திய இந்திய சுதந்திர கிண்ண போட்டியில் ஜெயசூரிய அதனை முறியடித்திருக்கிறார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களை பெற்றிருப்பதோடு, கடைசியாக இலங்கையில் பாகிஸ்தானோடு நடைபெற்ற டெஸ்ட் தொடரில் தொடர்ந்து மூன்று சதங்கள் போட்டு அசத்தினார். நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட்போட்டியில் இரு சதங்கள் போட்டது மூலம் இலங்கை வீரர்களில் டெஸ்ட்போட்டியில் அதிக உச்சபட்ச ரன் குவித்த பெருமையும் அரவிந்தவுக்குத்தான்.

வருங்கால இலங்கை அணிக் கப்டனான அரவிந்த டி சில்வாவின் சாதனைப்பட்டியல் இன்னும் நீளத்தான் போகிறது. ஏனெனில் இந்த மனிதரின் மனதில் உரம் இருக்கிறது. தன்னம்பிக்கை நிறையவே இருக்கிறது. ■

## ராக்கெட்



← கடலுக்குள் தவறிவிழுந்துவிட்ட ரொக்கட் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள் என்று சொன்னால் நம்பிவிடுவீர்கள். ஆனால் இது மீனுங்க மீன். அபூர்வ ரக மீன்.

'ட்ரம்பெட்' எனப்படும் வாத்தியக் கருவியைப் போலவும் இது தோற்றமளிப்பதால் இதனை 'ட்ரம்பெட் மீன்' என்றே பெயரிட்டுள்ளனர்.

இந்துமாக்கடல் மற்றும் பசுபிக் பெருங்கடலில் பவளப்பாறைகளும் கடல் தாவரங்களும் காணப்படும் பகுதிகளையே ஒட்டி வாழும் இந்த மீன் இனம் 6 குடும்பங்களைக் கொண்ட 257 பிரிவுகளை உள்ளடக்கியவை.

முன்புறமாக எத்தகைய வேகத்தில் நீந்திச் செல்லுமோ அதே அளவு வேகத்தில் இவை பின்னோக்கியும் செல்லும், இதற்கேற்ற வகையில் நீளமான இவற்றின் உடலில் அமைந்துள்ள செதில்கள் இயங்குகின்றன. உடலின் மூன்றில் ஒரு பகுதி அளவினதாக- குழாய் போன்ற முகத்தையுடையது, இதனால் உறிஞ்சியே தனது இரையை இழுத்துப் புசித்துவிடும்.

எதிரிகளிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்ள பெரிய மீன் கூட்டங்களுக்குள் புகுந்து ஒழிந்து கொள்ளும். இதன் தோற்றம் பதுங்க வசதியாக இருக்கிறது. மீன் என்றே தெரியாமலும் எதிரிகள் ஏமாந்துபோகலாம். பார்த்தீர்களா மீன்களில்கூட தந்திர மீன்கள் இருக்கின்றன. ஆனால் ஒன்று பெண்களின் கண்களுக்கு மட்டும் இந்த மீன் உவமையாகாது. ■

## பிறந்த நாள் வாழ்த்து



பருத்தித்துறை
மாதனையைச் சேர்ந்த
சுந்தரலிங்கம்
மண்டலநாயகி
தம்பதியினரின் கனிஷ்ட
புதல்வி நிவேதினி தனது
21வது பிறந்த நாளை
09.05.1997 அன்று
தனது இலண்டனில் உள்ள
இல்லத்தில் வெகு சிறப்பாக
கொண்டாடினார்.
இவரை அன்பு அப்பா,
அம்மா, அக்காமார்,
தம்பிமார், பெரியம்மா,
அண்ணன், மாமா, மாமி,
மச்சான் (இலண்டன்) மற்றும்
இலங்கை, இலண்டன்
பிரான்ஸ், ஜேர்மன்
தோழர்கள் உற்றார்
உறவினர்கள் அனைவரும்
நல்லூர்க் கந்தனின் அருளும்,
நல்லாசியும் பெற்று
பண்பின் பிறப்பிடமாய்
செல்வச் செழிப்புடன் சகல
கலைகளும் பெற்று
சுகஜீவியாக பல்லாண்டு
காலம் நீடூழி வாழ்கவென
அன்புடன்
வாழ்த்துகிறார்கள்.

நிவேதினி

தகவல்:- மாமா
மாதனை, பருத்தித்துறை.

சுடச்சுட என்பார்களே அது போல, அப்போதுதான் முட்டைக்குள்ளிருந்து வெளிப்பட்ட பச்சிலைப் பாம்புக்குட்டிகள் இவை. குட்டிகளின் நீளம் 8 அங்குலம் (20செ.மீ). இவை 100 செ.மீ. வரை வளரும். முட்டையை விட்டு வெளியேறி சில மணி நேரத்தில் இவை தங்களுக்கான வேறிடங்களை நாடி ஓடிவிடும். →

பாம்புகள் பல முட்டைகளை இடுகின்றன. இருந்தபோதும் சில முட்டைகளே பொரிக்கின்றன. நச்சுப்பாம்புகளின் ஆயுள் ஏனைய பாம்புகளை விட அதிகம். அவற்றை சுலபமாக எதிரிகள் அணுகமுடியாது என்பதனால் அதிக காலம் வாழ முடிகிறது. இதனால் பெறப்படும் நீதியாதெனில் பலம் உள்ளதும், பயம் ஏற்படுத்தக் கூடியதுக்குமே மரியாதை. ■

## குட்டீஸ்





இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை ... 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 25, ... உள்ள ... அச்சகத்தில் ஜூன் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்